கந்தர்வன்

கவிதைகள்

கந்தர்வன் கவிதைகள்

பாரதி
புத்தகாலயம்

KANTHARVAN KAVITHAIKAL (in Tamil)

Kantharvan
First Edition: March, 2015

Published by

BHARATHI PUTHAKALYAM

7, Elango Salai, Teynampet, Chennai - 600 018
Email: thamizhbooks@gmail.com | www.thamizhbooks.com

கந்தர்வன் கவிதைகள்

கந்தர்வன்
முதல் பதிப்பு: மார்ச், 2015

வெளியீடு:

பாரதி புத்தகாலயம்

7, இளங்கோ சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018
தொலைபேசி : 044 24332424, 24356935 விற்பனை: 24332924

விற்பனை நிலையம்
7, இளங்கோ சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018

திருவல்லிக்கேணி: 48, தேரடி தெரு | **பெரம்பூர்:** 52, கூக்ஸ் ரோடு
வடபழனி: பேருந்து நிலையம் எதிரில் அடையார் ஆனந்தபவன் மாடியில்
ஈரோடு: 39, ஸ்டேட் பாங்க் சாலை | **திண்டுக்கல்:** பேருந்து நிலையம்
நாகை: 1, ஆரியபத்திரபிள்ளை தெரு | **திருப்பூர்:** 447, அவினாசி சாலை
திருவாரூர்: 35, நேதாஜி சாலை | **சேலம்:** பாலம் 35, அத்வைத ஆஸ்ரமம் சாலை,
சேலம்: 15, வித்யாலயா சாலை | **மயிலாடுதுறை:** ரசாக் டவர், 1/, கச்சேரி சாலை
அருப்புக்கோட்டை: 31, அகமுடையார் மகால் | **நெய்வேலி:** சி.ஐ.டி.யூ அலுவலகம்,
மதுரை: 37A, பெரியார் பேருந்து நிலையம் | **மதுரை:** சர்வோதயா மெயின்ரோடு,
குன்னூர்: N.K.N வணிகவளாகம் பெட்போர்ட் | **செங்கல்பட்டு:**1 டி., ஜி.எஸ்.டி சாலை
விழுப்புரம்: 26/1, பவானி தெரு | **திருநெல்வேலி:** 25A, ராஜேந்திரநகர்
விருதுநகர்: 131, கச்சேரி சாலை | **கும்பகோணம்:** ரயில் நிலையம் அருகில்
வேலூர்: S.P. Plaza 264, பேஸ் II , சத்துவாச்சாரி | பேருந்து நிலையம் அருகில்,
தஞ்சாவூர்: காந்திஜி வணிக வளாகம் காந்திஜி சாலை | **விருதாசலம்:** 511A, ஆலடி ரோடு
திருச்சி: வெண்மணி இல்லம், கரூர் புறவழிச்சாலை | **பழனி:** பேருந்து நிலையம்
தேனி: 12,பி, மீனாட்சி அம்மாள் சந்து, இடமால் தெரு
கோவை: 77, மசக்காளிபாளையம் ரோடு, பீளமேடு | **தி.மலை:** முத்தம்மாள் நகர்,
நாகர்கோவில்: கேவ் தெரு, டோத்தி பள்ளி ஜங்ஷன்
சிதம்பரம்: 22A/ 18B தேரடி கடைத் தெரு, கீழவீதி அருகில்
மன்னார்குடி: 12, மாரியம்மன் கோவில் நடுத்தெரு

நன்றி: சந்தியா பதிப்பகம்

ரூ.130/-
அச்சு : பிரிண்டெக், சென்னை - 5

முன்னீடாக...

1

அவரது முதல் கவிதைத் தொகுப்பான 'கிழிசல்கள்' நூல் வெளியீட்டு விழாவில், சிறப்புரையாற்றினேன். இப்போது, அவரது ஒட்டுமொத்தத் தொகுப்பிற்கும் முன்னுரை எழுதிக் கொண்டிருக்கிறேன். இரண்டும் தற்செயலானவை அல்ல. எனக்கும், அவருக்குமான எப்போதும், இப்போதும் அறுபடாத உறவின் அடையாளம் அது.

2

அன்னம் பதிப்பகத்தின் சார்பில், பேராசிரியர். மீராதான் அந்தத் தொகுப்பினை வெளியிட்டார். தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர்கள் சங்கத்தைச் சேர்ந்த ஒருவரது படைப்பை பேரா. மீரா வெளியிட்டது அதுவே முதல்முறை. கலை இலக்கியப் பெருமன்றத்துக்காரரான பேரா. மீரா அதனை வெளியிட்டது சிலருக்குப் பொறுக்கவில்லை. தங்கள் கோபத்தையும், வருத்தத்தையும் நேரிடையாகவே பேரா. மீராவிடம் சொல்லி இருக்கிறார்கள். ஆனால், பேரா. மீரா அதைப் பொருட்படுத்தாது, தொகுப்பை வெளியிட்டார்.

மானாமதுரையில், மேல்கரைப் பெருமாள் கோவிலுக்குப் பக்கத்தில் இருந்த ஒரு பள்ளிக்கூடத்தில்தான் வெளியீட்டு விழா நடந்தது. விழாவில், நீ தான் சிறப்புரையாற்ற வேண்டுமென்று கந்தர்வன் அழைத்தார். ஒப்புக் கொண்டேன். ஆனால், விழா நடந்த அன்று, ஒரு வேலைச் சுழலில் அகப்பட்டுக் கொண்டேன். தொலைபேசியில் அழைத்து 'விவரம்' எல்லாம் சொன்னேன். அமைதியாக; குறுக்கிடாமல் கேட்டுக் கொண்டார். சொல்லி முடிந்ததும், 'நீ சொல்றது எனக்குப் புரியுதுடா தம்பி... முதல்ல அந்த வேலையப்பாரு... நாம் பாத்துக்குறேன்... என்ன... நீ பேசுனா நல்ல இருக்கும்னு ஆசைப்பட்டேன்'. என்றார். கொஞ்சம் வாய்ப்புக் கிடைத்தாலும், புறப்பட்டு வந்து விடுவேன் என்றேன். 'தம்பி... வேணாம்.. ஒரு மனசா அந்த வேலையப் பாருங்க... வர வேண்டாம்' என்று அழுத்தமாகச் சொல்லிவிட்டார். மனிதர்களை அவர்களது சூழ்நிலையுடன், இணைத்துப் புரிந்து கொள்கிற பக்குவம் அவருக்கு இயல்பிலேயே இருந்தது. அவர் அப்படிச் சொன்னதும், எனக்குப் போயே தீர வேண்டுமென்று, வேகம் பிடித்தது.

எல்லாவற்றையும் உதறித் தள்ளி விட்டு, மானாமதுரை போனேன். என்னை பார்த்ததும், "தம்பி... வந்துட்டீங்க... வருவீங்கன்னு தெரியும்" என்றபடி நகர்ந்து போனார். வேறு எதுவும் பேசிக் கொள்ளவில்லை. விழா துவங்க இன்னும் நேரம் கிடந்தது. வாசலில் நின்று பேசிக் கொண்டு இருந்தோம். அந்த "சிலர்" பற்றி, அவர்களின் பெயர்களைக் குறிப்பிட்டு மீரா வருத்தப்பட்டுப் பேசிக்கொண்டிருந்தார். பதிப்பகத்தின் பரந்துபட்ட செயல்பாடு, சந்திக்கும் தடைகள், எதிர்கொள்ளும் சவால்கள் என்று விரிவாக பேசிக்கொண்டிருந்தார். எல்லோரும் அவர் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருந்தோம்.

விழா துவங்கி, புத்தகம் வெளியிட்ட பிறகு, நான் பேசத் துவங்கினேன். வேறு எதையும் குறிப்பிடாமல், "ஊசிகள்" மீரா "கிழிசல்கள்" தொகுப்பை வெளியிட்டதுதான் பொருத்தமானது; சரியானது' என்று பேச்சைத் துவங்கினேன். (ஊசிகள் என்ற தனது தொகுப்பை அதற்கு முன்பு மீரா வெளியிட்டு இருந்தார்) கந்தர்வனும், மீராவும் கைதட்டி ஆரவாரம் செய்து, தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தியதை என்னால் மறக்கவே இயலாது. அதிலும் மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் வழிமுறைகளை, கந்தர்வனைப் போல இந்த உலகத்தில் யாராலும் புதிதுபுதிதாகக் கண்டறிந்து விடவே முடியாது.

எதைப் பற்றியும், யாரைப் பற்றியும் கவலைப்படாமல் கூச்சலிடுவார், கொண்டாடுவார், கைதட்டுவார், உரக்கச்சிரிப்பார், தலை நிமிர்த்திப் பார்ப்பார், தலையைக் குனிந்து கொண்டு இடமும் வலமுமாகப் பலமுறை தலையசைப்பார், குலுங்கச் சிரிப்பார், கண்களில் கண்ணீர் பெருகச் சிரிப்பார், மேசையை அடிப்பார், தோள்களில் தட்டுவார், கைகளைப் பற்றுவார், கட்டியணைத்துக் கொள்வர், எதுவும் பேசாமல் கண்களுக்குள் பார்ப்பார், "சே" என்பார், 'அட' என்பார் "ஆஹா" என்பார்... அவரது சிவந்த முகம் மேலும் சிவக்கச் சிவக்க சந்தோசத்தைக் கொண்டாட்டமாக மட்டுமே வெளிப்படுத்துவார். அன்றைக்கு நிகழ்ச்சி முழுவதுமே அப்படித்தான் அமைந்தது.

எல்லோரும் புறப்பட்டோம். என் கைகளைப் பற்றித் தனியே அழைத்துப் போனார். 'நீ வரமுடியாதுன்னு சொன்னதும், 'பொசுக்குன்னு' போயிடுச்சுடா தம்பி... ஆனாலும் வந்துடுவேன்னு மனசு சொல்லிச்சு... உன்னப் பார்த்ததும், சந்தோசமா இருந்தது மாதிரி, இவ்வளவு பிரச்சனைலையும் வந்துருக்கியேன்னு வருத்தமாவும் இருக்கு... ஆனா வேற எவன் பேசி இருந்தாலும், இப்படிப் பேசிக் கொண்டாட முடியாதுடா " என்று இரண்டு கைகளையும் பற்றிக் கொண்டார். வழிச்செலவுக்குப் பணம் கொடுத்தார். " அண்ணாச்சி,

காசெல்லாம் வேண்டாம்" என்றதும், உறுதியாக மறுத்து "புத்தகம் வாங்கிக்க" என்று சொன்னார். வந்திருந்த எல்லோரிடமும் தனித் தனியே பேசி வழியனுப்பினார். அவர் யாருடன் பேசினாலும், பழகினாலும், இந்த உலகத்திலேயே அவர்களிடம் மட்டுமே அன்பு பாராட்டுகிறார் என்கிற உணர்வைத் தந்துவிடுவார். கபடமின்றி, களங்கமின்றி, ஒளித்து வைக்காமல் வெளிப்படுகிற அன்பிற்கு, அத்தகைய உணர்வைத் தோற்றுவிக்கும் ஆற்றல் எப்போதும் உண்டு. அந்த ஆற்றலின் அடையாளம் கந்தர்வன்.

3

தன்னை விட அறிவும், ஆற்றலும் உள்ள மனிதர்களைப் பார்த்ததும் நம்மில் சிலருக்கு வியப்பும், பலருக்குப் பொறாமையும் இயல்பாகவே தோன்றிவிடுகிறது. திறமையும், ஆற்றலும் உள்ள மனிதர்களைக் கண்டு விட்டால், அவர்களைக் கொண்டாட மறுக்கும் பலரை நான் அறிவேன். அந்தத் திறமையை, ஆற்றலை மறைக்கவும், ஒழிக்கவும் அவர்கள் செய்யும் கீழ்த்தரமான தந்திரங்களையும் நான் கண்டிருக்கிறேன். வாய் நிறைய அவதூறும், மனம் நிறையக் கள்ளமெளனமும் சுமந்து ஊர் ஊராகப் போய், ஆள் சேர்த்து, அவதூறுகளை இறைத்துக் கொண்டே போவார்கள். தன்னைத் தவிர மற்றவர்களுக்குப் புகழும், வெளிச்சமும் வருவதை அவர்களால் தாங்கவே முடியாது. ஆற்றல் மிக்க, அறிவு மிக்க மனிதர்கள் நடந்து போகும் பாதையெங்கும் மலத்தையும் கண்ணடித் துண்டுகளையும் தங்கள் கைகளாலேயே கலந்து போடுவார்கள். ஆனால், ஆற்றலும் அறிவும் மிக்கவர்கள், எதன்மீதும் நடந்து, கடந்து போய் விடுவார்கள் என்பதும், அவர்களைக் கையில் சுமந்து, அந்தப் பாதையைக் கடக்க கந்தர்வன் மாதிரி மனிதர்கள் எப்போதும் காத்திருப்பார்கள் என்பதும் அவர்களுக்குத் தெரியாது.

திறமையும், அறிவும், ஆற்றலும் உள்ள யாரைக் கண்டுவிட்டாலும், கந்தர்வன் அவர்களைக் கொண்டாடிக் கொண்டே இருப்பார். அவர்களைப் பற்றி ஆயிரம் பேருக்குச் சொல்லுவார். சலிக்காமல், வித விதமாய்ப் புகழ்ந்து கொண்டே இருப்பார். ஒரே நாளில், அவர்களுக்கு எல்லாப் புகழையும் வாங்கித் தர வேண்டுமென்று பேசுவார். அப்படிப் பலரை, அவர் கொண்டாடுவதை, அருகில் இருந்து பார்த்திருக்கிறேன். என்னை அவர் கொண்டாடியதைப் பலர் எனக்குச் சொல்லி இருக்கிறார்கள்.

ஒரு கலை இலக்கிய இரவில் பேசி முடித்து விட்டு, மேடைக்குப் பின்புறம் வந்தேன். முன்னால் இருந்து ஓடோடி வந்தார். என்னை ஆரத் தழுவி, முகத்தில் பெருகுகிற வியர்வையை வழித்துக் கைகளில் எடுத்து, லேசாகச் சுவைத்து "இனிக்குதுடா தம்பி" என்று சொன்னார்.

நான் திகைத்து, கண்களை மூடித் திறந்த போது, முன் வரிசைக்குப் போய் விட்டிருந்தார். அதே ஊரில், அடுத்த ஆண்டு கலை இரவுக்கு அவரால் வர இயலவில்லை. இரண்டு நாள் கழித்துக் கடிதம் வந்தது, "தம்பி... திரும்பிய பக்கமெல்லாம் உன் பேச்சுத் தான்... வந்திருந்தால், வியர்வை துடைத்திருப்பேன்" என்று எழுதி இருந்தார். இன்னும் பத்திரமாக என்னிடம் இருக்கிறது அந்தக் கடிதம்.

இதோ, இப்போதும் இந்த முன்னுரையை வியர்வை பொங்கத் தான் எழுதிக் கொண்டிருக்கிறேன். நிகழ்வுகளில், வியர்வை வழிய வழியத் தான் பேசிவிட்டு இறங்குகிறேன். துடைத்துவிடும், துடைத்து விடுவதாக எழுதும் கைகளைத் தான் காணவில்லை.

4

எங்கள் முதல் சந்திப்பு இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள மண்டபம் என்கிற ஊரில் தான் நடந்தது. இபோதைய செம்மலர் இதழின் ஆசிரியர் அன்பும், அருமையுமான தோழர். எஸ்.ஏ.பெருமாள் தான் எங்கள் இருவருக்குமான அறிமுகத்தைச் செய்து வைத்தார். முகம் மலர, என் கைகளைப் பிடித்துக் கொண்டு, "உங்களுக்கு என்னத் தெரியாது: எனக்கு உங்களத் தெரியும். நீங்க பிரபலம்" என்றார். நான் விழித்தேன்.

"நீங்க எங்ககிட்ட இருக்க வேண்டிய ஆளுன்னு, நான்தான் முதல்ல சொன்னேன்... நீங்க எங்ககிட்ட வந்துருவீங்கன்னும் சொன்னேன். தோழர்... இவர விட்டுறாதிங்க... எப்பிடியாவது புடிங்கன்னு நாந்தான் எஸ்.ஏ.பி. கிட்ட சொன்னேன்". நான் வியப்பாகப் பார்த்தேன்.

"தோழர்... எங்க ஊரு முத்தாலம்மன் கோவில் திடல்ல நீங்க பேசுனதை நாங்க கூட்டமா வந்து கேட்டோம்... அடேங்கப்பா... என்னா பேச்சு?... பேச்சா அது?..." என்று சப்தமாகச் சிரித்தார்.

பெருமிதத்துடன் எஸ்.ஏ.பியைப் பார்த்தார். "பேசின மாதிரியே புடிச்சிட்டு வந்துட்டீங்க எஸ்.ஏ.பி... எப்பிடிப் பிடிச்சீக?" என்று கேட்டு விட்டு, மீண்டும் சப்தமாகச் சிரித்துக் கொண்டார். எப்போதும் போல, உதடு பிரியாத ஒரு மர்மப் புன்னகையுடன் எஸ்.ஏ.பி. சொன்னார். "வந்தாச்சுல்ல... பத்திரமாப் பாத்துக்குங்க" என்றார்.

"ஆஹா" அதை விட வேற வேல... ஒப்படைச்சுட்டீங்கல்ல, நாங்க பாத்துக்குறோம்" என்று மீண்டும் கைகளைப் பற்றிக் கொண்டார். அந்தப் பற்றுதலை இறுதிவரை விடவேயில்லை. இந்த, "ஆஹா" என்கிற ஒற்றைச் சொல்லை அவர் உச்சரிக்கும் விதமும், தொனியும், பாங்கும் ஜீவரசம் ததும்பிக் கிடக்கும். அந்தச் சொல்லையே அவர் தான் கண்டுபிடித்தார் என்று நம்பத் தோன்றும்.

கொஞ்ச நாள்தான் 'தோழர்' என்று கூப்பிட்டுக் கொண்டிருந்தார். அப்புறம் 'தம்பி' தான். கடைசி வரைக்கும் 'தம்பி' தான். திருமதி. கந்தர்வனை "மதினி" என்றுதான் நான் எப்போதும் அழைத்தேன். வாங்க "கொழுந்தனாரே" என்று குறைவில்லாமல் இப்போதும் மதினி அழைக்கிறார்கள். பிள்ளைகள் இரண்டும், வாய்நிறைய எப்போதும் "சித்தப்பா" என்றுதான் கூப்பிடும். அரவணைத்துக் கொள்ள ஆயிரமாயிரம் கைகள் இருந்த மனிதன் கந்தர்வன்.

5

அவர் பார்த்த வேலையிலிருந்து, தற்காலிகப் பணிநீக்கம் செய்யப்பட்டிருந்த பத்தொன்பது மாதங்களும், ஏறக்குறைய அன்றாடம் சந்தித்திருக்கிறோம். அவர் அப்போது பரமக்குடியில் இருந்தார். நான் ராமநாதபுரத்தில் வேலை பார்த்தேன்.

"நேரங் கிடைக்கும் போதெல்லாம் போய்ப் பாக்கணும், முடிஞ்ச வரைக்கும் கூட இருக்கணும், நிறையப் பேசணும், பாதிக்கப்பட்டவங்க கூட இருக்குறதுதான் அவங்களுக்கான நம்பிக்கை... கஷ்டப்படுற காலத்துல கை விட்டுறக் கூடாது "என்று என்னைப் பார்க்கும் போதெல்லாம் எஸ்.ஏ.பி. சொல்லிக் கொண்டே இருப்பார். எங்களை எல்லாம் இணைத்த மையப் புள்ளி எஸ்.ஏ.பி. தான். அது தனி வரலாறு.

வேலை முடிந்து, வேக வேகமாக பரமக்குடி போவேன். முக்கால் மணி நேரப் பயணம். பரமக்குடி ரயில்வே ஸ்டேஷன் தான் எங்கள் சந்திப்பு மையம். சில நாட்களில் எஸ்.ஏ.பியும் வந்து இறங்கி விடுவார். அந்த நாட்களில் நான் மட்டுமின்றி, ஒரு பெரிய அறிவுலகப் பட்டாளமே அவரோடு இருந்தது. பேராசிரியர் தொ. பரமசிவன், ஷாஜஹான் கனி, கே.ஏ. குணசேகரன், ஜேம்ஸ் வாத்தியார், பறம்பைச் செல்வன் என்று பலரும் வந்து கூடிவிடுவார்கள். சந்திப்பு எப்போதும் மாலையில் துவங்கிவிடும். எப்போது முடியுமென்று சொல்லவே முடியாது. அதிகாலை ஆறு மணிவரை பேசிக் கொண்டிருந்ததுகூட உண்டு. அந்தப் பணிநீக்கம் செய்யப்பட்ட நாட்கள் பற்றி, 'பத்தொன்பது மாதங்கள்" என்றொரு கவிதை எழுதி இருக்கிறார்.

இன்னும் பலருக்குத் தெரியாது. அவர் பணியாற்றிய துறையில் இருந்த மூன்றாம்நிலை, நான்காம்நிலை ஊழியர்கள் தங்கள் கோரிக்கைகளை வலியுறுத்திப் போராடத் துவங்கி இருந்தனர். அதற்கு மேல்நிலையில் இருந்த, இரண்டாம் நிலை அதிகாரிகளின் துணைகொண்டு, அந்தப் போராட்டத்தை வீழ்த்த அரசு திட்டமிட்டது. போராட்டத்தை அடக்கும் ஆலோசனைகளையும், உத்தரவுகளையும் அரசு பிறப்பித்துக் கொண்டே இருந்தது. இரண்டாம்நிலை அதிகாரிகளாகப் பதவிஉயர்வு பெற்ற பலரும், மூன்றாம் நிலை ஊழியர்களாக இருந்து, பதவி உயர்வு பெற்றவர்கள்

தான். ஊழியர்களின் கோரிக்கைகளில் உள்ள நியாயங்கள் தெரிந்தும், அதிகாரத்திற்கு அஞ்சி, அதிகாரிகள் அரசுக்குத் துணை போனார்கள். ஆனால், அதிகாரியாக இருந்தும், ஊழியர்களின் போராட்டத்தில் பங்கேற்றார் கந்தர்வன். போராடிய ஊழியர்களைவிடவும், அவர்களை ஆதரித்த அதிகாரிகளின்மீது வெஞ்சினம் கொண்டது அரசு. அதிலும் எப்போதும் அதிகாரத்திற்கு அடிபணிய மறுத்துத் தன் மானுட இயல்பை வெளிப்படுத்திக் கொண்டே இருந்த கந்தர்வன் மீது தனிக் கோபம் கொண்டது அரசு. தற்காலிகப் பணிநீக்கம் செய்தது. பத்தொன்பது மாதங்கள். பத்தொன்பது மாதங்களுக்குப் பிறகு, பணியில் சேரச்சொல்லி உத்தரவு வந்தது. பணியில், காலையில் சேர்ந்தவரை, பிற்பகலில் மீண்டும் பணிநீக்கம் செய்து உத்தரவிட்டது அரசு. உறுதி குலையாது நின்றார் கந்தர்வன்.

இந்தத் தொகுப்பில் உள்ள அந்தக் கவிதையை, வாழ்வின் போராட்டக் கணங்களில் இருக்கும் எல்லோரும் படிக்க வேண்டும். வீட்டில், நீண்ட தேடலுக்குப் பிறகு கிடைத்த பத்து பைசாவில், பேனாவுக்கு மைநிரப்பி, அதிகாரத்திற்கு எதிராகப் போராட அழைக்கும் கவிஞனின் குரல் அது. இந்தத் தொகுப்பு முழுவதும் "அந்தப் பத்துப் பைசா" மையில் எழுதியதுதான்.

அந்த நீண்ட கவிதையில் ஓரிடத்தில் எழுதி இருப்பார்
"நான் கவலையோடு
வருவதறிந்தால்,
செடிகள் சிரித்துக் கொண்டு
வரவேற்புக் கொடுக்கும்.
விடிய விடிய என்னோடு
விவாதங்கள் நடத்தும்.
கவலைப் படாதே என்று
தைரியம் சொல்லும்"
அந்தச் செடிகளில் ஒன்றாக நானும் இருந்தேன்.

6

இந்தத் தொகுப்பில் உள்ள மிகப் பெரும்பாளான கவிதைகளை அவர் வாசிக்க நான் கேட்டிருக்கிறேன். அவரது வீட்டில், அலுவலகத்தில், கலைஇரவு மேடைகளில், எனது அலுவலகத்தில், ரயிலில், பேருந்தில், பெட்டிக்கடை வாசலில் என்று நாங்கள் பேசி வாழ்ந்த இடமெங்கும் கேட்டிருக்கிறேன். அவர் வாசிப்பது ஒருவகை இன்பம் என்றால், வாசிக்கக் கேட்பது பேரின்பம். ஏற்ற இறக்கங்களோடு, குரலில் உணர்வைக் குழைத்து, வாசிப்பின் வழியே கவிதையை உயிர் பெற்று எழச் செய்வார்.

அவர் சிறுகதைகளுக்குள் இருந்த இலக்கியச் செறிவை, அவரது கவிதைகள் பெற்றிருக்கவில்லை என்று ஒருமுறை சொன்னபோது, தயக்கமின்றி ஒப்புக்கொண்டார். "எனக்கு அது வேற; இது வேற... கவிதை நேரடியா களத்துல, ஜனங்களோட பேசுறதுக்கு... கோவிலுக்குப் போனா சிங்காரிச்சிட்டு போகலாம்... சண்டைக்குப் போகும்போது சிங்காரிச்சிட்டு இருக்கமுடியுமா..? என்று சொல்லி விட்டுப் பலமாக சிரித்துக்கொண்டார். ஆனால், அவர் விரும்பியிருந்தால், இன்னும் ஆழமான, அற்புதமான கவிதைகளை எழுதியிருக்க முடியும். அவரே வரைந்துகொண்ட ஒரு கோட்டிற்குள் தனது கவிதைகளை நிறுத்திக் கொண்டார் என்பது என் கணிப்பு. கவிதையைக் களமாடும் கருவியாக மட்டுமே வைத்துக் கொண்டார். மேடைகளில் அவர் கவிதை வாசிக்கும்போது பெரும் திரளான மக்கள் கைதட்டி ஆர்ப்பரிப்பதை அனைவரும் கண்டு ரசித்திருக்கிறோம். ஜனங்களைச் சிரிக்க வைத்து, சிலிர்க்க வைத்து, எழுச்சிகொள்ளச் செய்துவிடுவார். கவிதை எழுதுவதில் வெற்றி பெற்ற எல்லோராலும், கவி அரங்குகளில் வெற்றி பெற முடிந்ததில்லை. அது ஒரு தனித்துவமான நிகழ்கலை, நுட்பமான வித்தை. அந்த வித்தையில் அவர் எப்போதும் வெற்றியாளராகவே இருந்தார்.

அவரது ஒளிரும் நிறத்திற்கு, மேடை விளக்கின் ஒளியும், அவரது வியர்வையும் மின்ன, அவர் கவிதை வாசிப்பதை எல்லாம் ஒளிப்பதிவு செய்திருக்க வேண்டும். அதை ஒரு வீடியோப் புத்தகமாக வெளியிட்டிருக்க வேண்டும். நமக்கென்ன..?... எல்லா யோசனையும் "இருக்கிறபோது" வருவதில்லை. இல்லாது போன பிறகு இப்படிச் செய்திருக்கலாம், அப்படி நட்டிருக்கலாம், எப்படி பறித்திருக்கலாம், என்று பேசிக்கொண்டு இருப்போம். எல்லாக் கருவிகளும் வந்துவிட்ட காலத்தில் வாழ்ந்தவரை, அவரது எல்லாச் செயல்பாடுகளையும் பதிவு செய்யத் தவறினோம். பாதுக்காக்கத் தவறினோம்.

நமது இல்லாமைகளும், இயலாமைகளும் சேர்ந்து, குவித்துக்கொண்டே இருக்கும் குற்ற உணர்ச்சிகளின் மீதுதான் உட்கார்ந்துகொண்டு இருக்கிறோம். உன்னதமான கனவுகளும், இல்லாமையும் நடத்துகிற போரில், பல சமயங்களில் இல்லாமை வென்று விடுவதைத் தடுத்தாக வேண்டும். ஒரு நாவல் எழுத வேண்டும் என்று அவர் ஆசைப்பட்டும், எழுதாமலே போய்விட்டது மாதிரி நடக்கவே கூடாது.

7

மனதில் தோன்றும் நினைவுகளும், உணர்ச்சிகளும் ஒரு முழுப் புத்தகம் எழுதுகிற அளவுக்கு பெருகிக்கொண்டே இருக்கிறது. கைகளைக் கட்டுப்படுத்தவே முடியவில்லை.

8

இந்த முன்னுரையை எழுதுவதற்கு முன் ஒரு சிறு தகவலை உறுதிப்படுத்திக்கொள்ள திருமதி கந்தர்வனுக்குப் போன் செய்தேன். நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு அவருடன் பேசுகிறேன். “வணக்கம்“ என்று மட்டும்தான் சொன்னேன் “என்னப்பா கொழுந்தனாரே எப்படி இருக்கீங்க..?“ என்று கேட்டார். “மதினி... எப்படி கண்டுபுடிச்சிங்க..?“ என்றேன். “...நீங்கெல்லாம் கூடப் பொறந்தவங்க மாதிரி... கூடப் பொறந்தவங்க எல்லாம் நமக்குப் பொறந்தவங்க“ என்றார்.

9

“தம்பி” என்றுதான் அண்ணாச்சி எப்போதும் கூப்பிடுவார். “கூடப்பொறந்தவங்க, நமக்கு பொறந்தவங்க மாதிரி” என்பதாகத் தான் நானும் அவரும் இருந்தோம், வாழ்ந்தோம்.

10

சந்தித்த தருணங்களில் எல்லாம் பேசிக்கொண்டே இருந்தோம். உரையாடல் இன்றி ஒரு நிமிடம்கூடக் கழித்ததில்லை. பேசாத பொருளே இல்லை என்பது மாதிரி, எல்லாவற்றைப் பற்றியும் அறிவு பெருக, மனம் மலரப் பேசிக்கொண்டு இருந்திருக்கிறோம். இவ்வளவு சீக்கிரமாக விடைபெற்றுப் போன அண்ணாச்சி, மரணத்தைப் பற்றி ஒருமுறை கூட பேசியதே இல்லை.

சென்னை. **பாரதி கிருஷ்ணகுமார்.**

16.03.2015.

கிழிசல்கள்

ஆரியபட்டா வானத்தைக் கிழித்தது
அணுகுண்டு சோதனை
பூமியைக் கிழித்தது

அரைக்கைச் சட்டைகள்
கிழிந்தது மட்டுமே
மனதில் நிற்கிறது

பிள்ளை வேண்டாமென்று
கருப்பையைக் கிழித்தார்கள்
உணவும் எதற்கென்று இனி
இரைப்பையையும் கிழிப்பார்கள்

எல்லாம் கிழிந்த
எங்கள் தேசத்தில்
வாய் கிழிவது மட்டும்
வகை வகையாயிருக்கும்.

புல் மரம்

புல் மரம் முளைக்கும்
பூமாலை பூக்கும்
வானம் இங்கு மட்டும்
வில்லாய் வளையும்
மணல் கயிறாய்த் திரியும்.

நதிநீர் முழுதையும்
பள்ளத் தாக்குகளில்
பன்னீராய் மாற்றிப்
பரவ விடுவோம்.

பல்புகளைக் கழற்றுங்கள்
பச்சை மரகதக் கற்களாலேயே
வீடுகளுக்கு விளக்கேற்றலாம்.

பால் மாடுகள் வேண்டாம்
பால் மரங்களையே
பயிர் செய்யலாம்
பட்டு மட்டுமே உடுத்துவதைக்
கட்டாயமாக்குவோம்.

மயனை வரவழைத்து
மாளிகைகள் கட்டுவோம்
பொறுங்கள்
இன்னொரு ஐந்தாண்டு திட்டம்
தயாராகிறது.

எட்டாக் கனிகள்

எங்கள் தோட்டத்தில்
ஏராளம் கனி மரங்கள்
இவைகளைக்
கன்றுகளாக நட்டதும் நாங்களே
இன்றுவரை
நீரூற்றி வருவதும் நாங்களே.

கனிமரங்கள் இப்போது
கருத்தரித்துக் காய்த்துக்
கனிகின்ற காலம்.

கொய்யா பழுத்தபோது
அணில்வந்து அக்கறையாய்க்
கடித்துப் புசிக்கும்.

மா கனிந்தபோது
காக்கை குடைந்து உறிஞ்சும்
மாதுளை கனிந்தபோது
கூகையும் கோட்டானும்
கொத்திக் குதறும்.

பப்பாளி பழுக்கையில்
விருந்துக்குப் பருந்து வரும்.

எங்கள் தோட்டத்தில்
ஏராளம் கனிமரங்கள்.

இவைகளைக்
கன்றுகளாக நட்டதும் நாங்களே
இன்றுவரை
நீரூற்றி வருவதும் நாங்களே
ஆனால்
ஒரு மரத்துக் கனியும்
நாங்கள் உண்ணும் கனியல்ல
எல்லாமே எங்களுக்கு
எட்டாக் கனிகள்.

எங்க ஊர்

எங்க ஊர்
வானம் பார்த்த பூமி
மீனுக்கலையும் கொக்குகளாய்
நாங்கள்
நீருக்கலையும் மனிதர்கள்
பள்ளிப் புத்தகத்தில்
நீரோடும் ஆறும்
கரையில்
வளைந்து செழித்த
மாமரமும் கண்டு
கனவு காண்பர்
எதிரே
வறண்ட கண்மாயும்
நெட்டையாய்ப் பனைமரங்களும்.

எங்கள் ஊர் வாலிபர்களுக்கு
எந்த ஊரிலும்
பெண் கொடுப்பதில்லை.
இடுப்பில் குடத்தோடு
தண்ணீர் தேடும்போதே
இளமை போய்விடுமாம்.

எங்கள் ஊர்க் கால்நடைகள்
குழந்தைவாய் வாணியையும்
நக்கிக் குடித்துவிடும்.

நாங்கள் மழைக்காகத்
தவமியற்றுகிறோம்
இல்லாததால் உண்ணாமலும்
உண்ணாததால் உறங்காமலும்
நாங்கள் மழைக்காகத்
தவமியற்றுகிறோம்.

எங்கள் ஊர் ஆட்கள்
காலைக் கடன்களை
மதியம் வரை முடிப்பதில்லை
சீக்கிரம் முடிந்தால்

சீக்கிரம் பசிக்கும்
காலையிலேயே பசி
ஆடம்பரமன்றோ.

எங்கள் ஊரில் நெல்லுச்சோறு
இந்தியாவில்
தாஜ்மகாலைப்போல
எங்கள் ஊர் ஆட்கள்
ரொம்பக் கடுசு
நாங்கள் தபால் தலைகளையும்
பேரம் பேசியே
வாங்கப் பார்ப்போம்.

சூரியன் அஸ்தமனமாகும் போதே
நாங்கள் இரவு உணவிற்காய்ப்
பீங்கான் தட்டுகளைக்
கழுவுகிறோம்
ஜைன மதத்தை வழிபட்டல்ல
விளக்கெரிக்க
எண்ணையில்லாததால்.

எங்கள் குடிசைகளுக்குள்
வட்டம் வட்டமாய்
வெளிச்சத் திட்டுகள்
ஆகாயத்து ஆண்டவன்
எங்கள் நிலைகளை அறிய
பகலிலேயே ஓட்டைக் கூரைகளில்
டார்ச்சடித்துப் பார்க்கிறான்.
கையாலாகாதவன்
கண்ணால் மட்டும்
பார்ப்பதைப் போல

இப்போது
எங்கள் வாலிபர்கள்
ஊர் நடுவே
ரத்தச் சிவப்பாய்
ஒரு கொடி ஏற்றி இருக்கிறார்கள்
அதன் கீழ்
விவாதங்கள் நடக்கின்றன
என்ன ஆகும் பார்க்கலாம்.

வளையல் விலங்குகள்

அம்மா என்றும்
தாய்க்குலம் என்றும்
உங்களை விளிக்கும்
எல்லாப் புனிதச் சொற்களுக்கும்
ஒரு அர்த்தம் உண்டு
அதுதான் அடிமை என்பது

நாளும் கிழமையும்
நலிந்தோர்கில்லை
ஞாயிற்றுக் கிழமையும்
பெண்களுக்கில்லை.

சுகத்தை ஆணுக்கும்
சோகத்தைப் பெண்ணுக்குமாய்ப்
பங்கு பிரித்திருந்தார்கள்
அபலை என்பதற்கு
ஆண்பாற் சொல்லில்லை.

ஆடவும் பாடவும்
கேளிக்கைக்காகவே
நீங்கள் மேடைக்கு
வந்தீர்கள்
இப்போதுதான்
கோரிக்கைக்காக
வந்திருக்கிறீர்கள்.

ஆண்களின் உலகத்தை
அனைவரின் உலகாக்குவது
அவ்வளவு சுலபமல்ல
உங்களைப் புகழ்ந்த
ஒவ்வொரு சொல்லும்
உள்நோக்கமுடையதே
உங்களை
மான்களென்றும் மயில்களென்றும்
அழைத்ததெல்லாம்
பிராணிகளை
அப்பிராணிகளை

மனதிற் கொண்டுதான்.
அடிக்கடி தேய்வதாலேயே
உங்களை நிலவென்றார்கள்
எந்தத் துயரையும் நீங்கள்
ஆற்றிக் கொள்ள
வேண்டுமென்றுதான்
'ஆறு' என்றார்கள்
சளைக்காமல் வேலை செய்ய
வேண்டும் என்றுதான்
சக்தி என்றார்கள்.

சுதந்திர இந்தியாவில்
மற்றவர்கள்
விலங்கோடு வாழ்ந்தாலும்
வெளியிலேயும் வாழலாம்
நீங்களோ
விலங்குகளோடு
சிறைகளிலும்
வாழ்கிறீர்கள்
ஒரு புதிய வீடு
கட்டி முடிக்கையில்
ஒரு பெண்ணுக்குப்
புதிய சிறை
தயாராகிறது.

விலங்குகள்
ஆபரணங்களாகுமா?
ஆகும்
வளையல்கள் கைகளுக்கும்
கொலுசுகள் கால்களுக்கும்
விலங்குகளே.
உலகளாவிய பிராணவாயு
உங்களுக்கு மட்டும்
ஜன்னல் இடுக்குகளில்தான்
கிடைக்கிறது.
நீங்கள் சிரித்தால்
முத்துதிரும் என்றவர்கள்
அழுதால் என்ன உதிரும் என்று
சொல்ல மறந்தார்கள்.

ஆண்பிறந்தால்
அட்சய பாத்திரம்
பெண் பிறந்தால்
பிச்சைப் பாத்திரம்
ஆண்டவனுக்காய் ஆங்காங்கே
கன்னிகாஸ்திரீ மடங்கள்
எங்கள் தேசம் முழுவதும்
பரவி இருந்தன
இப்போது
வரதட்சணைச் சைத்தானுக்காய்
எங்கள் தேசம் முழுதுமே
ஒரு கன்னிகாஸ்திரீ
மடமாய் மாறிவருகிறது.

உலகப் பெண்கள் அனைவருக்கும்
ஒரு சக்களத்தி வந்தாள்
சொத்துரிமை
அதிகாரத்திற்கு வந்தது
பெண்ணுரிமை
காராக்கிரகம் போனது

திருமணங்கள்
சொர்க்கத்தில்
நிச்சயிக்கப்படுவதெல்லாம்
பழைய கதை.
திருமணங்கள்
வரதட்சணையாலேயே
நிர்ணயிக்கப்படுகின்றன
இது புதிய கதை
வாங்கிய வரதட்சணையின்
வட்டிப்பணத்தில்தான்
வாழக்கைப்பட்ட பெண்ணுக்கு
உணவும் உடையும்
உவந்தளிக்கப்படுகிறது.

நகைகளை அடகு வைக்க
வேண்டாத காலமே
பெண்கள்
கற்பை அடகு வைக்க
வேண்டாத நாட்கள்.

உண்டி சுருங்குதல்
பெண்டிற்கு மட்டுந்தான் அழகு
உங்கள் உணவைக் குறைத்தது
பொருளாதார வக்கிரம்
உடையைக் கறைத்ததது
கலாச்சார வக்கிரம்.

நீங்கள் அடுப்பங்கரையில் நின்று
அரிசியை வேக வைப்பீர்கள்
பருப்பை வேக வைப்பீர்கள்
உங்களையே வேக வைப்பதும் உண்டு
ஆம்
வெண்மணியில் வெந்ததில்
பெண்மணிகளே அதிகம்.

வாக்குறுதிப்படி
வரதட்சணை வரத்
தாமதமானால்
ஸடவ்வுகளுக்குக் கோபம் வரும்
கோபத்தில் வெடிக்கும்
வெடித்தால் அந்த வீட்டுப்
புதிய மருமகள் மட்டும்
வெந்து தணிவாள்

இந்தத் தேசத்தின்
சகல சோகத்தையும்
ஒரு வடிவாக்க நினைத்தபோது
அது பாரதமாதா என்றொரு
பெண்ணுருவாகியது.
அவள் வயது
அறிவிற்கப்பாற்பட்டது
அவள் தலையே இமயமலை
வெள்ளை வெளேரென்ற
இமய பர்வதம்
அவள் மூத்த வயதை உணர்த்தும்
டில்லிக்கருகில் அவள் கண்கள்
ஆயிரமாயிரம் ஆண்டுகளாய்
அவள் அழுது வந்த கண்ணீர்
உடல் முழுதும்

உருண்டோடி
மூன்று சமுத்திரங்களாயின
குமரி முனையில்
கண்ணீர் சமுத்திரங்களில்
இன்னுங்கூட அவள்
அழுதுகொண்டுதானிருக்கிறாள்.

பாக்பத்திலும்
பாளையங்கோட்டையிலும்
அவளை அவிழ்த்தார்கள்
ஜபல்பூரிலும்
சங்கனாங் குளத்திலும்
அவளைக் கிழித்தார்கள்.
தேசம் இப்போது மாசமாயிருக்கிறது
புரட்சி சூல் கொண்டு
அது மாசமாயிருக்கிறது

முன்பொரு முறை
முப்பத்து நான்காண்டிற்கு முன்னால்
சூலாயிருந்து
ஒரு சோனியைப் பெற்றது
எல்லா வீரியத்தோடும்
எங்கள் தாய் ஒரு
புரட்சிக் குழந்தையைப்
பெறப்போகிறாள்

புரட்சி என்பது
பிள்ளை பிடிப்பது போல்
கொடுமையல்ல
பிள்ளை பெறுவது போல்
புனிதமானது.

கூலி உயர்வுப் போர்கள்

புறாக்களும் குயில்களும்
வயல்களில் இரைதேடி
அலையும்போது
பருந்துகள் வானில்
உற்சாகமாய்ப் பறக்கின்றன

குடைகள்

வெண் கொற்றக் குடைநிழலில்
ரோஜாச் செடிகள்
வெயிலுக்குத் தவமிருக்க
மானிடப் பயிர்கள்
மழையில் நனைந்து
ஒரு கறுப்புக் குடை வேண்டிக்
கனவு காண்கின்றன.

வர்க்கச் சண்டை

பழைய சோறும்
பாதாம் கீரும்
ஒரு வயிற்றுணவாய்
ஒருநாளும் ஆவதில்லை
அப்படியே போனாலும்
வர்க்கச் சண்டை
வயிற்றுள்ளும் நடக்கும்

தண்ணீர்! தண்ணீர்!

அதிக மகசூலுக்கு
ஐ.ஆர்.எட்டைப்
பயிரிடுங்கள்
தண்ணீரில்லை!
தண்ணீரில்லை!
அதனாலென்ன
அதிக மகசூலுக்கு
ஐ.ஆர்.எட்டையே
பயிரிடுங்கள்.

இன்புற்றிருக்க......

இதுவரை நாங்கள்
எல்லாச் சாமிகளும்
இன்புற்றிருக்க
நினைத்தோமேயல்லாமல்
வேறொன்றறியோம்
இப்போதுதான்
எல்லா ஆசாமிகளும்
இன்புற்றிருக்க நினைக்கிறோம்
அதனால்தான்
மானுடம் பாடவந்தோம்
மானுடம் பாடவந்தோம்

முன்னும் பின்னும்

சுதந்திரத்திற்கு முன்னல்
சுதந்திரம் என் பிறப்புரிமை
சுதந்திரத்திற்குப் பின்னால்
சுரண்டல் என் பிறப்புரிமை.

காண்ட்ராக்ட்டில் கை கால்கள்

தேச அன்னைக்குச்
சுதந்திரப் பிரசவம் பார்த்தவர்கள்
ஒரு வளர்ந்த கட்டியையே
பிள்ளையென்று கூறிப்
பிரகடனப்படுத்தினார்கள்
மக்களோ
கைகாலுள்ள
பிள்ளையொன்று கோரி
வரங்கேட்டு வந்தார்கள்
கைகாலெல்லாம் ஒட்ட வைத்து
நாங்கள் அந்தக் கட்டியைப்
பிள்ளையாக்கிக் காட்டுகிறோம்
பாருங்கள் என்றவர்கள்
ஆவடிப் பக்கம்
ஆடம்பரமாய்க் கூடி
கைகால்கள் செய்யும்படி
எல்லாக் கம்பெனி
முதலாளிகளுக்கும்
காணட்ராக்ட் கொடுத்தார்கள்.

பேய் மழை

வானமே!
உன் பூமிக் காதலிக்கு
நீ எழுதி அனுப்பிய
இன்பக் கடிதங்களின்
வாசகங்கள் இம்முறை
எவ்வளவு மூர்க்கமாய்
எவ்வளவு மூர்க்கமாய்!

வானமே!
உன் உடம்பு உருக்குலையும்
மிக போகத்தால்
எவ்வளவு நீரைக்
கரைத்து விட்டாய்.

மழையே!
இம்முறை நீ
தொடுத்த சரங்களில்
மல்லியும் இல்லை
முல்லையும் இல்லை
யானை வெடியும்
குதிரை வெடியும்
உன் சரங்களாயின.

மழையே!
உன் வரவிற்காக
நாங்கள் வரங்கேட்டு
நின்றபோது
நீயேன் பட்டாக்கத்தியோடு
தரிசனம் தந்தாய்.

மழையே!
வானத்திலிருந்து நீ
ஊஞ்சலில்தானே
வருவது வழக்கம்
இம்முறை ஏன்
ராக்கெட்டில் இறங்கி
எங்கள் முதுகில் விழுந்தாய்.

நதியே!
நீ நீரோடை
போர்த்திய திமிரில்
எங்கள்
பருத்தி ஆடைகளையும்
எடுத்துக் கொண்டு
நிர்வாணப்படுத்திவிட்டாய்.

கொண்டாட்டம்

ஐ.நா.சபையே!
ஐ.நா.சபையே!
இனிவரும் ஆண்டுகளை
ஏதாவதொரு ஆண்டாய்க்
கொண்டாடச் சொல்லி
ஆணையிடுவதை
இத்துடன் நிறுத்து.
இந்த ஆண்டை
ஊனமுற்றோர் ஆண்டாக்கி
நீ உத்தரவிட்டதால்
ஊனமேயில்லாமலும்
வேலையேயில்லாமலும் இருந்த
இந்நாட்டு இளைஞனொருவன்
இரண்டு கரங்களையும்
ரயிலுக்கு இரையாக்கி
ஊனமுற்றுப் போய்க்
கொண்டாடி விட்டான்.

பைத்தியம்

பூமி ஒரு பைத்தியம்
தன்னைத் தானே
சுற்றிக் கொள்கிறது.

கிருமி நாசினிகள்

சிறையிலடைக்கப்பட்ட
எங்கள் தோழர்களே!
நீங்கள்
இந்தத் தேசத்தைச்
சுத்த படுத்தவென்று
பெட்டியிலடைபட்ட
கிருமி நாசினிகள்.

சின்ன சட்டமோ பெரிய சட்டமோ

நாங்கள் கூலி விவசாயிகள்
பட்டாதார்களின் பாதுகைகள்
பூமியை மிதித்துத் துவைக்கையில்
நாங்கள்தான்
சேற்றுச் சந்தனத்தை
இதமாய்ப் பதிக்கிறோம்.
மண்வெட்டியால்
வரப்போரங்களில்
சிகையலங்காரம்
சிறப்பாய் செய்கிறோம்.

நாங்கள் நாற்றுநட்டு
பூமிக்குச் சட்டை
போடுகிறோம்
ஆனால் பூமி என்னவோ
வரப்பில் குடையோடு நின்று
விரட்டும் ஆளுக்கே
விசுவாசமாயிருக்கிறது
அறுவடையான தானியங்கள்
அவர்களின் களஞ்சியங்களை நிறைக்க
எங்களின் கஞ்சிக் கலயங்கள்
காலியாகவேயிருக்கின்றன.
வறுமையே போ என்று
எத்தனைமுறை கோஷமிட்டாலும்
கலயங்கள் நிரம்ப மறுக்கின்றன.

வத்தலக்குண்டில்
சம்பா விசேஷம்
கோயமுத்தூரில்
பீர்க்கு விசேஷம்
வெங்கட்டங் குறிச்சியில்
கத்திரிக்காய் விசேஷம்
இந்த ஊர்கள் எதிலும்
இவைகளை விளைவித்த
நாங்கள் விசேஷமாயில்லை.

எங்களின் ஒடிந்த இடுப்புகளைப்
புரட்டிக் கொள்ள
ஒரு குச்சில் இருந்தால்தானே
மறுநாள் வேலைக்கு
மக்கள் கிடைப்பார்கள்.
எனவேதான் எங்களுக்கு
நிலப்பட்டாக்களை விடவும்
மனைப் பட்டாக்களே
வழங்கப்படுகின்றன.

கூலி உயர்வுக்கு
எப்போதெல்லாம்
குரல் கொடுப்போமோ
அப்போதெல்லாம்
இந்தப்
பட்டாமனைக் குச்சில்கள்
தட்டாமாலை யாடும்
தகனமும் நடக்கும்.

நிலத்தை ஆளவும்
எங்களை அடக்கவுமென்றே
அவர்கள்
வாரிசுகளைப் பெற்றுப்
போடுகிறார்கள்.

தேசப்பிதாவின் கையிலிருந்த
மூங்கிற் கழியை
ஆள்வோர் பறித்து
பாதியை முறித்து
லத்திக்காக
வைத்துக் கொண்டார்கள்

இன்னொரு பாதியை
நிலச்சுவான்கள்
எங்கள் முதுகுகளுக்காகவே
எடுத்துக் கொண்டார்கள்.
எங்கள் எஜமானர்களின்
கறவை மாடுகளுக்கு
நாங்களே
பச்சுப் பச்சென்று
புல்லறுத்துப் போடுவோம்
எங்கள் குடிசைகளிலோ
சும்மா கிடைப்பதால்
அம்மா பாலை
ஆரம்பத்தில் குடிப்போம்

சொர்க்கம் போவதற்கு
ஒரு சொட்டுப் பாலைக்
கடைவாயில் ஊற்றுவோம்
நடுவில்
விரக்தி அடைந்த சிலர்
கள்ளிப்பாலைப் பருகுவதுமுண்டு
இவைகளுக்கப்பால்
குவளைகளில் ஊற்றி
எந்தப்பாலையும்
குடித்த அனுபவம்
எங்களுக்கில்லை.

பத்து மணி நேரம்
சேற்றில் உளைந்தாலும்
விக்ஸ் டப்பா ஏதும்
எங்கள் வீடுகளில் இல்லை.

ஒவ்வொரு உழவிலும்
மேடு பள்ளங்களைச் சரி செய்ய
நாங்கள் ஒரு
நீண்ட சட்டத்தால்
பரம்படிக்கின்றோம்
தேசம் முழுதுமுள்ள
மேடு பள்ளங்களை
நீண்ட சட்டமோ
சின்ன சட்டமோ
போட்டு சீக்கிரமாகவே
சரிப்படுத்துங்கள்.

இனியொரு விதி செய்வோம்

சிலைவடித்த சிற்பி
இரண்டு கண்களையும்
இறைவனுக்குத் திறந்து வைத்துச்
செதுக்கிப் போனான்.
அநியாயங்களை
ஆண்டவனின் திறந்த கண்கள்
ஆராயத் துவங்கின.
பணக்காரர்கள்
பதறிப்போய்
பொன்னாலும் வெள்ளியாலும்
இறைவனின் இமைகளை
இறுக்க மூடினார்கள்.
ஆண்டவன் கண்களுக்கு
அநியாயங்கள் தெரியவில்லை.

அவன் காதுகளாவது
இயங்குவதறிந்து
தங்கள் வேசாடுகளை
மக்கள் பூசாரிகள் மூலம்
அறிவிக்கக் கேட்டார்கள்
பூக்களோடு சென்ற பூசாரிகள்
மக்களின் வேதனைகளை
வேத ஸ்லோகங்களாக்கி
விவரித்துச் செல்கையில்
அது
இறைவனுக்கும் புரியாத
இலக்கியங்கள் ஆயின.
அவன் புரிந்து கொள்ளப்
போராடிய போதுகளில்
காணிக்கைகளாய்க்
கட்டித் தொங்கிய
காண்டா மணிகள் வேறு
அவன் செவிப்பறைகளைச்
செவிடாக்கி விட்டன

அவன் உடம்பை உலுக்கி
ஒரு முறை எழுந்து
நடக்க நினைக்கையில்
பூசாரிகள் வீசிய பூக்கள்
ஓயாமல் விழுந்து விழுந்து
உடல் முழுதும்
மரத்துப் போய்விட்டதை
மனதிலே கொண்டான்.

தவிரவும்
கழுத்து நிறைந்த
ஆரஞ்சு மாலைகளாலும்
சிரத்தையும் சேர்த்து மறைத்த
எலுமிச்சை மாலைகளாலும்
உடலைத் தூக்கி
ஒரு அடி நடக்கவும்
அவனுக்கு ஏலவில்லை.

இன்னும்
முல்லையும் மல்லிகையும்
சந்தனமும் ஜவ்வாதும்
கற்பூரமும் கஸ்தூரியும் தந்த
வாசனை சுகத்தில் வேறு
அவன் வசமிழந்து கிடந்தான்.
பசிவந்த போதெல்லாம்
அவன் கரங்களை நீட்டிய இடத்திற்கு
நெய்வேத்தியங்கள்
வகைவகையாய் வந்து
வாழை இலைகளில்
வைக்கப்பட்டிருந்தன.
அவன் குளிப்பதற்குப் பாலும்
குடிப்பதற்குப் பன்னீரும்
எப்போதும் இருந்தன.

கர்ப்பக்கிரகங்களில் மட்டும்
காலங்காலமாய்ப்
பாலாறும் பன்னீராறும்
ஓடிய வண்ணமிருந்தன.
சமூக சேவைக்காக
பூலோகம் வந்தவன்
சுகவாசியாகி
நீட்டி நிமிர்ந்துவிட்டான்.

உள்ளே இருப்பதாலேயே
உலகக் கஷ்டங்கள்
அவனுக்கு
உறைக்கவில்லை யென்றும்
அவனை உற்சவ மூர்த்தியாக்கி
வீதிகளில் பவனிவர
ஏற்பாடு செய்தார்கள்.

பல்லக்கும் பரிவாரமுமாய்
தேரும் திருவடமுமாய்
மக்கள் இவனை ஓடிவந்து
அழைத்தார்கள்.

அவன்
வீதி உலாவிற்கு
வெளியே செல்கையில்
அவனுக்கு முன்னால்
ஐந்தடி தூரத்தில்
நாதஸ்வரமொன்று
மோன மிசைக்கையில்
இவன் ராகபோதையில்
மூர்ச்சையாகி விடுகிறான்.
எப்போதெல்லாம் அவன்
எழுந்து பார்ப்பானோ
அப்போதெல்லாம்
ஒரு தாம்பாளம் நிறையத்
தேங்காயும் பழமும்
காலடிக்கு வருவதைக்
கடைக் கண்ணில் பார்த்துவிட்டு
மீண்டும் கிறங்கி உறங்கி
அவன் உலாவைத் தொடர்ந்தான்.

இப்படி
கோரிக்கைகளோடு
கோவில் வாயில்களுக்குப்
போன மக்கள்
என்ன செய்தும்

அவனை எழுப்ப முடியாமற்போய்
ஊனமுற்றோர் ஆண்டில்
இறைவனுக்கும் ஒரு
சலுகை கேட்கும்
இன்னொரு கோரிக்கையோடு
விதியை நொந்துகொண்டு
வேறிடம் நோக்கினார்கள்.
அவர்கள் கோவில் வாயில்களை விட்டுக்
கோட்டை வாயில்களுக்குப்
புறப்பட்டார்கள்.

கோட்டை வாயிலில்
ஒரு கொடி பறந்தது.
நாலு வர்ணங் கொண்ட நாடு
ஒன்றைக் குறைத்து
மூவர்ணமாய்
முற்போக்கிற்கு வந்திருந்தது.
நடுவில் ஒரு தர்மச் சக்கரம்
அதன் ஆரங்கள்
கறுப்புக் கோடுகளாய்க்
கண்களில் தெரிந்தன.
தர்மச் சக்கரம்
கறுப்பு உடை பூண்டு
நாட்டு நடப்புபற்றி
ஏதோ கருத்துத் தெரிவித்தது.
வெகு நேரம் காத்திருந்தும்
இவர்களை
விசாரிக்க நாதியில்லை
வரி கொடுத்த ஜனங்களுக்கு
தரிசனமே கிட்டவில்லை.

ஆனால்
வாழ்வை வளமாக்க
வான் முட்டும் எண்ணிக்கையில்
ஒலித்தன மண்டபத்தில்
ஒவ்வொரு அறிவிப்பும்
ஆஸ்தானக் கவிஞர்

ஆஸ்தானப் பாடகர்
ஆஸ்தான நர்த்தகி
யார் யாரென்ற
பட்டியல்
வந்துக் கொண்டேயிருந்தது.

ஆஸ்தான ஜால்ராக்கள்
யாரென்று
அருகே நின்ற அதிகாரியிடம்
ஆவலோடு கேட்டார்கள்
நீங்கள் நானென்ற பதில்
நிச்சலனமாய் வந்தது.
வாடிய வயிறுகளை
வருடின பட்டியல்கள்.

சிறிது நேரத்தில்
மண்டபத்துள்ளிருந்து
சீழ்க்கை ஓசையோடு
டேப்படிக்கும் இசையும்
சேர்ந்து ஒலித்தது.

எட்டிப் பார்த்தார்கள்.

எரிந்த கட்சிகளும்
எரியாத கட்சிகளும்
எதிரெதிராய்ப் பாடின.

என்ன பொருள் பற்றி
என்று உற்றுக் கேட்டனர்
எரிந்த சாராயம்
எரியாத சாராயம்
என்று திரும்பத் திரும்ப
ஒலித்தன
எரிசாராயம் என்று
மக்கள் புரிந்து கொண்டார்கள்.

சாராயம் பற்றிய
சங்கீதம் தொடர்ந்தபோது

ஓங்கி ஒரு குரல்
தமிழ் என்று கேட்டது
அப்படியே நிசப்தம்.....
மண்டபத்து மனிதர்கள்
மலர்ந்த வாய்
மலர்ந்தபடி
மருகி உருகி நின்று
பிரார்த்தனையில் ஈடுபட்டனர்.
பிராண வாயு கூட வேண்டாம்
எங்களுக்குத் தமிழ்தான்
வேண்டும் என்று
உரத்துச் சொன்னார் ஒருவர்.

பிரார்த்தனை முடிந்ததும்
விவாதம் துவங்கியது
தமிழ் என்று குரல்
கொடுத்தது சரிதான்
ஆனால் அது
திருவாரூர்த் தமிழா
திருவனந்தபுரீத் தமிழா
என்பதை ஆராய
வேண்டாமா என
அடுத்தொருவர் சொன்னார்
திருவாரூர் அசலா
திருவனந்தபுரம் அசலா என்பது
அடுத்த விவாதமாய்
அகப்பட்டுக் கொண்டது.

பசிக் கிறக்கத்தில்
பரிதவித்த மக்கள்
ஆள்வோரை அணுகிக்
கோரிக்கை மனுவைக்
கூட்டாகக் கொடுத்தார்கள்.
ஆள்வோரில் ஒருவர்
அருகே நின்று கொண்டு
கோரிக்கைச் சொற்களின்
பகுதிவிகுதிகளைப்
பதமாய் ஆய்ந்துவிட்டு

மக்களிடம் சொன்னார்
நீங்கள் வெளியே
செல்கையில்
அதிகாரிகள் வந்து
உங்களிடம் ஒரு
வேண்டுகோள் விடுப்பார்கள்
அதைச் செய்து விடுங்கள்
இதெல்லாம்
தானே நடக்கும் என்றார்.

வெளியே வருகையில்
அதிகாரிகள் ஓடிவந்து
எல்லார் மடிகளையும்
இகழ்ச்சிகளாய் அவிழ்த்தார்கள்.
என்ன சேதி என்று மக்கள்
ஆவலாய்க் கேட்டார்கள்.
தமிழன்னைக்குத் திருவிழா
பதினாலு கோடி வேண்டும்
எடுங்கள் மடியிலிருந்து
என்றார்.
பெற்ற அன்னைக்கு
ஒரு கோடி எடுக்க ஏலவில்லை
தமிழன்னைக்குப்
பதினாலு கோடியா
என்று வியந்து வழங்கினார்கள்.

உடனே அதிகாரி
தட்டுகளில் தயாராயிருந்த
பூக்களை எடுத்து
மக்கள் காதுகளில்
சுற்றி விட்டார்.
அப்படி ஒரு பூவை
அவர்கள் அதுவரை
பார்த்ததில்லை.
என்ன பூ இது என்றார்கள்
தமிழ்ப்பூ என்று
பதில் வந்தது

அருகே ஒரு பலகையில்
ஏழையின் சிரிப்பில்
இறைவனைக் காண்போம்
என்றிருந்தது.

மக்கள் ஓடிப்போய்
அருகிலேயே
தமிழன்னையின் சிரிப்பில்
ஏழைகளைக் காண்போம்
என்று எழுதி வைத்து
செயின்ட் ஜார்ஜ் கோட்டையை விட்டு
செங்கோட்டைக்குப்
பயணப்பட்டார்கள்.

பாராளுமன்றத்தின்
பக்கத்தில் நடக்கையில்
இவர்களை வேற்றாட்கள் போல
வெறித்துப் பார்த்தன
உள்ளேயிருந்த
சில உருவங்கள்.
காய்ந்த வயிறுகளின்
மேலமைந்த
கனத்த சிங்காதனங்களில்
அந்த உருவங்கள்
ஒய்யாரமாக உட்கார்ந்திருந்தன.

சிங்காதனப் பெரியோர்கள்
சில நிமிடத்திற்கொருமுறை
பந்தாடி மகிழ்ந்தார்கள்.
உற்றுப் பார்க்கையில்
பந்துகளாக
நீதி நூற்களே
பறந்தது தெரிந்தது.

சாதா ஆசனத்தில்
அமர்ந்திருந்த ஆளொருவர்

எல்லைப் பிரச்சினையை
எப்போது பேசலாம்
என அப்பாவித்தனமாய்க்
கேட்டு வைத்தார்.

உடனே
சிங்காதனங்கள் சீறின
எல்லையிலுள்ள எதையும்
கொடுக்கலாம்
எவரெஸ்டை மட்டும்
கொடுக்கவே முடியாது
நாங்கள் ஏற்றிவரும்
விலைவாசி ஏறிவர
எமக்குச் சிகரங்கள்
வேண்டாமா என்றன.

நாங்களும் நிற்கிறோம்
எங்களுக்கு ஆகாரம் வேண்டும்
என்று அலறினார்கள் மக்கள்
ஆகாரம் கேட்டு வெளியில்
ஆர்ப்பரிக்கும் மக்களை
வேலூருக்கனுப்புங்கள்
என்றொரு ஆணை பிறந்தது.

கோவிலுக்கும்
கோட்டைகளுக்கும்போன
கோரிக்கைகள்
கோர்ட்டுகளில்
வாக்கு மூலங்களாக
வடிவம் பெற்றன
அப்போது மக்கள்
உணர்ச்சி வசப்படவில்லை
புரட்சி வசப்பட்டார்கள்.

விடுகதை

இந்தத் தேசத்திலேயே
மிகவும் உயர்ந்தவன்
கிராமவாசியா
நகரவாசியா

இல்லை
விலைவாசி

இல்லை

உழுபவனுக்கு நிலமில்லை
உழைப்பவனுக்கு வேலையில்லை
எங்கள் தேசத்தின் பரப்புக்கும்
எல்லையே இல்லை.

புரட்டல்

நீதிப் புத்தகங்களை
விரல்களால் புரட்டுவது போய்
இப்போது
ஒரு மாற்றத்திற்காக
ஆயுதங்களால் புரட்டுகிறார்கள்.

ரேஷன்

ரேஷன் கடையில்
அரிசி வாங்கிக்
கல்லையும் நெல்லையும்
பொறுக்க நினைத்து
அரிசியைப்
பொறுக்கி முடித்தோம்.

நவீன முதலாளி

முப்பது வருஷமாய்த்
தேசமக்கள் வடித்த
கண்ணீரை ஒன்றாக்கிக்
காட்ட நினைத்தால்
செம்பரம்பாக்க ஏரி
சிறுத்துத் தெரியும்
என்றதும்
அந்தப் பக்கமாய் வந்த
முதலாளி சொன்னார்
தேசத்திற்கு இது
மிகப்பெரும் நஷ்டம்
அப்படி
ஒன்று சேர்த்து வைத்திருந்தால்
அதில் உப்பு எடுத்து
எத்தனை கப்பல்களில்
ஏற்றுமதி செய்திருப்பேன்.

எதை அறுத்தால்

விதைக்கின்றோம்
அறுக்கின்றோம்
ஆனாலும் எங்களுக்குணவில்லை
தானியம் விதைத்து
தானியம் அறுப்பதாலா
எங்களுக்குணவில்லை
வேறு எதை அறுத்தால்
எங்களுக்குணவு கிடைக்கும்.

விஞ்ஞான ஆசிரியர்களே!
விதை முளைக்க
மண்ணும் நீரும்
வெப்பமும் காற்றும்

போதுமென்று
கற்றுக் கொடுக்காதீர்
விதை முளைக்க
எங்கள் வேர்வையும்
வேண்டுமென
விளக்கமாய்ச் சொல்லுவீர்.

தாலி கட்டி
மனைவியோடு சயனித்து
நீங்கள் வித்திட்டுப்
பருவம் பருவமாய்ப்
போற்றிக் காத்துப்
பிரசவித்த குழந்தை மலரைக்
கையிலேந்தி
இது என் குழந்தை என
இறுமாந்து சிரிக்கிறீர்
அப்படியே நாங்களும்

நிலத்தில் வித்திட்டுப்
பருவம் பருவமாய்ப்
போற்றிக் காத்து
விளைந்த தானிய மணிகளை
நீங்கள் உங்கள்
சாக்குகளில் அள்ளிச் செல்வது
எங்களின்
உண்மைப் பிள்ளைகளை.

மரங்களும் செடிகளும்
ஒவ்வொரு காலத்தில்
மலர்தல் போல
எப்போதேனும் எங்களுக்கு
வேலை வாய்ப்புகள்.

மழை நாட்களில்
ஈரத் துணிகளை உலர்த்த
வெப்பம் இல்லையென்று
வருந்துவோரே!
எல்லா ஈரத்துணிகளையும்
கொண்டு வாருங்கள்

கொண்டு வந்து
எங்கள் வயிறுகளில்
படிய விடுங்கள்
உடனே உலரும்படி
உள்ளே
பசி நெருப்புத் தகிக்கிறது.

கலப்பையில் கட்டிவரும்
மேழியைப் பாருங்கள்
எங்கள் வாழ்க்கை
கேள்விக் குறியாய்
ஆடி ஆடி வருகிறது.

எங்களைப் பற்றியோர்
பழமொழி சொல்லும்
தமிழ்ச் சாதியே தமிழ்ச்சாதியே!
தயவுசெய்து தயவுசெய்து
இனிமேலாயினும்
மாற்றிச் சொல் இதனை.
வினைவிதைத்தவன்
வினை அறுப்பான்
எங்கள் வாழ்க்கை
அனுபவமெல்லாம்
தினைவிதைத்தவன்
வினைகளை அறுக்கிறான்
வினைவிதைத்தவன்
தினைகளை அறுக்கிறான்.

ஆயுதப் புரட்சியெல்லாம்
இந்த
ஆன்மீக நாட்டிற்கு
ஆகாதென்பதால்
காகிதப் புரட்சி செய்தோம்.
நிலத்திற்கு உச்ச வரம்பும்
எங்கள் தினக்கூலி நிர்ணயமும்
காகிதத்தில்தானே
காணக்கிடைக்கிறது

நாங்களும் பெருமைப்பட
ஒரு சேதி உண்டு
எங்கள் கூலி முறைகள்
ஏர்கண்டிஷன் அறைகளிலேயே
நிச்சயிக்கப்படுகிறது.

எங்களையும் சேர்த்து
இந்நாட்டு மன்னரென்பார்
அதனால்தான் நாங்கள்
வயல்வெளிகளில்
வேலை செய்யும்போது
தலைப்பாகையுடன்
பவனி வருகிறோம்.

துண்டு நிலங் கேட்டோம்
ஒன்றல்ல இரண்டல்ல
ஒன்பது துண்டுகளாய்
எங்களையே வெட்டி முடித்த
மிராசுகளின் கைவேலை
எவ்வளவோ.

ஒரு நள்ளிரவில்
வெண்பனி தாங்கிய
நாற்பத்தெட்டுப் பூஞ்சை மலர்களைப்
பொசுக்கிப் போயின
மிராசுகளின் கைகள்.

உழுபவர்க்கே நிலம் சொந்தம்
எனும் எங்கள்
உரத்த குரல் கேட்டுக்
கெக்கொலி கொட்டிக்
கிண்டல்கள் செய்வோரே!
பிரகடனம் செய்கிறோம்
உழுகின்ற நிலம் மட்டுமல்ல
உலகம் முழுதையுமே
உழைப்பவர் கரங்கள்
ஒருநாள் எடுக்கும்.

காதற் கடிதம்

இனிமையானவளே!
இனியொரு முறை
இப்போதைக்கு நாம்
சந்திக்க வேண்டாம்.

நினைத்துப் பார்க்கையில்
நேற்றுவரை நிகழ்ந்த
சந்திப்புகள் வெறும்
சடங்குகளாகவே
தோன்றுகின்றன.

என் அன்பே!
வேலை வரங்கேட்கும் ஒரு
வாசல் வரிசையில்தான்
நாம் ஒருவரையொருவர்
சந்தித்துக் கொண்டோம்.

கல்லூரிக் கல்வியை நம்
இருவர் தலைகளிலும்
முள் கிரீடங்களாய்
அணிந்து வந்திருந்தோம்.
வீட்டில் மூத்தோர்கள்
என்கிற சிலுவைகள்
நம் இருவர் தோள்களிலும்
சவாரி செய்தன.

நம் விழிகள் சந்திக்குமுன்பே
முள் கிரீடங்களும்
சிலுவைகளும்
ஒன்றுக்கொன்று
குசலம் விசாரித்துவிட்டன
நம் விழிகள் சந்தித்தபோது
நட்பு பழசாகி
யுகம் யுகமான நெருக்கத்தைப்

புரிந்து கொண்டோம்.
அதிலிருந்து
வேலைதேடும் தூண்டில்களோடு
நாம் சேர்ந்தே அலைந்தோம்
கருங்கடலிலென்றால்
மீன்கள் கிடைக்கலாம்
நமக்குமுன்னே தெரிந்து
கந்தகக் கடல்.

ஒவ்வொரு சமயத்தில்
தூண்டில்களைக் கீழே போட்டு
இளைப்பாற வென்று
சோலைகளுக்குப் போனோம்
நம் சந்திப்பிறகு முன்னால்
சோலைகளாக இருந்தவை
சந்திப்பின்போதே
மயானங்களாய்
மாறிப்போயின.

முள்ளை முள்ளால் எடுப்பது
எவ்விதம் சாத்தியமோ?
என் சோகத்தை
உன் சோகம் வந்து
எட்டித் தள்ளவில்லை
கட்டிப் பிடித்துக் கொண்டது.

இனிமையானவளே!

சொப்பனங்களில் மட்டுமே
நமக்குச்
சொர்க்கங்கள் தெரிந்தன
கற்பனைகளில் மட்டுமே
நம்மால்
காதலிக்க முடிந்தது.

கண்முன்னே பார்த்தபோது
எலும்புக் கூடுகளாகவே நாம்
இணைந்து நின்றோம்

சுகங்கள் மறந்துபோய்ச்
சுமைகளையே நாம்
பரிமாறிக் கொண்டோம்.

தென்றலிசைக்குத்
தேமலர்கள் தள்ளாட
தேனூறும் பூக்களே
தேவாதி தேவரென்று
வண்டுகள் வலம் வந்து
வணங்கிச் செல்கையில்
பரவசப்பட வேண்டிய நாம்
பசி வசப்பட்டிருந்தோம்
யௌவனம் அப்போதெல்லாம்
மௌனமாகி விட்டது

இனிமையானவளே!

பெண்களை வர்ணித்த
மகாகவிகள் யாரும்
உன்னைப் போன்ற ஒருத்தியை
ஒருக்காலும் பாடவில்லை.
நூலிடையாள் என்றார்கள்
இடை மட்டுமல்ல
நீயே நூலாகத்தான்
நடந்து வருகிறாய்.

வேல்விழி என்றார்கள்
உன்னிடம் நான்
வெந்நீர் விழிகளையே
பார்த்தேன்.

தேனூறும் இதழ்கள் என்றார்கள்
எல்லாவற்றிலும் எரிச்சல்
வரும்போது என் அன்பே
எச்சில் கூட உனக்கு
எளிதில் ஊறவில்லை.

நாணத்தில் கன்னங்கள்
சிவக்கும் என்றார்கள்
உனக்கோ
கோபத்தினாலேயே
கன்னங்கள் சிவந்தன.

கற்பின் திறத்தால் ஒரு
நகரத்தைக் கரியாக்கலாம்
நல்லமழை பெய்விக்கலாம்
என்றார்கள்.

கற்போடு வேலை கேட்கப் போன
உன்னிடம்
கற்பையே கேட்டார்கள்.

இனிமையானவளே!

ஒரு வேலை இல்லாததால்
ஆணுக்குரிய அத்தனை தகுதியையும்
ஒரு சேர நான் இழந்துவிட்டேன்.

வேலைக்கான பேட்டிகளில்
இப்போதெல்லாம்
என் மூச்சுக் குழலுக்குள்
புயலொன்று நுழைகிறது.

உலகம் ஒரு நாடக மேடை
ஏழைகள் நமக்குத்தான்
நடிக்கத் தெரியவில்லை.
சாகசங்கள் கைவரவில்லை
யாசகத்திற்கு மனதில்லை.

குடும்பம் எனக்கொரு
சுமையானது
உனக்கோ
குடும்பத்தோடு நீயும்
ஒரு சுமையானாய்.

வேலை கேட்டனுப்பும்
விண்ணப்பப் படிவங்கள்
அரசாங்கங்கள் அச்சடிக்கும்
லாட்டரிச் சீட்டுகளாய்
மாறி விட்டன.

இனிமையானவளே!

ஒருமுறை
எல்லோரும் ஒன்றுகூடி
அரசாங்கம் கொலுவிருக்கும்
வாசலில் நின்று
கோஷங்கள் எழுப்பினோம்
சர்க்கார் தரப்பில்
சப்தமே இல்லை.
திரும்பிப் பார்த்தோம்.
ஜன்னல் வழியாகவும்
அங்கொரு சர்க்கார் நடந்தது.

ஓட்டுப் போட்டது
ஒரு சர்க்கார் அமைக்கத்தான்
ஓட்டு வாங்காமலேயே
ஓராயிரம் சர்க்கார்கள் நம்மை
உறிஞ்சிக் கொண்டுள்ளன.

பார்வை தூரத்திலிருக்கையில்
எம் மக்களுக்குச் சர்க்கார்
பாரிஜாதமலர்
நெருங்கிப் பார்க்கையில் அது
நெருஞ்சிப் பூ.

பாடல்கள் என்றால் கூட
பரவாயில்லை.
வசனங்களைக் கேட்டே
உறங்கி விட்டோம்
எல்லாம் புரிந்துவிட்டது.

கானல் நீரலையில் நின்று
தூண்டில் முட்களோடு
மீன் பிடிக்க முடியாது
என் அன்பே
தூண்டில் முள்ளைக் கழற்றித்
தூர எறிந்து விட்டேன்.

தூண்டில் கம்பில் ஒரு
நட்சத்திரக் கொடியோடும்
நல்ல கவிதையோடும்
நானும் என் தோழர்களும்
தேசத்தைக் குலுக்க ஒரு
யாத்திரை போகிறோம்
அது முடிகையில்
கனக விசயர்கள் பலர்
வெற்றி வீரர்களின்
சிலைகளுக்காகக்
கல் சுமந்து வருவார்கள்
அதுவரை
கடிதங்களில் மட்டுமே நாம்
காதலராயிருப்போம்.

பொட்டை மாடுகள்

இந்த தேசத்தை
இந்தியா என்றும்
பாரதம் என்றும்
இன்னும் அழைக்கும்
இந்தியர்களே
இனிமேலாவது
அவர்கள் மனங்குளிர
இந்து தேசம் என்று
இனிப்பாயழையுங்கள்

இங்கே உழலும்
மனிதர்கள் மட்டும்
இந்துக்கள் என்று
எண்ணிக் கொண்டிருக்கும்
ஏமாளிகளே
தெரிந்து கொள்ளுங்கள்
இங்கேயுள்ள விலங்குகளும்
இந்து விலங்குகளே.

காஞ்சிபுரத்து யானை
வைணவ யானை
அதற்கு நாமம் போடும்
மனித விரல்கள் தாம்
நீதிமன்றத் தீர்ப்பிற்கேற்ப
வடகலைப் பக்கமும்
தென்கலைப் பக்கமும்
மாற்றி மாற்றி நிறுத்தும்.

யானை பூனையெல்லாம்
இந்து விலங்குகளே.
இந்துத் தெய்வங்களே.
விலங்குகளாகவும்
விளங்குவதுண்டு.
அந்த வரிசையில்
அபூர்வ தெய்வம்
பொட்டை மாடு.

சம்சாரி பாஷையில்
பொட்டை மாடுதான்
சன்யாசி பாஷையில்
கோமாதாவாய்க்
கற்பனை உருத்தாங்கி
சர்ச்சைக்கானது.

இந்தியப் பசுக்கள்
இந்துப் பசுக்களென்றால்
பாகிஸ்தான் பசுக்கள்
இஸ்லாம் பசுக்களா?
என்று அறிவுப் பூர்வமாய்
ஆராய வேண்டாம்.

இந்தப் பொட்டை மாடுகளுக்கு
ஒரு பிடி
புல் அறுத்துப் போடவும்
உடல் வணங்காத
தாடிக் கொழுந்துகள்
சம்ரட்சணைக்காகச்
சங்கம் வைத்தார்கள்.

பொட்டை மாட்டுக்குத்
தட்டைத் தீவனம்
நித்தம் நித்தம்
உண்ணக் கொடுத்தவன்
ஒரு கட்டுப் புல்லுக்காய்
ஒவ்வொரு வரப்பிலும்
நண்டுவளை நீர்முள்ளி
செந்தட்டி எருக்கிளை
பாம்பு பல்லி பாச்சா
பட்டாள நடுநின்று
எரிகின்ற வெயிலில்
இடுப்பொடிய அறுத்துவரும்
சம்சாரியைப் பார்த்து
பசுவின் சாணத்தையும்

மூத்திரத்தையும்
அது தரும்
அரைக்கால் லிட்டர் பாலையும்
உபயோகப் படுத்திக் கொள்
அப்புறம் எதுவும்
செய்யக் கூடாதென
இதனோடு எந்த விதத்திலும்
சம்பந்தமில்லா
சன்யாசி உரைக்க
என்ன நியாயம்
இருக்கக்கூடும்.

சன்யாசிகளின் ஆசை
ஆஸ்ரம எல்லை தாண்டி
தேசத்தையே
ஆக்ரமிக்க எண்ணும்போது
சம்சாரிகளின் ஆசை
பால் மூத்திரம் சாணம்
இவற்றைத் தாண்டி
பசுவையே
ஆக்ரமிக்க எண்ணுகிறது.

மாட்டிறைச்சி உண்டால்
மனிதன் பலம்பெறுவான்
மனிதன் பலம் பெற்றால்
ஆலைகள் கட்டவும்
சாலைகள் போடவும்
ஆரம்பித்து விடுவான்
இருபதாம் நூற்றாண்டில்
ஆலைகள் எதற்கு
இலை தழை உண்டு
ஒவ்வொரு ஆளும்
நவ்வாலு சிட்டம்
நூல் நூற்றுச் சென்றால்
வேறென்ன வேண்டும்?

பசுவதைத் தடைபற்றிப்
பலவாறாய்ப் பேசிவரும்
பர்ணக சாலைகளின்
கர்ண ராஜாக்களே
பசுவதைக்கு முன்னால்
வேறொரு வதை
நாடு முழுக்க நடைபெறுகிறது
கன்று வதை......
ஒரு லிட்டர் பால் கறக்கும்
பசு மடியில்
முக்காலே அரைக்காலை
மொத்திக் கறந்துவிட்டு

கன்றுக்குப் பாலின்றி
சன்யாசிகள் உட்படச்
சகலரும் குடிக்கிறார்
இது மட்டும்அதர்மம் என
ஏனோ இதுவரை
எவரும் பேசவில்லை
ஏனெனில்
இவர்கள் உணவு
பால் என்பதால்
ரத்தம் கசியப் பீய்ச்சினாலும்
அநியாயம் என்று
அறிவிக்க மாட்டார்கள்.

மாட்டு வாலின்
மயிருக்குச் சமமாய்க்கூட
மனித நலத்தை
மதிக்காத உத்தமர்கள்
இவர்கள்
வெண்மணியில் வெந்த
மனித மாமிசத்தை விடவும்
மாட்டு மாமிச வேகலைச்
சகிக்க மாட்டா
சத்தியவான்கள்

பசுவதைச் சட்டத்தோடு
இன்னொரு சட்டமும்
இப்போதே செய்யுங்கள்
பூமாதேவி பெற்ற
நெல்மணிகள் எல்லாம்
இந்து தர்மப்படி
தான்ய லட்சுமிகள்
அவைகளை
உலக்கையால் குத்துவதும்
இயந்திரங்களில் அரைப்பதுவும்
மதவிரோதச் செயலென்று
சட்டம் செய்யுங்கள்
வருண பகவானை
வாயிலிட்டு எச்சில் செய்வதும்
சட்ட விரோதம்
வாயு பகவானைச்
சளி வரும் மூக்கில்
இழுத்து நுகர்வதும்
சட்ட விரோதம்
என்று
செல்வாக்குள்ள
எல்லா மன்றங்களிலும்
அறிவியுங்கள்.

அரை லிட்டர் ஒரு லிட்டர்
பால் கறக்கும்
இந்த நாட்டுப் பசுக்களுக்கு
இவ்வளவு அலட்டல்கள்
ஐம்பது லிட்டர் கறக்கும்
ஆஸ்ரேலியப் பசுக்கள்பற்றி
எந்தப் பேச்சையும்
எங்கும் காணோம்.

பாவம் பசுக்கள்
உங்களைக் காப்பாற்ற
ஒரு சட்டம் இயற்றினோம்
இதோ பார் என்று
எடுத்து நீட்டுங்கள்

அதையும் தின்று விட்டு
அசை போட்டு நிற்கும்.
வசிஷ்டர் கையாலும்
விசுவாமித்திரர் கையாலும்
வருடிக் கொடுத்து
வளர்த்து விட்ட
காராம் பசுக்கள் இப்போதெல்லாம்
கால்நடை ஆஸ்பத்திரியில்
செயற்கை முறையில்
கருத்தறித்துக்
கன்றை ஈனுவது
ஆச்சாரமா?
அனாச்சாராமா?

பொட்டை மாடுகள்
காமதேனுக்கள் என்பது
உண்மையேயானால்
கோமாதாக்கள் ஏன்
எல்லாக் காலத்திலும்
பால் சுரப்பதில்லை.

கன்று ஈன்ற
காலத்தில் மட்டும்
பால் சுரப்பதென்பது
பன்றிக்கும் ஒன்று
பசுவுக்கும் அதுவே!

மாட்டிறைச்சித் தடைக்காய்
இன்னொரு ஐ.ஜியும்
ஏராளம் வரட்டும்
போலீஸ் பட்டாளமும்
ஓட்டல் பிரியாணி
ஆட்டிறைச்சியா
மாட்டிறைச்சியா என்பதை
ஆராய்ந்தறிய
பரிசோதனைச் சாலை
பலவும் உருவாகட்டும்.

இன்னுமொரு யோசனை
சம்சாரி வெட்டிக் கொன்றால்தான்
பசுவதையா?
ஏராளமான உண்ணிகள்
பொட்டை மாடுகளின்
கழுத்துப் பகுதிகளில்
உட்கார்ந்திருந்து
உபாதை செய்கிறது
ஒவ்வொரு கழுத்தருகிலும்
ஒவ்வொரு காவலரை
உண்ணி உட்காராமல்
உன்னிப்பாய்க் கவனிக்க
இன்றே நிறுத்தலாம்
எல்லா வரிப்பணமும்
இந்தியப் பொருளாதாரமும்
இந்தப் பின்னணியில்
இயங்கிக் கொண்டிருக்கட்டும்
என்ன வேண்டும் நமக்கினி?

சீற்றம் வராத சிறுத்தைகள்

இளைஞர்களே
பெற்றோரிருந்தும்
உற்றாரிருந்தும்
அனாதைகளே!

ஆண்டவனுக்குக் கோவிலிருந்தும்
ஆள்பவர்க்கு அரசாங்கமிருந்தும்
நீங்கள் வேலை செய்ய
ஆலைகளின்றி
அலுவலகங்களின்றி
சொந்த வீட்டிலேயே
சோற்றுக்கமர்கையில்
அன்னியனைப் போல்
அகதியினைப் போல்
அனாதையானீர்கள்.

தெய்வங்கள் நிறைந்த தேசமிது
மழைக்கு வருணன்
நெருப்புக்கு அக்கினி
காற்றுக்கு வாயு
கல்விக்கு சரஸ்வதி
வேலை கொடுக்கும்
தெய்வம் ஒன்றிற்குப்
பஞ்சம் வந்தது.

நீங்கள்
துக்கமான வாழ்வைத்
துவங்கப் போகிறீர்கள்
என்று தான்
பட்டங் கொடுக்கும் போதே
பல்கலைக் கழகங்கள்
கறுப்பு உடையுடன் வரும்படிக்
கட்டளை இடுகின்றன.
தெருவிளக்கில் படித்துவிட்டு
ஐட்ஜானார் முத்துசாமி ஐயர்

பாவம் நீங்கள்
வீட்டுவிளக்கில் படித்துவிட்டுத்
தெருக்களுக்குப் போனீர்கள்.

இப்போது உங்கள் விரக்திக்கு
தேசிய கீதம் தராத சங்கதிகளை
போனியம் கீதம் தருகிறது.
ஆனாலும்
செவியில் இசையோடும்
வாயில் புகையோடும்
எவ்வளவு காலம் நீங்கள்
இன்புற்று விடுவீர்கள்?

உங்களுக்கு முன்பும்
இளைஞர்கள் இருந்தார்கள்
அவர்கள் மாலைக் கூட்டங்களில்
'அ'னாவில் துவங்கி
'அ'னாவில் முடியும்
அடுக்கு மொழிகளுக்கு
கைதட்டி நின்றார்கள்.
அவைகளை அப்படியே
அள்ளிப் போய்
அடுத்தடுத்த மண்டைக்கும்
கொடுத்துவிட்டுப் போனார்கள்.
ஒரு தலைமுறை
போலித் தனத்திலும்
இன்னொரு தலைமுறை
கோழைத் தனத்திலும்
உதவாக்கரை ஆனது.

உங்களில் ஒரு சிலர்
போராடி வந்தது
ஐம்பது ரூபாய்
அலவன்சுக் காசு.

உங்கள் பயணத்திற்கு
சேணம்தான் தந்தார்கள்
குதிரைகள் எங்கே என்று

குரல் கொடுத்தீர்களா?
மனுதரும சாஸ்திரம்
உங்களுக்கு மட்டும்
மனுதரும் சாஸ்திரமாய்
மாறிப்போனது.

மாலை போட வேண்டிக்
காதலிக்கும் யாரும்
முன் அனுபவம்
என்னவென்று
விசாரித்தறிவதில்லை.

ஆனால்
வேலை போட வேண்டிக்
கேள்விக் கழைப்பவர்கள்
முன் அனுபவம் பற்றியே
விசாரித்து வருகிறார்கள்
'வேலை விதவர்'களுக்கு மட்டுமே
வேலைதரும் காலமிது.

இது போராட்ட காலம்
ஒன்றிற்குமேல் குரல்கள்
ஓங்கி கேட்டால்
போராட்டம் அதுவென்று
புலன்களெல்லாம்
அறிந்து கொள்ளும்.

மயில் ஆடுவது கூட
ஆர்ப்பாட்டம்போல
குயில் கூவுவது கூட
கோரிக்கைக்காக
என்ற காலமிது...
சிறுத்தைகள் நீங்கள்
சீற்றத்தில் சிக்கனம் வேண்டாம்.

பல்கலைக் கழகத்துப் பாவாத்மாக்கள்

அரும்புகளைப் பூக்க வைக்கும்
சூரிய சந்திரர்கள் நாங்கள்
இருள் படிந்த இடங்களில்
இளவல்களின்
கைவிளக்குகள் நாங்கள்
எங்கள் உலைக்களத்தில்
உருவான கொழுமுனைகள்
இந்த மண்ணின்
எல்லாப் பரப்பையும்
உழுதுவரும் நாட்கள் இவை
என்றாலும்
நாங்கள் கல்லூரிக் கைதிகள்
பல்கலைக்கழகத்துப்
பாவாத்மாக்கள்.

கல்லூரி உடைதரிக்க
நாங்கள்
கழுத்தில் டை முடிச்சிடும்போதே
நிர்வாகக் கையிலுள்ள
தூக்குக் கயிறுகள்
நிதமும் ஞாபகத்தில்
வந்து போகின்றன.

தேசத்தின் நன்மைக்காய்த்
தினமும்தான் உழைக்கிறோம்
எங்கள் நன்மைக்காய்
ஏதானும் குரல் கொடுத்தால்
சவுக்கும் கையுமாய்
சைத்தான்கள் வருகிறார்கள்.

ஒரு நியாயம் கேளுங்கள்
ஆசிரியர் யாரும்
தொழிற்சங்க உரிமைக்காய்ப்

போராடக் கூடாது
நிர்வாகம் மட்டும்
ஆலைகளில் போல்
'லாக் அவுட்' செய்யலாம்.

கல்வி கற்பித்தது
போது மென்று சொல்லிக்
கத்தாழை பயிரிடக்
கதவுகளைப் பூட்டினார்கள்.

ஆள் தூக்கிச் சட்டம் இன்று
அமுலாகி வருவதாலே
கல்வி இலாகாவைக்
கவனிப்பில் வைக்க
ஒரு திட்டம் உள்ளதாமே
கல்வி அத்தியாவசியம்
நாங்கள் மட்டும்
அனாவசியமா?

யுவான் சுவாங்
யாத்திரை போல்
எங்கள் வீதி யாத்திரைகள்

சரித்திரப் பேர்பெறும்
தரித்திரப் போர் வெல்லும்

அர்த்த சாஸ்திரத்தைப்
பள்ளியில் கற்றோம்
தர்க்க சாஸ்திரத்தைக்
கல்லூரியில் கற்றோம்
இப்போது
வர்க்க சாஸ்திரத்தை
வீதிகளில் கற்கிறோம்.

ஜாதகம்

தனித் தனியாய்
ஜாதகம் பார்த்தும்
தானாக நன்மைகள்
வாராது என்பதனால்
தேசத்தின் ஜாதகத்தையே
தூக்கிக் கொண்டு
பொருளாதார சாஸ்திரிகள்
உலக வங்கியை நோக்கி
ஓடுகிறார்கள்.

ஆண்டாளும் ஆண்டாரும்

ஆண்டாள் போட்டு
ஆரம்பித்து வைத்த
ஆளுயர மாலைகளை இன்று வரை
ஆண்டார் ஆள்வோர்
கழுத்துக்களை விட்டுக்
கழற்றவே முடியவில்லை.

பகுத்தறிவாளரே !

மீனாட்சி அம்மன்
கழுத்தில் மினுக்கும்
நகைகளைக் கேட்கும்
பகுத்தறிவாளரே
பகுத்தறிவாளரே
மேயரின் கழுத்தில்
மினுக்கும் சங்கிலி
நூறு பவுனய்யா

சிலைகள்

யார் யாருக்கோ
இங்கு சிலைகள்
எங்கள் சிற்பிகள்
இன்னுங்கூட
அநேக சுத்தவீரர்களின்
சிலைகளை வடிக்கவில்லை.
ஏற்கெனவே கோரமாக்கிக்
கொலை செய்யப்பட்ட
அவர்களைத்
தங்களின் உளிகளால் வேறு
காயப்படுத்த இவர்கள்
விரும்பவில்லை போலும்.

சட்டமன்றம்

ஞாயிற்றுக்கிழமை முழுதும்
தனியாக விளையாடி
அலுத்துப் போன
மகன் அழைத்தான்
வாப்பா
நீ தான் மந்திரியாம்
நாந்தான் எதிர்க் கட்சியாம்
விளையாடுவோமா

வர்க்கங்கள் இல்லாத சொர்க்கத்தை நோக்கி

சுரண்டலை எதிர்த்துப்
போராடிய சோவியத்
தொழிலாளியை வாழ்த்த
சுரண்டலுக்காளாகிப்
போராடி வாழும் ஒரு
இந்தியத் தொழிலாளி
ஏக்கமுடன் வந்துள்ளேன்.

கைவிலங்கை முறித்துவிட்டுக்
கண்ணில் களிப்போடு
விண்ணெல்லாம் சென்று
வெற்றிக் கொடி நாட்டிவரும்
சோவியத் தொழிலாளியே
நீயே இந்த நட்பிற்குப்
பாலமிட்டாய் என்பதால்
உன்னோடு சிலவற்றைப்
பகிர்ந்து கொள்ள வந்துள்ளேன்
பாரத்தைக் குறைக்க வந்தேன்.

சோவியத் தொழிலாளியே
உன் கண்முன்னே
உதிக்கும் சூரியன்தான்
என் கண்முன்பும்
எக்காளமாய் உதிக்கிறது.

இராக் காலங்களில்
நீ ரசிக்கும்
சந்திர ஒளியே
நான் ரசிக்கவும்

நளினமாய்ப் பாய்கிறது
என்றாலும்
உன் கண்ணின்
ஒளி மட்டும்
என் கண்ணில் இல்லை
என்ன காரணம் என்று
எண்ணிப் பார்த்தேன்.

விடுதலைப் போராட்டம்
உங்கள் தேசத்தில்
தொழிலாளி தலைமையில்,
சுதந்திரப் போராட்டம்
எங்கள் நாட்டில்
முதலாளிகள் தலைமையில்
யார் தலைமையில் வெற்றியோ
அவர்களுக்கே பலன்கள்....
எனவேதான்
உங்கள் கண்களில் ஒளியும்
எங்கள் கண்களில் குழியும்.

விடுதலை வந்ததும் நீங்கள்
ஆட்சியை நடத்தி வர
சோவியத்துகளை அமைத்தீர்கள்
சுதந்திரம் வந்ததும் நாங்கள்
ஆட்சியை நடத்திவர
பஞ்சாயத்துக்களை அமைத்தோம்
பெயர்ப் பொருத்தம் அப்படி....
பஞ்சாங்கம் இன்னும்
எங்கள் நாடு முழுதும்
நடந்து கொண்டேயிருக்கிறது.

ஆளும் வசதிக்காய்
நாங்கள் எங்கள் தேசத்தை
ராஜியங்களாய் மட்டுமல்ல
வர்க்கங்களாகவும்
வகுத்து வைத்துள்ளோம்.
எங்கள் கைகளில்

விலங்கைப் பூட்டி
ஒரு சாவியை
முதலாளிகள் கொண்டுபோய்
தங்கள் குளியலறையிலுள்ள
கருப்புப் பணத்தோடு
இருப்பில் வைத்தனர்.
இன்னொரு சாவியை
ஆட்சியாளர்கள்
எடுத்துப் போய்
பாராளுமன்ற மேசைகளில்
பத்திரப்படுத்தினார்கள்.

எங்கள் ஆலைகளில்
உருளும் சக்கரங்கள்
இரும்பில் ஆனாலும்
எங்கள் முதலாளிகளின்
கார்ச் சக்கரங்கள்
பூக்களால் இருக்கும்படி
நாங்கள் பார்த்துக் கொள்ள
வேண்டும்.

நாங்கள் வேர்வையில்
நனைந்து கொண்டே
மற்றவர்கள் வேர்வை
வெளிவராமலிருக்க
ஏர்கூலர்களைச்
செய்து தருகிறோம்.

எங்கள் ஆட்சியாளர்கள்
முதலாளிகளுக்குக்
கூட்டல் கணக்கையும்
எங்களுக்கு
கழித்தல் கணக்கையும்
மட்டுமே கற்றுத் தந்தார்கள்.

ஐந்தாண்டிற்கொருமுறை
எங்களிடம்

உத்தரவு வாங்க வருபவர்கள்
ஐந்தாண்டுகளுக்கு
உத்தரவுகளை மட்டுமே
தருகிறார்கள்.

மலைப் பகுதிகளில்
யுத்தத்தைத் துவங்கு முன்பு
எங்கள் தேசத்தலைவர்கள்
சமவெளிகளில் நின்று
வெண்புறாக்களை
நீலவான் நோக்கி
நிச்சலனமாய்ப்
பறக்க விடுவார்கள்.

என்றாலும்
உஙகளை விடவும்
நாங்கள்
சிலவற்றில் உசத்தி
உங்கள் தேசத்தின்
மிசாக் கரடி
ஒலிம்பிக் மைதான
எல்லைக்குள் தான்
வரலாம் போகலாம்.

எங்கள் தேசத்து
மிசாக் கரடி
ஆலைக்குள் வரும்
அர்த்த ராத்திரியில்
தொழிலாளி
வீட்டிற்குள்ளும் வரும்

உங்களுக்குச்
சீருடைகள் உண்டாமே
எங்களுக்கும்
சீருடைகள் உண்டு.
எங்கள் சீருடைகள்
காக்கித் துணியில்.

நாங்கள் போராட
வெளியேறித்
தெருவிற்கு வருகையில்
எங்களைச் சீராட வருகின்ற
காவலரின் சீருடையும்
காக்கித் துணியில்

ஆலைகளில் எங்களுக்கு
மலிவு விலைகளில்
உணவுப் பண்டங்கள்.
எங்கள் பெண்டு பிள்ளைகள்
எப்படியோ போனாலும்
எங்களுக்கு மட்டும்
மலிவுவிலை உணவு.
மாட்டிற்குத் தீனி
அபிமானத்தாலல்ல
பாரம் இழுக்கவே என்பதை
எங்கள் முதலாளிகள்
நன்றாக அறிவார்கள்.

உங்கள் நாட்டில்
உற்பத்திப் பொருளிலெல்லாம்
உங்களுக்குப் பங்காமே
எங்கள் நாட்டிலும்
சிலவகைத் தொழில்களில்
இது சாத்தியமே.
இங்கு உப்பளத் தொழிலாளிக்கு
உப்புக் கிடைக்கும்.
அப்பளத் தொழிலாளிக்கு
ஒன்றிரண்டு
அப்பளம் கிடைக்கும்.
வீடு கட்டும் தொழிலாளி
வீடின்றி அலைவான்
நெசவுத் தொழிலாளி
துணியின்றி அலைவான்.

இவர்கள் இன்னும்
அவலை நினைத்தே
உரலை இடிக்கிறார்கள்.
உங்கள் தேசத்தில்
தொழிலாளி வர்க்கத்தில்
உட்பிரிவு இல்லையாம்
எங்கள் நாட்டில்
தொழிலாளி என்றால்
எல்லாம் சமமென்று
நாங்கள்
ஏற்றுக் கொள்வதில்லை.
முதலியார் தொழிலாளி
அரிஜன் தொழிலாளி
பிள்ளைமார்த் தொழிலாளி
பிராமணத் தொழிலாளி
என்று பேதம்
பிரித்துத்தான் பார்ப்போம்.

எங்கள் தேசத்தில்
சட்டங்கள்கூட ஒரு மாதிரி
பிச்சை எடுப்பது
சட்டவிரோதம்
மக்களுக்கு மட்டுந்தான்
சர்க்காருக்கல்ல.

உங்கள் நாட்டு
இலக்கியங்கள்
தொழிலாளி பற்றியே
இருக்குமாமே
எங்கள் நாட்டு
எழுத்தாளன்
நாங்கள் செய்த
ஃபேனடியில்

நாங்கள்செய்த
நாற்காலியிலமர்ந்து

நாங்கள் செய்த
மேசைமேல் கைவைத்து
நாங்கள் செய்த
பேனாவை எடுத்து
நாங்கள் செய்த காகிதத்தில்
....
பேருந்து நிறுத்தத்தில் நிற்கும்
இளம் பெண்ணைப் பற்றி
எழுதுவான்.
எங்களைப் பற்றி எழுதென்றால்
மூக்கைப் பொத்திக் கொண்டு
மூன்று மைல் ஓடுவான்.

உங்கள் தேசத்தில்
நவீன நாடக மன்றங்கள்
உங்களை எப்போதும்
களிப்பூட்டுமாமே
நாங்களும் அப்படியொரு
நாடக மன்றம் துவக்க எண்ணினோம்
நாடாளுமன்றம் இருக்கும்போது
வேறொன்றெதற்கென்று
விட்டுவிட்டோம்.

எங்கள் ஆலை வாயில்களில்
நல்வரவு என்பதை
எங்கள் இருளடைந்த கண்கள்
நல்குரவென்றே
நாளும் படிக்கின்றன.

இவ்வளவு துன்பங்களோடும்
நாங்கள் சும்மா இல்லை
ஒரு புதிய வாழ்க்கைக்காய்
நாங்கள் போராடியே வருகிறோம்
எங்கள் நாடு
சுதந்திரம் பெற்று
முப்பத்து மூன்று ஆண்டுகள் (1980)
முடியப் போகிறது.

எங்கள் நாட்டைப்
பரிபாலிப்பவர்கள்
முப்பத்து முக்கோடித் தேவர்கள்.

ஆண்டுக்கு
ஒரு கோடி என்றாலும்
இந்த ஆண்டுடன்
கணக்கை முடித்து
அடுத்த ஆண்டு
புதுக் கணக்கைத்
துவக்க வேண்டும்.

அப்போது
சோவியத் தொழிலாளியே
எங்கள் முற்றங்களில் பாயும்
சூரியனும் சந்திரனும்
வர்க்கங்கள் இல்லாத
சொர்க்கத்தைப் பார்க்கும்
சூடும் சுகமுமாய்
விடுதலைப் பறவைகளைச்
சந்திக்கும்.

இப்போதைக்குக்
கையில் விலங்கோடும்
கண்ணில் நீரோடும்
சோவியத் தொழிலாளியே
உன் நட்பை
உளமார வாழ்த்துகிறேன்.
ஒரு வேண்டுகோளுடன்.............
இந்தியத் தொழிலாளிக்கு
நீட்டிய உன்
நட்புக் கரத்தை
உன் அண்டை நண்பனான
சீனத் தொழிலாளிக்கும் நீட்டு
உங்கள் இருவரின்
கரங்களும்
சேர்ந்து குலுங்கினால்
உலகம் சிவந்து குலுங்கும்.

மத்திய தரம்

வெகுநாளாய் அழைத்தபின்
வீட்டிற்கு வந்தான்
அலுவலக நண்பன்
குழந்தை குட்டி குடும்பத்தோடு
வந்த குழந்தைகளை
வீட்டிற்குள் அனுப்பி விட்டு
பெற்ற குழந்தைகளை
விளையாடச் சொல்லி
வெளியே அனுப்பினான்
வீட்டுத் தலைவன்.

அனுப்பிய கையோடு
அவசரமாய் வந்தவன்
அடுக்களைப் பக்கம் திரும்பி
சீக்கிரம் ஆகட்டும் எனச்
சிட்டாய் குரல் கொடுத்தான்.

நைலக்ஸ் சிலுசிலுப்பைச்
சொகுசாய் அனுபவிக்கும்
கொத்துச்சாவியை
இடுப்பிலிருந்து எடுத்து
எல்லார் முன்னிலையில்
பீரோவை திறந்து
ஹார்லிக்ஸ் பாட்டிலை
எடுத்து வந்தாள்
வீட்டுத் தலைவி.

கண்ணாடி டம்ளர்களில்
ஹார்லிக்ஸை நிரப்பி
ட்ரேயில் அடுக்கி
டீப்பாயில் வைத்து
வழங்கி முடித்ததும்
வீட்டிற்கு வந்த
விருந்தாளிகள் எல்லாம்
விடைபெற்றுப் போனார்கள்.

விளையாடச் சென்ற
வீட்டுப் பிள்ளைகள்
அடுப்படிக்குப் போனதும்
ஹார்லிக்ஸ் வாசனையில்
சொக்கிப் போய்
நாக்கில் நீராறு பெருக
அப்பாவைப் பார்த்தும்
அம்மாவைப் பார்த்தும்
பீரோவை காட்டின.

நைலக்ஸை அவிழ்த்துவிட்டுச்
சாவியை எறிந்து விட்டுக்
கண்ணீரைத் துடைத்துக் கொண்டும்
கிழிந்த ஒரு
வாயிலைக் கட்டிக் கொண்டும்
அம்மா சொன்னாள்
அவர்கள் வீட்டிற்கு நாம்
நாளை போகிறோம்.

நமக்கு ஹார்லிக்ஸ் தர
அங்கேயும் ஒரு பீரோ இருக்கும்
வருகிறவர் பார்க்க மட்டும் என்று
அவளிடமும் ஒரு நைலக்ஸ் இருக்கும்
ஒரு கொத்துச்சாவி சொகுசாய்
அவள் இடுப்பில் சிறிது நேரம்
உயிரேயில்லாமல்
தொங்கிக் கொண்டிருக்கும்
நாம் போனவுடன்
அவர்களும்
அவர்கள் வீட்டுப் பிள்ளைகளை
விளையாடச் சொல்லி
வெளியே அனுப்பி விட்டு
நமக்கு மட்டும்
நல்ல ஹார்லிக்ஸ்
நாளை தருவார்கள்.

கனவுகள்

பால பருவத்திலே
எனக்கொரு
பேதைக் கனவு வரும்
கனவில் காற்சட்டைப் பையிரண்டும்
சீனி மிட்டாய்
கனத்து நிறைந்திருக்கும்
விழித்துப் பார்த்து
என் கனவை
அழித்துத் திருத்துவேன்
ஆம்
முதலில் எனக்கொரு
காற்சட்டை வேண்டும்
பிறகு அதன் பைகள்
கனத்து நிறைய வேண்டும்.

இந்தக் கனவு
இனித்ததே தவிர
நனவாகவில்லை
அதனால்
பிள்ளைப் பருவத்தில்
என் கனவின் வடிவங்கள்
மாறிப் போயின.
எனக்குப் பசிக்காத வயிறும்
சீருடை கேட்டுச்
சீறாத ஆசிரியரும்

கண்ணீரை வடிக்காமல்
சோறு வடிக்கும் அம்மாவும்
அம்மாவை உதைக்காத
அப்பாவும்
அப்பாவை உதைக்காத
எஜமானரும்
என் கனவுகளாயின.

இந்தக் கனவுகளும்
நிறைவேறவேயில்லை.

வாலிபப் பருவத்தில்
என் கனவுகள்
வலிமை மிக்கதாயும்
வாசனை மிக்கதாயும்
வந்து குவிந்தன

காசுக்காக ஒரு வேலையும்
காதலிக்க ஒரு பெண்ணும்
என் கனவுகளாயின.
கனவுகளால் இற்றுப் போன
என் கை வலைகளில்
இவை இன்னும் கூட
சிக்கவேயில்லை.
என் கனவு வலைகளைச்
சுருட்டி முடக்கிவிட்டுச்
சுற்றிலும் என் பார்வையைச்
சுழலவிட்டேன்.
நானே அநேகரானேன்
நானே இந்தத் தேசமானேன்.

ஒரு சந்தியா காலத்தில்
நான் இந்தியாவைப் பார்த்தேன்
அந்த நேரத்திலும் இங்கு
சந்தடி நிறைந்திருந்தது
இதுதான் தெய்வங்கள் தோன்றிய
பூர்வபூமி என்றும்
புண்ணிய பூமி என்றும்
பிரவசனம் செய்தார்கள்.

நினைவு தெரிந்த நாளிலிருந்து
என் கனவுகளைப்
பிரார்த்தனைகளாக்கி இருக்கிறேன்.
எந்த என் கனவையுமே
நிறைவேற்றாமல்

இந்தத் தேசத்துத்
தெய்வங்கள்
யார் வீடுகளில் போய்ச்
சேவகம் செய்கின்றன
என்பதுவும் புலப்படவில்லை.
ஒரு பெண்ணுக்கு
முந்தானை தர
ஓடோடி வந்த கண்ணன்
எனக்குக் காற்சட்டை தர
ஏன் நடந்து கூட வரவில்லை?

ஏராளமாய்ப் பெண்கள்
இப்படித்தான் முந்தானை
வரங்கேட்டு
முழந்தாள்ப் படியிடுகிறார்கள்.

ஏனென்றே பார்ப்பதில்லை
இந்தக் கண்ணன்

உள்ளூர்த் தெய்வங்கள்
உருப்படியாயில்லை யென்று
அயல் தேசத் தெய்வத்திடம்
அடைக்கலம் கேட்கப் போனேன்
இப்போதைக்கு
பாவமன்னிப்பு மட்டுமே
கர்த்தரின் கிடங்கில்
பாக்கி யுள்ளது
அவர் சார்பில்
அதனை அள்ளித் தருகிறோம்
என்றார்கள்.

நான் பாவமே செய்யவில்லை
எனக்கெதற்கு மன்னிப்பு
எனக்கொரு வேலை வேண்டும்
எப்போது கிடைக்கும் என்றேன்.

கைகளைக் கர்த்தர் தந்தது
கடவுளை வணங்கவே
நீ வேலை செய்வதன் மூலம்
பாவம் செய்யாதே
ஒருநாள் கர்த்தர் வருவார்
உன் துயர்களைப் போக்குவார்
என்றார்கள்.

என் பாட்டனுக்கு
வராத கர்த்தர்
என் தகப்பனுக்கு
வராத கர்த்தர்
என் காலத்திலாவது
வருவாரா என்றேன்.
நாளை வருவார்
என்றெழுதிய பலகையை
என் கண்ணுக்கெதிரே
கொண்டு நிறுத்தினார்கள்.

மறுநாள் அவசரமாயெழுந்து
அடைக்கல சாமியைப் பார்க்க
ஆவலோடு போனேன்.
நாளை வருவார்
என்றெழுதிய பலகை
அச்சுக்குலையாமல்
அப்படியே யிருந்தது.

இன்று ரொக்கம்
நாளை கடன்
என்ற மளிகைக் கடை
வாசகமும் சேர்ந்தே வந்து
மனதைக் கவ்வியது
இவையெல்லாம்
வியாபார ஸ்தலங்கள்
தானென்றெண்ணி
என் பேட்டைக்கு வந்து
ஓட்டுக் கேட்ட

பிரமுகரைப் பார்க்கப்
போனேன்.

அறைவாயிலில்
அகன்றதோர் புகைப்படம்
என் தேசத் தலைவர்கள்
பஞ்சு மெத்தைகளில்
படுத்து
உருண்டைத் திண்டுகளில்
சாய்ந்து
ஒய்யாரமாய்ச் சிரித்தார்கள்.
நான் வீதிகளில் நடக்கையில்
வட்டிக்கடைச் சேட்டுகள்
இப்படித்தான்
பஞ்சு மெத்தைகளில்
படுத்து
உருண்டைத் திண்டுகளில்
சாய்ந்து
ஒய்யாரமாயிருப்பார்கள்.

என் தேசத் தலைவர்கள்
தலையிலணிந்த தொப்பிகூட
இந்தச் சேட்டுகளிடம்
சிறிது நேரம் இரவல்
வாங்கி அணிந்தது போல
அசலாய் அப்படியே
காட்சி தந்தார்கள்.
ஒரே ஒரு வித்தியாசம்
வட்டிக் கடை சேட்
மஸ்லின் துணியில்
திண்டு வைத்திருந்தான்
என் தேசத் தலைவர்கள்
கதர்த் துணியில்
திண்டு தைத்திருந்தார்கள்.

வாக்குறுதிகளை
மூலதனமாக்கி
தேசத்தையே

அடமானம் வாங்கிய
இவர்களிடம்
அடமானம் ஏதும்
வைக்க வேண்டி வந்தால்தான்
வரலாம் என்றெண்ணினேன்.
அடமானம் வைக்க
சொந்தத்தில்
ஐவேசு இல்லாததால்
வந்த வாசல் வழியே
வெளியேறி நடந்தேன்
தெய்வங்கள் தலைமறைவாகி
தலைவர்கள் வட்டிக்கடை வாசிகளாகி
ஓ.......
என் நம்பிக்கைகள்
அந்தகாரத்தில்
இருண்டு தெரிந்தன.

என் தேசத்தை
முற்றிலுமறிய
எனக்கிதுவோர்
சந்தர்ப்பம் ஆகியது

எல்லாவற்றையும்
உற்றுப் பார்த்தேன்
என் நெஞ்சில்
கனல் மணக்கும் பூக்கள்
அடுக்கடுக்காய்ப் பூத்தன.

மாவும் மாதுளையும்
காய்ப்பிற்காகப் பூத்தன.
மல்லிகையும் முல்லையும்
பூக்களுக்காகவே பூத்தன.
என்நெஞ்சில் கனல்
மணக்கும் இந்தப் பூக்கள்
தேசத்திற்காகப் பூத்தன.

மாமன்னன் அசோகனுக்கு
மூன்று சிங்க முகங்கள்

வேண்டியிருந்தது
மஹான் காந்திக்கு
மூன்று குரங்கு முகங்கள்
வேண்டியிருந்தது.

பின்னால் வந்த சர்க்கார்கள்
இதைத் தவறாகப்
புரிந்து கொண்டன
அவைகள்
மிருகங்களை அஹிம்சிக்க
சட்டத்தைக் கொடுத்தன.
மனிதர்களை ஹிம்சிக்க
லத்தியைக்கொடுத்தன.

குழப்பமான அர்த்தங்களைக்
கொடுத்துக் கொண்டே
யிருக்கும் ஒரு சொல்
சுதந்திரம்
முன்பு
இந்திய முதலாளிகள்
தொழில் லைசென்சுகளுக்கு
லண்டன் செல்ல வேண்டும்
தூரம் ஒரு தொல்லையாயிருந்தது
இவையாவுமே
தில்லியிலிருந்தால் தேவலை
என்றுதான்
தலைநகரை
லண்டனிலிருந்து
தில்லிக்கு மாற்றினார்கள்
நாம் அதைச்
சுதந்திரம் என்கிறோம்.

முதலாளிகளால்
முதலாளிகளுக்காக
முதலாளிகளாலேயே
என்பது எங்கள்
ஜனநாயகத் தத்துவம்.

ஜனங்களை நாசம்
செய்ய ஒரு பெயர்
ஜன நாசம்
வழக்கில் திரிந்து
ஜனநாயகம் ஆனது.

மக்கள் சர்க்காரைக்
காதலித்தார்கள்
சர்க்கார் முதலாளிகளைக்
காதலிக்கிறது
திரைக்கதை தேடுவோரே
முப்பதாண்டுக்கு மேல் தொடரும்
இந்த முக்கோணக்
காதற் கதையை
யாரேனும் அறிவீரோ?

காந்தி கண்ட சாம்ராஜ்யம்
இப்போதுதான்
கண்ணில் தெரிகிறது
நடுவில் அது
பரதனிடம் சிக்கிச்
சீரழிந்ததாம்
மூத்தவன் பட்டம் ஆள
இப்போதுதான்
முடிவு செய்தார்கள்.

எங்கள் தேசச் சரித்திரத்தில்
எத்தனை காந்திகள்
முன்பு மஹாத்மா காந்தி
அப்புறம் மாதா காந்தி
நடுவில் சின்னக் காந்தி
பெரிய காந்தி

தங்க ஊசிகளை
நாங்கள் இப்போதெல்லாம்
வயிற்றில் குத்துவதில்லை
கண்ணிலேயே
குத்திக் கொள்கிறோம்.

மணிக் கொடியின்
மூன்று வர்ணங்களும்
மூன்று உண்மைகளை
முற்றாக உரைக்கிறது
முப்பத்துமூன்று வருஷமாய்
அறிவுறுத்திப் பார்த்தும்

இந்த அமைப்பில்
இந்திய மக்களே நீங்கள்
இன்னுமா காவி உடை உடுத்திக்
காசி ரமேஸ்வரம் போகவில்லை
என்கிறது மேலேயுள்ள
காவி நிறம்
இந்தஅமைப்பில்
வெளுத்ததெல்லாம் பாலல்ல
கதரேயானாலும் என்கிறது
வெள்ளை நிறம்
பச்சையாகப்
பொய் சொல்பவர்களாலேயே
இந்தத் தேசம்
பரிபாலிக்கப்படுகிறது என்கிறது
பச்சை நிறம்
நடுவேயுள்ள வட்டம்
மக்களுக்கு வரப்போகும்
லாபத்தைக் குறிக்கும்
எண் சைபர்.

சுகத்தைத் தனியாரிடம்
ஒப்படைத்து விட்டு
சோகத்தை மட்டும்
தேசீய மயமாக்கினார்கள்
இங்கொன்றும்
அங்கொன்றும்
அது என்ன தேசீயமயம்
மற்றதெல்லாம்
டாட்டா மயம்

பிர்லா மயமா
தேசத்தையே நாம்
தேசீய மயமாக்குவோம்.

என் தேசப் பிரச்சினை
ஒவ்வொன்றிற்கும்
என் தேசப் பிதா
தெளிவாக விடை சொன்னார்.

இந்திய மக்களின்
உடைப் பிரச்சினை
உடைந்து போன
ரரட்டைகளால் தீர்ந்தது
வீட்டுப் பிரச்சினையை
ஆசிரமங்கள் தீர்த்தன
உணவுப் பிரச்சினை
மணிலாக் கொட்டைகளில்
முடிந்து போனது.

தாழ்த்தப்பட்ட மக்களின்
பிரச்சினைக்கு மட்டும்
புதிய வழியில்
பரிகாரம் தேடினார்.
அவர்களை
ஹரியின் புத்திரர்கள்
என்று பெயர் சூட்டியே
பிரச்சினையைத் தீர்த்தார்.

பார்த்தார்கள் உயர்த்தப்பட்டவர்கள்
அவர்கள் மட்டும்
ஹரியின் புத்திரர்கள் என்றால்
நாங்களெல்லாம்
பிசாசின் புத்திரர்களா
என்று கோஷம் எழுப்பினார்கள்.

இந்தப் பெயருக்கும்
அபாயம் என்றதும்
அவர்கள் ஒரு

உபாயம் கண்டார்கள்
இஸ்லாத்திற்குப் போகிறோம்
என்று தொப்பிகள் தைக்கப்
போகும்பொழுது
எதிரே சாமியார் கூட்டம் வந்து
சமபந்திக் கழைக்கிறது.

மானிடப் பறவைகளே

மானிடப் பறவைகளே
உங்கள் பூஞ்சிறகுகள்
நோகாமலும்
உங்கள் வானிலும் வழியிலும்
துர் மிருகங்களின் உறுமல்
கூடக் கேட்காமலும்
நாம் இப்பூவுலகின்
மூன்றிலொரு பங்கில்
உங்கள் பிரியப்படி
சரணாலயங்கள்
அமைத்துள்ளோம்
அங்கிருந்து வரும்
உங்களின் இனிய கானமும்
பூஞ்சிறகு ஓசையும்
ஓ......
எங்கள் இக்கால
இந்தியாவிலும்
முழுதாகக் கேட்கிறது.

அதனால்தான்
முக்கோண இந்தியாவிலும்
உங்களுக்காய்
சரணாலயம் அமைக்க
மூன்று இடங்களில்
சாரங்கட்டி வருகிறோம்.

மற்ற இடங்களில்
சாரங்கட்ட
எங்களில் பலர்
பாரம் சுமந்து
பகலிரவாய் பாடுபடுகிறோம்
எங்கள் கண்களில் ஒளியும்
தோள்களில் வலிமையும்
இப்போது வந்திருக்கிறது.

நாங்கள் எல்லாப் பகுதிகளிலும்
சரணாலயம் அமைத்து
முடிக்கும்போது
இந்தியப் பறவைகளே
உங்களின் கானமும்
பூஞ்சிறகோசையும்
தூர தூர
தேசங்களில் கேட்கும்.

மீசை

தொண்டு என்பது
காலில் கிடந்தது
துண்டு என்பது
தோளில் வந்தது.

வானம் என்பது
விலைகளின் உயரம்
பூமி என்பது
சிலருக்கு மட்டும்.

செலவு என்பது
வேர்வை முத்து
வரவு என்பது
கவலைக் கடல்.

அஹிம்சை என்பது
அரசின் கொள்கை
இம்சை என்பது
நடைமுறை வாழ்க்கை.

ஊழல் என்பது
ஒவ்வொரு அணுவிலும்
காவல் என்பது
பயிர்களை மேயும்.

தேவை என்பது
தெருக்களில் திரியும்
திரவியம் எல்லாம்
கடைகளில் பதுங்கும்.

காதல் என்பது
கண்டிப்பதற்கு
கற்பு என்பது
பறிப்பதற்காக.

பாவம் என்பது
பிச்சைக் குரல்கள்
புண்ணியம் என்பது
எச்சிலை ஈதல்.

சோகம் என்பது
தேசம் ஆனது
தெய்வம் என்பது
கல்லாய் நின்றது.

கோபம் என்பது
யாருக்கு வந்தது
மீசை என்பது
பேருக் கிருந்தது.

இன்னொரு மீசை

இளைஞா
இப்படி வா

வாயில் நுரை வருகிறதே
வெகு காலமாய்
வேலை தேடி ஓடுவதாலா

கோடிக் கவலைகளாலா
உன் முகம்
கூம்பிக் கிடக்கிறது.

வாசல் நிலைப்படியில்
அம்மா கண்ணீர்
ஆறாகி வருகிறதே

ஜன்னல் சிறையில்
கனவோடு தங்கை
கண்ணீர் வடிகிறதா

அப்பா என்கிற சக்கை
திண்ணையில்
அனாதையாய்க் கிடக்கிறதா

எல்லோர் கண்ணீரையும்
துடைக்க
உன் இரண்டு கைகள்
மட்டுமா?

முப்பத்தாறு முறையா
வேலைக்கு
பேட்டி சென்றாய்?

ஒவ்வொரு முறையும்
ஒத்திகை பார்த்தாயா

உன்னைக் கேள்வி கேட்டவனை
உள்ளும் புறமும்
வணங்கி எழுந்தாயா.

ஏறி வந்த படிகளின்
எண்ணிக்கை கேட்டானா
ஈயின் கால்கள்
எத்தனை என்றானா
பெரிய ஆறு
உயர்ந்த சிகரம்
எல்லாம் கேட்டும்
நீ சரியாகச் சொல்லியும்
போ போ என்றானா?

ஒருவனாவது
வா என்று சொல்ல
உன் கூர்மைப் பதில்
ஊழைக் கும்பிடு
குனிந்த அடக்கம்
ஒன்றும் உதவலையா?

இளைஞா
உன் வேலை
பாராளுமன்றத்தில்
பதுங்கிக் கிடக்கிறது.

உன் வேலை
முதலாளிமார்களின்
கறுப்புப் பணங்களில்
ஒளிந்து கொண்டிருக்கிறது.

உனக்கு
இரண்டு கரங்கள்
உன்னை மதிக்காதவனை
வணங்க மட்டுமா
உயர்த்திப் பிடிக்க இல்லையா

உனக்கு வாய்
வேலை தராதவனுக்கு
பதில் சொல்ல மட்டுமா
கேள்வி கேட்க இல்லையா

இளைஞா
மறுபடியும் குனிகிறாயா
மறுபடியும் குழைகிறாயா

அதெல்லாம் சரி
அது என்ன
மேலுதட்டில்
கறுப்பாய்
புல் வளர்த்துத் திரிகிறாய்

ஓ.....

அது மீசையா?

நான்கு குரல்கள்

நடு நிசியில்
நான்கு குரல்கள்
மாறி மாறி ஒலித்தன

கோயில்தான் முதலில்
குரலெழுப் பியது

இன்று என்னிடம் ஒரு
எம். பி. வந்தான்
எனக்கு இன்னும் நிறையப்
பதவிகள் வேண்டும்.
ஏராளமாகச்

செல்வங்கள் வேண்டும் என
இறைவனைக் கேட்டான்.

தேவாலயம்
திருப்பிச் சொன்னது.

இங்கும் அந்த
எம். பி. வந்தான்
எனக்கு இன்னும் நிறையப்
பதவிகள் வேண்டும்
ஏராளமாகச் செல்வம்
வேண்டும் என
ஏசுவைக் கேட்டான்.

மசூதி விழித்து
மறுமொழி சொன்னது
இங்கும் அந்த
எம். பி. வந்தான்
எனக்கு இன்னும் நிறையப்
பதவிகள் வேண்டும்.
ஏராளமாகச் செல்வம் வேண்டும் என
அல்லாவைக் கேட்டான்.

அப்படியா என்று
அதிர்ந்து போய்
படுத்துக் கிடந்த
பாராளு மன்றம்
பதில் குரல் தந்தது.

இங்கும் அந்த
எம். பி. வந்தான்
என்னை அனுப்பிய
சனங்கள் யார்க்கும்
ஏதும் வேண்டுமென
இதுவரை வாயைத்
திறக்கவேயில்லை.

டீயைக் குடிக்கட்டும்
பன்னைக் கடிக்கட்டும்

தொண்டனை விட்டு
ஆழம் பார்
தூதுவர் வைத்து
ஆட்சியைப்பிடி.

கேட்பவர் காதுகளில்
சொற்களைச் சொருகாமல்
பூக்களைச் சொருகு

இரண்டு கரங்களையும்
சேர்த்துச் சேர்த்து
எப்போதும் சனங்களைக்
கும்பிட்டு வா
தங்களைக் கண்டதும்
வணங்கியதாக
சனங்கள் மத்தியில்
நினைப்புகள் வரும்
இப்படித்தான் நான்
இருக்கின்றவற்றை
சுருட்டிச் சுருட்டி
சேர்ப்பேன் என்கிற
அடையாளம்தான்
அது என்றறிய
வெகு நாளாகும்
வெகுளி சனத்திற்கு.

எதிலும் எப்போதும்
காசைக் குறி வை
தேசம் முழுவதும்
தீக்கிரை யாயினும்
சாம்பலை விற்றும்
சம்பாத்தியம் நடத்து.

மஹாத்மா காந்தி போல்
அநாகரீகமாய்
தொண்டர்கள் யாரையும்
நடமாட விடாதே
அவர் கையில் கம்பேந்தி
பகிரங்கமாய் நடந்தது
தவறென்று சொல்
தொண்டர்கள் எல்லோரும்
சைக்கிள் செயின்களை
மறைவாகச் சொருகியே
நாகரீகமாக
நடமாடச் சொல்.

எவ்வளவு நாள்தான்
தலைவனா யிருப்பாய்
கோடி தெய்வம்
உள்ள நாட்டில்
நீயும் ஒரு தெய்வமென்று
நம்பச் செய்.

தொண்டனுக்கு
உன்னைச் சுமந்ததில்
முதுகு காய்க்கும்
போஸ்ட்டர் ஒட்டி
கைச் சதை கரையும்
எதிர் காலம் தேடி
கண்கள் பூக்கும்.

பயப்படாதே

அப்போதும் தொண்டன்
பக்கத்தில் நிற்கும்
பாட்டாளித் தலைவர்களை
ஏனென்று கேளான்
ஏறெடுத்தும் பாரான்

அவனுக்குத் தலைவன்
காரேறி வரவேண்டும்
கனஜோராய்ப் பேச வேண்டும்
சவடால் விட வேண்டும்
சளைக்காமல் வெகுநேரம்
ஆளுயர மாலைகளை
அணிந்து கொண்டு
வரவேண்டும்.

பேச்சில் சர்க்கரை
சிரிப்பில் கற்கண்டு
கையசைப்பில் பரதம்
கால் நடப்பில் கதகளி
அவ்வளவும் இருந்தால்தான்
அவனுக்குத் தலைவனவன்.

பயப்படாதே
தொண்டன் டீயைக் குடிப்பான்
பன்னைக் கடிப்பான்
ஆனாலும்
அவனுக்குத் தலைவன்
ஏஸியிலிருப்பதை
எடுத்தெடுத்துப் பேசுவான்
தலைவன் வீட்டு
ஏஸிக்குளிரை
தன் வயிற்று நெருப்புக்கு
உணவாக்கி விடுவான்.

ஞாபகத்தில் எப்போதும்
புலியாயிரு
ஒரு நாள்
சேர்த்த சொத்து
நம்பிய தொண்டன்
பெரிய வீடு
சிறிய வீடு
எல்லாம் இருக்க
நீ மரணம் அடைவாய்.

ஊர்கூடி
பேர் கூடி
அலங்காரம் செய்து
உன் பிணம்
மயானம் போகும்.

சிதையில் வைக்கையில்
பிணமே
திடீரென எழு
எட்டாம் வட்டத்திலிருந்து
ஏன் மாலை வரவில்லை என்று
ஞாபகமாய் கேட்டுவிட்டு
மறுபடி செத்துப்போ.

பறவைகளே

வானில் பறக்கும் பறவைகளே
வந்து இதனைக் கேளுங்கள்
பூமியில் நடக்கும் மனிதனுக்கு
புத்தியில் தெளிவு இல்லையென்று
வானம் சென்ற பறவைகளே
வந்து இதனைக் கேளுங்கள்.

காலில் சங்கிலி அரசாங்கம்
கையில் சங்கிலி முதலாளி
வாயில் பூட்டுச் சட்டங்கள்
வாழ்க்கை முழுதும் கஷ்டங்கள்

வானில் பறக்கும் பறவைகளே
வந்து இதனைக் கேளுங்கள்.

சாதி போட்டது ஒரு வேலி
சமயம் போட்டது மறு வேலி
மூன்றாம் வேலி மொழி என்று
நாலாம் வேலி இனத்திற்கு.

வானில் பறக்கும் பறவைகளே
வந்து இதனைக் கேளுங்கள்.

இரும்புச் சங்கிலி அணிகலனாம்
வேலிகள்நாலும் பண்பாடாம்
பூட்டு என்பது ஒழுங்கிற்காம்
பொதுவாய் இவையே தர்மங்களாம்.

வானில் பறக்கும் பறவைகளே
வந்து இதனைக் கேளுங்கள்.

சுதந்திரம் கேட்க நாக்கில்லை
சுற்றிலும் பார்க்க கண்ணில்லை.
அடித்து நொறுக்கக் கையில்லை
அவனோ மண்ணின் அதிபதியாம்.

பறவைக்குத்தான் மரணம் வரும்
சிறகுகளுக்கது இல்லையென்று
சீழ்க்கை அடிக்கும் பறவைகளே
சின்னச் சின்னப் பறவைகளே

காலும் கையும் சிறகுகளாய்
மாறும் நாளும் வருமென்று
காற்றைப் போல சுதந்திரமாய்
வாழும் நாளும் வருமென்று
வானில் பறக்கும் பறவைகளே
வந்து சேதி சொல்லுங்கள்.

வேலிக் கதவைத் திறவுங்கள்
பூட்டை அலகால் உடையுங்கள்
சங்கி அறுக்க வாருங்கள்
சக்கரவாகப் பறவைகளே!

சத்துணவு

ஞாயிற்றுக்கிழமை

வெளியே சென்றால்
வீண் செலவு வருமென்று
வீட்டுத் திண்ணையில்
உட்கார்ந்திருந்தார்
ஆரம்பப் பள்ளியின்
ஆசிரியர் பெருமகனார்.

ஆரஞ்சுப் பழக் கூடை
வீதியில் சென்றது
வீட்டிற்குள்ளிருந்து
பிள்ளைகள் ஓடி வந்து
அப்பா ஆசிரியரை
அமுக்கிக் கொண்டார்கள்.

இதற்குமுன் இதெல்லாம்
வாங்கியதில்லை
விதியே என்று
விலைபேசி வாங்கி
வீட்டிற்குள் அனுப்பி விட்டு
திண்ணையைத் தட்டி
மறுபடி அமர்ந்தார்.

சற்றைக் கெல்லாம்
சக ஆசிரியர் ஒருவர்
பொழுது போகாமல்
திண்ணைக்கு இவரைத்
தேடி வந்தார்.

ஆரஞ்சுப் பழத்தோல்
அங்கு மிங்குமாய்
இரைந்து கிடந்தன.

திண்ணைச் சாய்வில்
உட்காரு முன்பே
ஆரஞ்சுத் தோலை
வந்தவர் பார்த்துப்
பதறிக்கேட்டார்

"யாருக்குக் காய்ச்சல்?"

ஆகாயத்து சொர்க்கத்தை....

யுகம் யுகமாய்
பூமியை வானம்
குனிந்து பார்த்துக்
கோபமாயிருந்தது.

மனிதன்
பிறந்த கோலத்தில்
பிராணிகளை வேட்டையாடி
குகையில் உறங்கக்
குனிந்து தவழ்கையில்
இடிகளின் முழக்கில்
மின்னலின் வீச்சில்
புயலின் சுழலில்
பேய் மழை வெள்ளத்தில்
இயற்கையைப் பார்த்து
அஞ்சி நடுங்கினான்
மண்டியிட்டழுதான்.

மண்டியிட்ட மனிதனை
வானம் குனிந்து பார்த்து
கோபப் பட்டது
இவன் எப்போது
எழுவான் என்று
வானம்
ஏக்கமாய் பார்த்தது.

ஒரு மாற்றம் வந்தது
ஒருவன் தலைவனானான்
ஓராயிரம் பேர் அவனுக்கு
அடிமைகளானார்
தலைவன் மனிதனை
சாட்டையால் அடித்தான்.
சங்கிலியில் பிணைத்தான்
தலைவனுக்கு முன்
மனிதன் அஞ்சி நடுங்கினான்
மண்டியிட்டழுதான்.

அப்போதும் வானம்
குனிந்து பார்த்து
கோபப்பட்டது
இவன் எப்போது
எழுவான் என்று
வானம்
ஏக்கமாய்ப் பார்த்தது.

மறுபடி ஒரு மாற்றம் வந்தது
மனிதன்
காட்டை வெட்டிக்
கழனியாக்கினான்
பயிர்த் தொழில் எங்கும்
பரவத் துவங்கியது

கதிரை அடித்துக்
களத்தில் போட்டதும்
பாதியைஅள என்று
பண்ணையார் வந்தான்

பண்ணையார் முன் மனிதன்
அஞ்சி நடுங்கினான்
மண்டியிட்ட மனிதனை
அப்போதும் வானம்
குனிந்து பார்த்தது
கோபப்பட்டது
இவன் எப்போது
எழுவான் என்று
வானம்
ஏக்கமாய்ப் பார்த்தது.

அப்புறம் ஒரு
மாற்றம் வந்தது
அங்கும் இங்கும்
ஆலைகள் வந்தன
மனிதன்
அழகழகாய்ப்
பொருள் செய்து

அடுக்கி வைத்து வருகையில்
முதலாளி வந்தான்
முழுதையும் தா என்றான்
முதலாளி முன்
மனிதன் அஞ்சி நடுங்கினான்
மண்டியிட்டழுதான்.

மண்டியிட்ட மனிதனை
அப்போதும் வானம்
குனிந்து பார்த்து
கோபப் பட்டது
இவன் எப்போது
எழுவான் என்று
வானம்
ஏக்கமாய் பார்த்தது.

பூமியில்
பொய்மையும் கயமையும்
போக்கிரித் தனங்களும்
புழுத்துக் கிடந்தன.

சூதும் வஞ்சகமும்
சுரண்டல் அமைப்பில்
ஆட்சிகளிலேயே அமர்ந்திருந்தன.

அரசர்கள் மாறுவதில்
ஆயிரம் சண்டைகள்
அரசிகளைத் தேடுவதில்
ஆயிரம் போர்கள்
வாரிசுச் சண்டைகளில்
வழிந்த ரத்தமோ
கடலளவானது
வாழ்க்கை முழுவதும்
வறுமையில் மிதந்தது.

பார்த்த இடமெல்லாம்
பஞ்சமும் பசியும்

உலகின் பாதாதி கேசம்
நோயும் நொடியும்

மனிதனின் உள்ளம்
தணலில் வெந்தது
மனிதனின் ஆன்மா
விற்பனைக் கானது.

இடையிடையே
சில தத்துவச் சப்தங்கள்
பெரிதாய்க் கேட்டன
நாடுகளைத் தொட்டன
வெற்று வேட்டுக்கள்
சூனியம் நோக்கி
சுட்டுத் தீர்ந்தன.

உலக அழுக்கு
சேர்ந்து கொண்டிருந்தது
உலக அழுகல்
நாறிக் கொண்டிருந்தது
உலகக் கண்ணீர்
ஓடிக் கொண்டிருந்தது.

பூமியின் கொடுமைகள்
உச்சமாயிருக்கையில
மனிதனின் உள்ளம்
சந்தேகப்பட்டது
இனி வரும் நாளில்
சூரிய சந்திரர்கள்
ஒளி தருவார்களா
மேகத்திலிருந்து
மழை வருமா
காற்று உறைந்து
கல்லாகி விடுமா
நட்சத்திரங்கள் எரிந்துவந்து
பூமியைப் புரட்டி
அண்டங்களுக் கெங்கேனும்
அள்ளிச் செல்லுமோ என்று
ஐயுறத் தொடங்கினான்.

பிறப்பு முதல்
இறப்பு வரை
பூமி தந்த சோகங்களால்
மனிதன் பூமிக்கு
மறு பெயர் வைத்தான்
நரகம்
அப்புறம் சொர்க்கம் என்பது
அவன் கனவில் வந்தது
கற்பனையானது.

பூமிக்கு அப்புறம்
அவனுக்குத் தெரிந்த இடம்
ஆகாயம் ஒன்றுதான்
அதனால் கற்பனைச் சொர்க்கத்தை
ஆகாயத்திலேயே அவன்
அழகாய் அமைத்தான்.

அந்த சொர்க்கத்தையே
அவன் அடிக்கடி பாடினான்
அந்த சொர்க்கத்தையே
அவன் அடிக்கடி நாடினான்.

பூமியில் கிடைத்த
ரணங்களுக் கெல்லாம்
ஆகாயத்திலிருந்தே அவன்
மருந்துகள் கேட்டான்
அவன் கலாச்சாரத்திலும்
கனவுகளிலும்
சொர்க்கம் ஒரு
மையப் பொருளானது
சொர்க்கம் ஒரு
போதைப்பொருளானது

வாழ்ந்த காலம் முழுதும்
சொர்க்கம்

வசப் படவில்லை.
அதனால்
செத்தால்தான் சொர்க்கம்
சாத்தியம் என்றொரு
தத்துவம் சொன்னான்.

அப்போது தான்
அக்டோபர் மாதம் ஒருநாள்
பூமிப்பரப்பின் ஓரிடத்தில்
மனிதன்
ஆஹாவென்றெழுந்தான்
அஞ்சி நடுங்கிய கரங்கள்
அடங்கி ஒடுங்கிய கரங்கள்
அக்கினியா யெழுந்தன.

அவன் படைத்த அனைத்தையும்
அவனே ஆக்ரமித்தான்
அவன் பார்த்த அத்தனைக்கும்
அவனே ஆணையிட்டான்
வஞ்சித்த வர்க்கத்தை
வாகை சூடி நின்றான்
துன்பத்தை முதன்முதலாய்த்
தோற்கடித்து நின்றான்.

ஆர்ப்பரித்து
ஆர்ப்பரித்து
உயர்ந்த கரங்கள்
ஆகாயத்துச் சொர்க்கத்தை
அப்படியே இறக்கி
பூமியில் வைத்தன
சோவியத் பூமி
சொர்க்க பூமியானது.

அப்போது தான்
வானம் குனிந்து பார்த்து
மனிதனைக் கண்டு
குலவையிட்டது
குதூகலித்தது.

பாவம் செடிகள்!
பாவம் பூக்கள்!!

தகிக்கும் அழகில் செடியில் பூக்கள்
ஆசை ஆசையாய் பூக்களைப் பறித்ததும்
....
செடியின் வெறுமை பாவமாயிருந்தது
நொடியில் செடியை மூளியாக்கியது
கொலைக் குற்றம் போல குறுகுறுக்க வைத்தது.
அறிவை நொந்தேன் ஆசையை நொந்தேன்
எப்போதும் இனிமேல்
பூக்களைக் கையால் பறிப்பதில்லை என
செடியிடம் நின்று சத்தியம் செய்தேன்.

அப்புறம் ஒருநாள் முன்புபோலவே
தகிக்கும் அழகில் செடியில் பூக்கள்
அறிவை விரித்து ஆசையை அடக்க
செடியில் பூக்கள் சிரித்ததைப் பார்த்தேன்

சில நாள் கழிந்து செடியில் பூக்கள்
சீக்காளி போல வாடி வதங்கி
ஓரம் உதிர்ந்து காய்ந்து கருகி
....
பூக்களைப் பார்க்க பாவமாயிருந்தது
பூவிடம் நின்று சத்தியம் செய்தேன்.

பார்க்கப் பார்க்கப் பூப்பாய்
பூக்கப் பூக்கப் பறிப்பேன்
பறிக்கப் பறிக்கப் பூப்பாய்.

இன்று பாரதி இங்கு இருந்தால்..............

பாதியில் நிறுத்திப் போன
பாரத யுத்தத்தை
மீண்டும் துவக்கவா
பாரதி நீ இன்று
பாரதம் வருகிறாய்

இரும்பு அணுக்களை
கரும்பில் கலந்த
கற்பகக் கவியே
உனக்கு அனந்த கோடி வணக்கங்கள்
வா

பாரதி
உன் பூவுலகப் பிரவேசம்
எந்த உருவில் என்று
ஏதேனும் முடிவிருந்தால்
கால தேச வர்த்தமானக்
கட்டுகளின் அடிப்படையில்
நாங்களும் ஒரு
யோசனை சொல்வோம்.

பாவப்பட்ட பாரதத்தில்
பாரதி நீ
பாலகனாய்ப் பிறக்காதே
பாலும், பள்ளியில் இடமும்
'பாரதி' என்றாலும்
கிடைக்காது ஐயா
மேலும் நீ
பிள்ளையாய்ப் பிறந்து
பெரியவனாய் வளர்ந்து
பேனாவை எடுக்குமுன்பு
மோனத் தவத்தில்
மூழ்கிய தேசத்தை
கரையான் புற்று வைக்கும்
கருநாகம் தீண்டி வரும்

ஆதலால் பாரதி நீ
பாவப்பட்ட பாரதத்தில்
பாலகனாய்ப் பிறக்காதே.

நூறு வயதாவதால்
தயை கூர்ந்து பாரதி
நூற்றுக் கிழவனாயும்
வந்து விடாதே
கூனிக் குறுகி நீ
பார்க்கும் பார்வை
வேதப் பார்வையாயிருக்கும்
வேர்வைப் பார்வையாயிராது.
அழுகைப் பாட்டும்
ஆத்திரப் பாட்டும்
வேண்டிய தேசத்தில்
நீ தொழுகைப் பாட்டும்
தோத்திரப் பாட்டுமாய்
ஓதிக் கொண்டிருப்பாய்

அதனால்
நீ விட்டுப் போன
முப்பத் தொன்பதிலேயே
இப்போதும் வா
அனுபவ முத்திரைகளோடு
அதுவே நல்ல பிராயம்.

அந்த வயதிலேயே
நீ வரவேண்டு மென்பதில்
வேறொன்றும் உண்டு
உன் தோற்றம் பற்றி
இப்போது சில சந்தேகங்கள்

நீ நெற்றியில்
பொட்டு வைத்திருந்தாயா
கோட்டில்
ஒட்டுப் போட்டிருந்ததா
என்பவை

எம் தமிழறிஞர்களின்
தீராக் கவலைகள்.

ஆனால் பாரதி
நாங்கள் அறிவோம்
நீ பொட்டு வைத்திருந்தாலும்
புரட்சிக் கவிஞனே
பொட்டில்லா விட்டாலும்
பக்தி மானே
கோட்டில்
ஒட்டுப் போட்டிருந்தாலும்
நீ உஞ்சி விருத்தி செய்யவில்லை.

வயதும் வடிவமும் போக
மற்றொன்றும் உண்டு
பாரதி நீ
சர்க்கார் பாரதியாக
வருவதாய் எண்ணமா
சாமான்யர் பாரதியாய்
வரப் போகிறாயா

சர்க்கார் பாரதி என்றால்
சார்ந்ததன் வண்ணமாகும்
சாத்திரம் தெரிய வேண்டும்
சௌகர்யம் வேண்டுமென்றால்
சௌந்தர்யங்களையே பாட வேண்டும்

உதயமும் அஸ்தமனமும்
ஒன்றாய்த் தெரியும்
ஆஸ்தான கவியாக
ஆயுளெல்லாம் இருக்கலாம்

சாமான்யர் பாரதி என்றால்
நாக்கில் சரஸ்வதி இருப்பாள்
வெகு தூரந்தாண்டி
நாசிக்கில் லெட்சுமி இருப்பாள்
மீண்டும் உனக்குச்

சாப்பாட்டுக் கஷ்டம் வரும்
சாகாத கவிதை வரும்

அழைத்தது ஏழைகள் என்பதால்
அவர்களின் கவியாகவே வா
உனக்கு நல்வரவு பாரதி

அக்ரகாரத்தில் முளைத்த
அந்த முதல் மீசை

இரண்டு கங்குகளாய்
அந்தக் கண்கள்

அவ்வளவு பெரிய மூளையை
அமுக்கி வைக்க முடியாமல்
அல்லலுறும் தலைக்கு
அனுசரணையாக
சுற்றிச் சுற்றிக் கட்டிய
முண்டாசுக் கட்டு

இவற்றோடு
காலங்காலமாய்
மானுடத்தின் கண்ணீர் கண்டு
கனிந்து கனிந்து போன இதயம்
காற்றுப் பட்டாலும்
விழுந்து விடும் என்பதால்
கோட்டுப் போட்டும் வந்தான்
பாரதி

அவன் மறித்த காலம் முதல்
இன்று வரை வடிந்த
மனித குல ரத்தத்தால்
ஏழைகள் கூடி நின்று
ஆரத்தி எடுத்தார்கள்..

வரும் வழியில்
என்ன பார்த்தானோ

ஏது பார்த்தானோ
வாடிப் போயிருந்தான்
மீண்ட கவிராஜன்
என்ன நேர்ந்தது
எம் இந்திய மக்களுக்கு
கரைந்த உடலும்
கந்தல் உடையுமாய் நீங்களும்
கரையாத உடலும்
கலையாத ஆடையுமாய் சிலரும்
என்ன நேர்ந்தது
எம் இந்திய மக்களுக்கு
சுதந்திரம் கிடைத்தும்
சுகம் கிடைக்காத
சூட்சுமம் என்ன
சொல்லுங்கள் என்றான்
சுப்ரமண்ய பாரதி

எரிச்சலும் ஏக்கமுமாய்
ஏழைகள் சொன்னார்கள்
நீ யுரைத்த காளிதேவி
எல்லைக்கப்பால் போய்
கடைக்கண் வைத்தால்
எல்லைக்குள்ளே அவள்
கடுகளவும் பார்ககவில்லை.

எங்கள் எலும்புகளை ஒடித்து
சிலர் இருக்கைகள் செய்தபோதும்
எண்ணெய்க்குப் பதிலாய்
எங்கள் இளைஞர்களை
இஸ்லாம் நாடுகளுக்கு
ஏற்றுமதி செய்த போதும்
சத்திரமும் கிடைக்காமல்
நாங்கள் தவிக்கும்போது
நட்சத்திர ஓட்டல்களில்
நடனங்கள் நடக்கையிலும்

வெண்மணியிலிருந்து
விழுப்புரம் வரை
பெல்ச்சியிலிருந்து
தியோலி வரை
ரத்தக் காட்டேறிகள்
ரணகளம் நடத்தையிலும்
சத்தமே போடவில்லை
உன் சக்தியும் காளியும்

மற்றெங்கும் பால்வகைப் பிரிவுகள்
இங்குதான் நால்வகைப் பிரிவுகள்
தேசம் முழுவதும்
பாதிக்கு மேல் சங்கம்
சாதிக்காரர் சங்கம்

சுதந்திரம் வந்ததும்
பாகப் பிரிவினையில்
வெஞ்சாமரங்கள் சிலருக்கும்
வெஞ்சிறைகள் எங்களுக்கும்

சுதந்திரம் வந்ததும்
சிலர் தம் சட்டைகளில்
பை தைக்கப் போனார்கள்
பாட்டாளிகள் நாங்கள்
பதாகை தைக்கப் போனோம்.

வட்ட மேஜை மாநாட்டிற்குப்
பின்வந்த சுதந்திரம்
எங்களுக்கு
வட்டத்தையே தந்தது
வயிறுகளுக்குத் தரவில்லை.

தேவசபைகளுக்குப்
பாவமன்னிப்பிற்கே
நேரம் போதவில்லை
செல்வர்களின் பாவத்தையும்
சேர்த்தே மன்னிப்பதால்

ஏழைகளின் கண்ணீர்
இன்னும் பெருகுதையா

ஆயிரம் ஆயிரமாய்
அநியாயங்கள்
அகலமாய் நடக்கையில்
அங்குலங்கூட நகரவில்லை
காளியின் திரிசூலம்

கோடானுகோடி
மக்களைக் காப்பாற்ற
கோடிகோடி தெய்வங்கள்
மக்கள் தொகைப் பெருக்கமும்
தெய்வத் தொகைப் பெருக்கமும்தான்
இங்கு சரிவிகிதச் சங்கதிகள்

வாய்ப்பாடு
முதலாளிகளின் வேதமானது
வயிற்றுப்பாடு
ஏழைகளின் சுலோகமானது

ஜனநாயகம் நடக்கவில்லை
சமஸ்தானம் நடக்கிறது
சர்க்கஸ் நடப்பதுபோல்
சர்க்கார் நடக்கிறது.

புலவர் தமிழில்
ஊறுகாய் வினைத்தொகை
ஊளைக் கஞ்சியும்
ஊறுகாயும் தான்
எங்கள் வினைப்பலன்.

நாங்கள்
இருக்கும் இடமெல்லாம்
இருளடைந்து கிடக்கையில்
முனிவர்களது ஆஸ்ரமங்களில்
மொஸைக் தரை போட்டார்கள்.

சுதந்திரம் வந்ததும்
வெள்ளி முளைக்குமென்று
விழி பார்த்திருக்கையில்
கள்ளி முளைத்ததையா
எங்கள் கனவுகள் உடைந்ததையா
மேடைகளில்
சப்த அலங்காரங் கேட்டு
தேசம் நிசப்தமாயிருக்கிறது
எல்லாத் திசைகளையும்
சொல்லால் இழுத்தவனே
எங்கள் வாழ்க்கை வளம் பெற
வழிகளைச் சொல் என்றார்
ஏழை மக்கள்

எல்லாம் கேட்ட
தேசியக் கவியின்
திருமுகம் வாடியது
உண்ண மறுத்தான்
உம்மென்றிருந்தான்
சற்று நேரத்தில்
அவன் வாட்டம் அகன்று
வழக்கமாய் வரும்
ஆவேசம் வந்தது
ஆடியது பூவுலகு

பாரதி சொல்வான்
பறையருக்கு இங்கு தீயர்
புலையருக்கும் விடுதலை என்றேன்
விடுதலையில் இவர்களெல்லாம்
விடுபட்ட தலைகள் இன்று.

செல்வரோடு வறியருக்கும்
சேர்ந்து வந்த விடுதலை
என்றா பாடினேன்
நான் தேடாத சுதந்திரம்
பாடாத விடுதலை இது.

ஏழையென்றும் அடிமையென்றும்
எங்கும் உள்ள தேசத்தில்

நாம் எல்லோரும் சமம் என்பது
உறுதியாகாமல்

உழவுக்கும் தொழிலுக்கும்
நிந்தனை செய்தும்
வீணில் உண்டு களித்திருப்போரை
வந்தனை செய்தும்
விழலுக்கு நீர்பாய்ச்சி
மாய்ந்து கொண்டிருக்கையில்
வெறும் வீணருக்குழைத்துடலம்
ஓய்ந்து கொண்டிருக்கையில்
உங்களை ஆடச் சொன்னது யார்
பள்ளுப் பாடச் சொன்னது யார்
ஆனந்த சுதந்திரம்
அடைந்து விட்டோமென்று
அடித்துச் சொன்னவன் யார்

என் பாடல்களுக்கு
பாஷ்யம் எழுதியவனைக்
கூப்பிடு என்றான்
தேசியகவி
அங்கம் அங்கமாய்
சுதந்திரத் தாயை
வர்ணித்த எவனும்
அகப்படவில்லை.

அக்கினியானான் பாரதி
குனிந்து ஒரு
காலணியைக் கையிலெடுத்தான்

குவலயமே
நடுங்கக் கேட்டான்
பாட்டாலடித்தேன்
பாதங்கள் குறையவில்லை

இப்போது
ஜோட்டால் அடிக்கவா
சொல்லுங்கள் ஜெகத்தீரே!

வாயெல்லாம்

எல்லாம் கிடக்கட்டும்
எதெதுவோ நடக்கட்டும்
கற்பில் சிறந்தவள்
கண்ணகியா மாதவியா என
பட்டி மன்றங்கள்
பரவலாய் நடக்கட்டும்

யார் ஜெயித்தாலும்
யார் தோற்றாலும்
தமிழனுக்கு
வாயெல்லாம் பல்
பல்லெல்லாம் சொத்தை

கேவலம்

நீர் வளம் இருந்தும்
நில வளம் இருந்தும்
கேவலம் தானே
கிடைத்தது நமக்கு

தரம்

பிராமணப் பூசாரிக்கு
மாவிலை வேண்டும்
பண்டாரப் பூசாரிக்கு
வேப்பிலையே போதும்
அரிஜன பூசாரிக்கு
அறுகம்புல் தான் கிடைக்கும்

பெண்

தங்கத்தில் சுவர் வைத்து
வைரத்தில் வாசல் வைத்தாலும்
அவள் வைக்கப்பட்ட இடம்
சிறையல்லவா

மரண தெய்வங்கள்

மூதாதையர் கூடி
மூன்று மரண தெய்வங்களை
உருவாக்கிப் போனார்கள்.

இப்போது
மரண தெய்வங்கள்
மறுஉருவம் தாங்கின
முதலாளி எமனானான்
நிலப்பிரபு காலனானான்
ஏகாதிபத்தியம் தூதனானது.

பூ

ஏழைக்குக்
கண்ணிலும் பூ
காதிலும் பூ

திரு.வி.க.

உன் மூக்கின் ஒரு பக்கம்
தமிழ்த் தென்றல் இழைய
இன்னொரு பக்கம்
தொழிலாளப் புயல் நுழைய
இரண்டையும் சுவாசித்த
உன் மூச்சுக் குழல்
விஞ்ஞானம் அறியாத அற்புதம்.

தேசிய நீரோட்டம்

காவேரி
இந்தியாவில் ஓடவில்லை
காவேரி
கர்நாடகத்தில் ஓடுகிறது.

காலும் கையும்தான்

நாங்கள்
பழங்கள் கேட்டுப்
பிரார்த்தித்தோம்
குமுட்டிப் பழங்கள்
கைகளில் வந்தன.

காய்கள் கேட்டுப்
பிரார்த்தித்தோம்
எட்டிக் காய்களும்
வேப்பங்காய்களும்
ஏராளமாய் எங்கள்
கைகளில் வந்தன.

பூக்கள் கேட்டு
பிராத்தித்தோம்
நெருஞ்சிப் பூக்களும்
எருக்கிளம் பூக்களும்
நிறைய நிறையக்
கைகளில் வந்தன.

பார்வைக்கு
பழமும் காயும்
வாய்க்கும் வயிறுக்கும்
வகைப்பட வில்லை.

பகட்டுக்குப் பூக்கள்
தொட்டால் முள்
தொடுத்தால் விஷம்.

பரம்பரை நெடுகிலும்
இப்படித்தான்
பாட்டன் கையில்
பூவும் விஷமும்

தாத்தன் கையில்
காயும் கசப்பும்
அப்பன் கையில்
அசிங்கப் பழங்கள்
பிரார்த்தனைக்காக
நீட்டிய கரங்களை
கண்ணீராலேயே
கழுவிக் கொண்டனர்.

எங்கள் கைக்கும்
அந்தக் காலம் போல்
முள்ளில் பூவும்
மூளிக் காயும்
முசுட்டுப் பழமும்
பிரார்த்தனை முடிந்ததும்
வந்து சேர்ந்தன.

எங்கள் கைப் பூவை
எங்கள் கைக் காயை
எங்கள் கைக் கனியை
எஜமான் கைச் சரக்கோடு
ஒத்துப் பார்த்தோம்.

அவன் கைப்பூவில் கூட
வைட்டமின் இருந்தது
அவன் கைக் கனியில் கூட
அத்தர் மணத்தது.

காலங் காலமாய்
கண்மூடி நின்ற
பிரார்த்தனையை நிறுத்தினோம்
கண்களைத் திறந்தோம்.

எதிரே
நாங்கள் நட்டு வளர்த்த
மா மரங்கள்
கர்ப்பஸ்திரீகளாய்

கனிகளோடு
நாங்கள் நீரூற்றி வளர்த்த
தென்னை மரங்களில்
நாலா புறமும்
குலையும் காயும்
நாங்கள் பதியன் போட்ட
ரோஜாக் காடுகளில்
கண்ணைப் பறிக்கும்
ரோஜாப் பூக்கள்.

மாஞ்சோலைக்குள் நாங்கள்
மடமடவென நுழைந்தோம்
தென்னந் தோப்புகளில்
திடுதிடுவெனப் பாய்ந்தோம்
ரோஜாக் காடுகளில்
ஜோராய் நடந்தோம்.

எதிர்த்து வந்தவனை
எட்டி உதைத்தோம்
எல்லாத் திசைக்கும்
எக்காளம் ஊதினோம்.

தேங்காய் ஒரு கையில்
மாங்கனி மறு கையில்
மீசை முறுக்குகளில்
ரோஜாப் பூக்கள்
இவை
எங்கள் காய்கள்
இவை
எங்கள் கனிகள்
இவை
எங்கள் பூக்கள்

எட்டி உதைத்த எங்கள்
கால்களை வணங்கினோம்.

இனி எங்களுக்கு
காலும் கையும்தான் தெய்வம்.

சுற்றிச் சுற்றி வா

தனி அறை
அகல மேசை
பெரிய நாற்காலி
உட்கார்.

இனி உனக்குத்
தெரியாதது எதுவும்
உலகத்தில் இல்லை.

உன் கீழ்
பணி செய்பவன்
எவனையும்
உனக்குச் சமமாக
உட்கார விடாதே.

'செய்' என்று சொல்லாதே
ஏன் செய்யவில்லை என்று
எடுத்த எடுப்பிலேயே கேள்.

உன் மேசை மணி ஓசை
ஓநாயின் ஓலம்போல
ஒலித்துக் கொண்டிருக்கட்டும்.

புன்சிரிப்பை ஒழி
கோபம் கண்ணில்
கொப்பளித்து வரட்டும்

அலுவலகம் எங்கும்
ஆறேழு சங்கங்கள்
ஒரு சங்கத்தைத் தூக்கி
உன் பைக்குள்ளே போட
உளவறிந்து வரச்சொல்
எம்.எல்.ஏ. வந்தால்
எழுந்து நில்
குனிந்து நில்
மந்திரி வந்தால்
மண்டியிட்டமர்

பிரச்சனை வந்தால்
அவசரமாகத் தீர்க்க
அவஸ்தைப் படாதே
அதைத் தூக்கி
நடுவில் வை
சுற்றிச் சுற்றி வா

ஆலயந் தொழுதுதான்

ஏழை நாடுளிடம்
ஏகாதி பத்தியம்
சந்தை கேட்கும்
இல்லையேல்
சண்டைக் கழைக்கும்

முன்பொரு காலம்
ஞானத்தை
இலவசமாய்த் தந்தோம்
இப்போது விஞ்ஞானத்தை
விலை கொடுத்து வாங்குகிறோம்.

பல் பொடி முதல்
படுக்கை விரிப்பு வரை
எல்லாம் அவன் வசம்

வேர்க் கடலையும்
வெள்ளாட்டுப் பாலும்
நம் வசம்.

தேயிலை விளைவிப்பான்
என் தேச மகன்
போயிலையும் விளைவிப்பான்
எடுத்து வைத்த அவனுக்கு
கொடுத்து வைக்க விதியில்லை
விளைவித்த அவனே
விலைகொடுத்து வாங்குவான்
வெள்ளைத் துரையிடம்

பழ மரம் ஒன்றைப் பார்த்தால்
ஏகாதி பத்தியத்திற்கு
இருப்புக் கொள்ளாது
முதலில் வந்து
பழங்களைப் பறிக்கும்
அப்புறம் ஒருநாள்
காய்களைப் பறிக்கும்
அவசரமென்றால்
பிஞ்சையும் பறிக்கும்.

விளையாட்டிற் காய்
பூக்களைப் பறிக்கும்
வேதனையூட்ட அதன்
வேர்களைக் கிள்ளும்
பட்ட மரமாக்கிப் பின்
வெட்டிவிடும் விறகுக்காய்.

இன்னொரு மரக்கன்றை
ஏழை மகனொருவன்
நட்டு நீர் பாய்ச்சுவதை
நாக்கில் நீருற
துரட்டுக் கோலோடு
தூரத்திலிருந்து காத்திருக்கும்
பேரதற்கு ஏஏகாதிபத்தியம்.

ஆலயந்தொழுதுதான்
அது ஆயுதங்கள் விற்கும்
ஆண்டவனை வணங்கித்தான்
அது அடுத்த நாட்டைக் கெடுக்கும்

ஏகாதி பத்தியம்
மேற்கில் உதயமானது
என் தேச மாந்தரே
எதற்கும் அஞ்சாதீர்
அது ஒரு
அஸ்தமனத் திசை.

கூரையில்லாக் குடும்பத்திற்கு...

மரத்தைப் பார்த்தேன்
நான் பார்த்ததும் மரம்
ஏதாவதொரு கவிதை தரும்
என்ன பார்க்கிறாய்
கவிதை தரவா என்றது.

கவிதை தந்தது போதும்
உன் நிழலில்
ஒரு குடும்பம்
நிர்க்கதியாய் வாழ்கிறது.

இலைகளின் கலக்கத்தில்
துளித் துளியாய்
சூரிய ஒளி
கூரையில்லாக் குடும்பத்தை
சுட்டுக் கொண்டிருக்கிறது.

எனக்குக் கவிதை வேண்டாம்.
இலைகளைப் பெருக்கி
நெருக்கிப் பிடி
கூரையில்லாக் குடும்பத்திற்கு

ஓட்டையில்லாக்
குடைவிரி
போதும்.
கடலைப் பார்த்தேன்
கவிதை தரவா என்றது

அதோ
கட்டு மரம் ஏறி
காற்றோடு போரிட்டுக்
கைநோகச் செல்கிறான் ஒருவன்

எனக்கு கவிதை வேண்டாம்
அவனை இன்னும் உன் மேல்
அலைய விடாமல்
மீன்களைக் கொடு
போதும்.

வானத்தைப் பார்த்தேன்
கவிதையா வேண்டும் என்றது

அங்கே ஒருவன்
நாவறட்சியில்
மரணத்தை நோக்கி
மல்லாந்து கிடக்கிறான்.

எனக்குக் கவிதை வேண்டாம்
அவன் வறண்ட வாய்க்கு
ஒரு துளி மழை கொடு
போதும்
காகிதம் முறைத்தது

கவிதைகள் கிடைத்து வந்த
இடங்களில் போய்
வேண்டாம் வேண்டாம் என்று
உதறிய காரியம்
சரியேயில்லையாம்

காகிதமே
நீயும் வேண்டாம்
இளைஞன் அலைகிறான்
நாடு முழுவதுமுள்ள
காகிதம் வாங்கி
மனுக்களைப் போட்டு
காகிதப் பஞ்சத்தில்
இளைஞன் அலைகிறான்

கவிதையானது போதும்
போ
அவன் திருப்திக்கு
ஒரு மனுவாக மாறு.

பிள்ளைத் தமிழே!

தமிழே! தாயே!
உன்னை
வாழ்த்துவதற்கும்
வணங்குவதற்கும்
இப்போதெல்லாம்
எத்தனை சங்கடங்கள்
உன்னை வாழ்த்துவதென்றால்
முக்கனி சர்க்கரை
கரும்பு கற்கண்டு
என்றல்லவா
வர்ணிக்க வேண்டும்.

தாயே! தமிழே!
இவை எல்லாமே இப்போது
விலை ஏறிப் போயின
முக்கனிகள் மட்டுமல்ல
எல்லாக் கனிகளுமே
ஏழைக்கு
எட்டாக் கனிகளம்மா!

பொருள் விலையைக் குறைக்க
நாங்கள்
போராடி வருகிறோம்
போராட்டச் சத்தங்கள்
அலை அலையாய்ப் பெருக

இப்போதுள்ளவர்கள்
இறங்கி வரும்போது
எல்லாப் பொருள் விலையும்
இறங்கியே தீருமம்மா.

பொருள் விலை இறங்கையில்
கனி விலையும் இறங்கும்
கற்கண்டும் விலை இறங்கும்
அப்போது தான்
தாயே தமிழே
உன்னை வர்ணிக்க
வார்த்தை வரும்
வசதி வரும்
அதுவரை பொறுத்திரு.

உன்னை வாழ்த்தியவர்களும்
வணங்கியவர்களும்
காப்பியங்களையும்
காவியங்களையும்
உனக்கு
அணிகலன்களாய்
பூட்டவில்லை தாயே
விலங்குகளாய்ப் பூட்டி
சிறைப் படுத்தி விட்டார்கள்.

உன் முதுமையை வாழ்த்தி
உன்னைக்
கிழடாக்கிவிட்டார்கள்
உன் பெருமையை வணங்கி
உன்னை
முடமாக்கி விட்டார்கள்.

உன்னைப் புகழ்வதில்
அவர்களுக்கொரு
எல்லையே இல்லை.
தாங்கள் தினமும்
பல் துலக்குவதே
தாயே தமிழே
உன்னைச் சுத்தமாய்
பேசத்தான் என்று
சிலர் சத்தியம் செய்தார்கள்.

இவ்விதம் உன்னை
வாழ்த்திய நபர்களுக்கு
தமிழே தாயே
அதுவும் இதுவுமல்ல
அரியாசனமே
பரிசாய் வந்தது.

வந்தும் என்ன
பழைய
காவிய விலங்குகளில் தானே
நீ காட்சி தருகிறாய்
பழைய
சாய்வு நாற்காலியில் தானே
சாய்ந்து கிடக்கிறாய்
பழைய
பெருமைகளில் தானே
மிதந்து வருகிறாய்.

இனிய அன்னையே.
இலக்கியங்களில் தானே
இறுமாந்து கிடக்கிறாய்
விஞ்ஞானத்தை இன்னும்
மழலையில் தானே
குழறி வருகிறாய்.

உன் தோட்டத்தில் ஏனம்மா
ஒரே நிறத்தில்

ஓராயிரம் மலர்கள்

உன் தோட்டத்தில் ஏனம்மா
ஒரே மணத்தில்
ஒரு கோடிப் பூக்கள்

எல்லா நிறங்களிலும்
எல்லா மணங்களிலும்
எப்போதம்மா உன் தோட்டம்
பூத்துக் குலுங்கும்.

அன்னைத் தமிழென்று
அடங்கியது போதும்
பிள்ளைத் தமிழென்ற
பெருமையுடன் எழுவாய்

பிள்ளைத் தமிழே
பிள்ளைத் தமிழே
சாய்வு நாற்காலியிலிருந்து
சற்றே எழுந்திரம்மா

காப்பிய விலங்குகளைக்
கழற்றித் தா
அணிகலன்களாக்கி
உனக்கு
அலங்காரம் செய்விப்போம்.

ஆலைகளுக்கும்
அலுவலகங்களுக்கும்
அவசரமாகப் போய்வா
பள்ளிகளுக்கும்
கல்லூரிகளுக்கும்
பயப்படாமல் போய்வா

கோவிலுக்குள் போகும்
கோரிக்கை வைக்காதே
ஏற்கெனவே போன மொழி
என்ன சாதித்தது

ஒரு மொழியாலும் அங்கு
உபகாரம் இல்லை
அதனால்
கோவிலுக்குள் போய்
பிள்ளாய்
வீணாக நேரத்தை
விரயமாக்காதே

கோர்ட்டுக்குப் போ
கோட்டைக்குப் போ
விஞ்ஞானக் கூடங்களில்
விளையாடி வா.

ஒரே வித உணவையே
உண்டு உண்டு
சோகை பிடித்தாய்
இனி நீ
சரி விகித உணவுண்டு
சக்தியைப் பெருக்கம்மா
அகத்திணை புறத்திணை
பேசியது போதும்
பிள்ளைத் தமிழே
கிள்ளைத் தமிழே
அறிவியல் பேசு
புவியியல் பேசு
ஆபாசம் இல்லாத
ஆரோக்யம் வளர்.

உன்னை
வாழ்த்துபவனையும்
வணங்குபவனையும்
புறந்தள்ளி வை
உன்னை
வளர்ப்பவனோடு
சரசத்தை வளர்.

பேசிக் கொள்கிறோம்

இந்திய தேசப்படம்
சுவரிலிருந்து
இறங்கி வந்தது.
*

என்னை நினைத்தீர்கள்
யாருக்கும் இங்கு
என் மீது அக்கறையில்லை
பல்லி எச்சத்தில்
பாதி நிறம் மாறினேன்
பாச்சாளை கடிக்கிறது
பூரானும் தேளும்
புகுந்து கொள்ளும்
இடமா நான்
செல்லெல்லாம்
அரித்து அரித்து
செதில் செதிலாய்த்
தொங்குகிறேன்
மருந்தடிக்க மாட்டாயா
என்னைப்
பொருட்படுத்த மாட்டாயா
*

ஒவ்வொரு நாளும்
உன்னைப் பற்றித்தான்
பேசிக் கொள்கிறோம்
எந்த மருந்தென்பதில்தான்
எங்களுக்குள் வாதங்கள்
*

முப்பத்தாறாண்டுகளாகவா?
*

முணுமுணுத்துக் கொண்டே
இந்திய தேசப்படும்
சுவரேறித் தொங்கியது.

கொடிகள்

கொடிக்கம்பத்தை யாரும்
கவனிக்க வில்லை.

எப்படியோ விழுந்த
விதை ஒன்றில்
பீர்க்கஞ் செடி
கம்பத்தடியில் முளைத்தது
கொடியாய் நீண்டது.

பீர்க்கங் கொடி
அரசியல் சட்டத்தை
அறியவில்லை.
கம்பத்தைச் சுற்றியது
உயர உயரப் போய்
தேசீயக் கொடியையும்
தொடப் போனது.

தேசீயக் கொடிக்கு
சுள்ளென்று வந்தது
பீர்க்கங் கொடியிடம்
பிடி பிடியென்று
பேசத் துவங்கியது.

நானும் கொடி
நீயும் கொடி என்பதால்
என்னைத் தொடவா பார்க்கிறாய்?

எல்லோரும் வணங்கும்
இடத்தில் நான்
யாரும் பிடுங்கும்
இடத்தில் நீ.

பறக்கையில் என்னைத்
தொடுவது என்பது
சட்டப் படியும்
குற்றப்படும்

பீர்க்கங் கொடிக்கு
சிரிப்பு வந்தது
பேசத் துவங்கியது.

தைத்து வந்த கொடி நீ
முளைத்து வந்த கொடி நான்
ஒரே இடத்தில் இருந்து கொண்டு
பறப்பதாய்ச் சொன்னது
சிரிப்பதாயிருக்கிறது.

நீ ஒன்றும்
பறக்கவுமில்லை நகரவுமில்லை
ஆடிக் கொண்டிருக்கிறாய்
அதுவும் அடிக்கின்ற காற்றுக்கு
ஏற்றாற் போல
நடனங்கள் ஆடுகிறாய்.

பூக்காமல்
காய்க்காமல்
ஒருவர் வயிற்றுக்கும்
உணவு தராமல்
உனக்கும் கொடியென்று
யாரிட்ட பெயரிது?

நானோ
நாளையே பூப்பேன்
நவ நவமாய்க் காய்ப்பேன்
நான்
சருகாகி உலர்ந்து
விறகாகப் பயன் தருவேன்

நீ
இற்றுக் கிழிகையிலும்
இப் போதிருக்கையிலும்
என்னதான் செய்தாயென்று
என்னிடம் மட்டுமாவது
சொல்லிப் பாரேன்

சட்டத்தைக் காட்டி
என்னைத் துரத்தாதே
என் காயைத் தின்ற
பலத்தில் தான்
ஒருவன் உன்னை
மேலும் கீழும்
தைத்துக் கொடுத்தான்
மேன்மைப் படுத்த
சட்டம் செய்தான்

நீ மட்டுமல்ல
நானும் கூட
தேசியக் கொடிதான்
சமத்துவம் பற்றி
கீழே பேசுவதை
மேலே நாம் நிகழ்த்துவோம்

இதோ
உன்னைத் தொடுகிறேன்.

மண் குதிரைகள்

ஐந்தாண்டிற் கொரு முறையும்
சில சமயம் அவசரமாகவும்
வர்ண மண் குதிரைகளில்
வாக்குறுதிகள் அமர்ந்து
அக்கரையில் வந்து
அமர்க்களமாயிறங்கும்
இக்கரையில் நாங்கள் நின்று
ஏக்கமுடன் பார்த்திருப்போம்

ஆற்றில் இறங்கிய
அழகு மண் குதிரைகள்
ஆறேறி வந்ததில்லை
அழுத முகம் பார்த்ததில்லை
கும்பிட்ட கரங்களோடு
குதிரைகளை இறக்கியவர்
மீண்டும் வருவார்
மீண்டும் இறக்குவார்
மண் குதிரை மாறி
இன்னும் ஒரு
மரக் குதிரை கூட வரவில்லை
என்று வரும்
ஒரு உயிர்க்குதிரை?

மண்வெட்டி எடுத்து....

கல்லில் உரித்த நாரைக்
காயப் போட்டேன்
காகிதக் கப்பலொன்றில்
கடலைக் கடந்து
கரை வந்து சேர்ந்தேன்
பல் குத்தும் கடப்பாறையைப்
பக்கத்தில் விட்டெறிந்தேன்
மண் வெட்டி எடுத்து நான்
மயிர் வெட்டி வந்தேன்
வைகை யாற்று
வண்டல் மண்ணை யெல்லாம்
எண்ணிக் கணக்கெடுத்து
இருப்பில் வைத்தேன்.

திட்டக் கமிஷன்
உறுப்பினர் நான்
தேசம் எங்கும்
தெருக்களில் எல்லாம்
தேனும் பாலும்
ஓட விடுவேன்.

பிரச்சனை

இவன்
அவனைப் பார்க்கப் போனான்
அவன்
கன்னத்தில் கை வைத்து

....

ஏன் இப்படி என்றான்
'பிரச்சனை' என்றான் அவன்

....

ஒரு நாள்
அவன்
இவனைப் பார்க்க வந்தான்
இவன்
கன்னத்தில் கை வைத்து

....

ஏன் இப்படி என்றான்
'பிரச்சனை' என்றான் இவன்

....

தாங்க முடியவில்லை
எங்காவது போகலாம் என்று
இருவரும் புறப்பட்டனர்

....

பஸ் கிளம்பவில்லை
பஸ் முதலாளி
கன்னத்தில் கை வைத்து

....

ஏன் இப்படி என்றார்கள்
பஸ் முதலாளி
பதில் சொன்னான்

கார் கிடையாது
கடை கிடையாது
சனங்கள் எல்லாம்
தெருக்களில்

....

அவன் இவனிடம்
வா
சேர்ந்து கொள்வோம்
பிரச்சனை இப்போது
தீர்ந்து கொண்டிருக்கிறது

....

பத்தொன்பது மாதங்கள்

இன்றோடு
பத்தொன்பது மாதங்கள்
என் பிள்ளைகள்
என்னைப் பார்த்து
சிரிப்பதை நிறுத்தி

எங்கள்
எல்லோர் பாஷையும்
மௌனம் என்றாகி

எங்கள்
எல்லோர் வயிறுகளிலும்
அரை வயிறு
காணாமற் போய்

எங்கள்
சந்தோஷம் முழுதும்
கொள்ளையடிக்கப்பட்டு

இன்றோடு
பத்தொன்பது மாதங்கள்

....

நாங்கள் போராடிகள்
எங்களை
இடைவெளிவிட்டு
சந்திக்கும் எவரும்
ஆவலாய்க் கேட்கும்
முதல் கேள்வி
"இப்போது
வேலையிலா வெளியிலா?"
எங்கள்
வீடுகளின் சந்தோஷம்
நிலையானதல்ல

இந்து மதத்தின்
நிலையாமைத் தத்துவம்
எங்களுக்கு மட்டும்
சாலப் பொருந்தும்

எங்கள் சந்தோஷம்
இதற்கு முன்பும்
அடிக்கடி பறிக்கப்பட்டது

அப்போதெல்லாம்
இவ்வளவு காலம் அது
நீண்டதில்லை

....

வேலை பளுவைக்
குறை என்றோம்
வேதனைகளைத்
தீர் என்றோம்.

உன் கணக்கையே
தீர்ப்பேன் என்று
கங்கணம் கட்டினார்கள்

....

எங்கள்மீது
நீண்ட விசாரணைகள்
விசாரணை முடியும்வரை
வேலைக்கு வரக்கூடாது

அரைச் சம்பளத்தில்
அடி வயிற்றை
நனைக்க வேண்டும்
வேறெங்கும் வேலைக்குப்
போகக்கூடாது
ஊர்தாண்டி எங்கும்
உலவக் கூடாது

மன்னிப்புக் கடிதம்
தந்தால்

மறுநாளே வேலையாம்
மன்னிக்கும்படிக் கேட்க
நாங்கள்
தங்கம் கடத்தவில்லை
சங்கம்தான் நடத்தினோம்.

....

அப்படி யென்றால்
விசாரணை நீளும்
வீட்டை
சிறைச் சாலையாக்குவோம்
என்றார்கள்

....

அவர்களை விட
அருமையான மண்
கொல்லையில் கிடந்தது.

கொத்தினேன்
பாத்தியிட்டேன்
விதை தூவி
நீர் வார்த்து
முளைப்பதைப் பார்க்க
விடிய விடிய
விழித்திருந்தேன்

....

ஒருநாள் பூஞ்சைப் பச்சையில்
பாத்தியெல்லாம்
மயிர்க் கால்கள்
அப்பாடா
நான் உட்கார்ந்து கொள்ள
ஒரு இடம் கிடைத்தது
அவர்கள் வைத்த
சிறைக்குள்ளும்
நான் ஒரு
சொர்க்கம் செய்தேன்

ஒருநாள் கொழுந்து
மறுநாள் இலையாய்
மறு நாள் இலை

ஒரு நாள் சருகாய்

....

பச்சை நிறம்
ஒன்றல்ல
பூம்பச்சை
இளம் பச்சை
கரும் பச்சை
எத்தனை எத்தனை
அத்தனையும் இலைகளில்

....

இளஞ் சூரியனோடு
இலைக் கூட்டம்
இனிமையாய்ப் பேசியது
உச்சிப் பொழுதில்
சூரியனோடு

ஊடிக் கொண்டு
சுருண்டு படுத்து
இலைகள்
சூங்காரம் கொட்டின
மாலையில்
எண்ணெய்ப் பூசிக் கொண்டு
சூரியனோடு
இலைகள்
சுகமாய் பேசிய
எல்லா ரகசியங்களையும்
இப்போது அறிந்தேன்

....

சாம்பலை அள்ளிச்
செடிகளுக் கிறைத்தேன்
சாணம் பொறுக்கித்
தோட்டம் வளர்த்தேன்

அரும்புகள் வரும்
அறிகுறிகள் தெரிந்ததும்
நிலவுக் கடியில்
நானும் செடிகளும்

ரகசியம் பேசினோம்

....

நான் கவலையோடு
வருவதறிந்தால்
செடிகள் சிரித்துக் கொண்டு
வரவேற்புக் கொடுக்கும்
விடிய விடிய என்னோடு
விவாதங்கள் நடத்தும்
கவலைப் படாதே என்று
தைரியம் சொல்லும்

முதலில் ஒரு பூ
அரைகுறை மலர்ச்சியில்
அச்சமொடு வந்தது
அடுத்தடுத்த நாட்களில்
அரும்புகளெல்லாம்
விழித்துப் பார்த்தன

....

நிறங்களில்
மஞ்சளும் சிவப்பும்தான்
அழகின் அழகோ
பவுன் பவுனாய்
பூக்கள்
பந்து பந்தாய்
பூக்கள்

....

வீட்டிற்குள்ளே
கண்ணீர்க் கோடு
கொல்லைப் பக்கம்
வண்ணக் காடு
வீட்டிற்குள்
இல்லாத சிரிப்பு
தோட்டத்தில் வந்தது

....

வீட்டிற்குள்ளும்
தோட்டம் வரும்
தேசம் முழுதும்

தோட்டம் வரும்
நாங்கள்
இழந்த சந்தோஷம் எல்லாம்
அங்கு
எருவாக மாறட்டும்

....

மாங்கல்யம் தவிர
மற்ற நகையெல்லாம்
வட்டிக் கடையில்

இன்னும்
ஐந்து நாள் போனால்தான்
அரைச் சம்பளம்
கைக்கு வரும்

அலமாரி முழுதும்
தடவிப் பார்த்தேன்
ஒரு பத்துக் காசு நாணயம்

....

பத்துக் காசு கிடைத்ததை
வீடே பார்த்தது

அடுக்களையிலிருந்து
கறிவேப்பிலை கேட்டு
குரலொன்று வந்தது.

இரு
இந்த பத்தொன்பது மாதங்களில்
என் நெஞ்சே ஒரு
அடுக்களையாய்த்தான்
எரிந்து கொண்டிருக்கிறது

....

பத்துப் பைசா கிடைத்ததை
வீடே பார்த்தது
அய்ஸ் வேண்டுமென்று
பிள்ளை
அன்பாய்க் கேட்டான்

இந்த பத்தொன்பது மாத
அக்கினியை நான்
அள்ளி எறிய வேண்டும்
மகனே
அய்ஸ்
அப்புறம் பார்க்கலாம்
....
பெட்டிக் கடையில்
காசைக் கொடுத்தேன்
இந்தப் பேனாவில்
பத்துப் பைசாவிற்கு
மை அடை
....

வானமே கோபமா?

வானமே
நீ கருக்கொள்ள முடியாமல்
உன் ஜீவ அணுக்களைச்
சிதைத்தவன் யார்?

வானமே!
நீ கூட நினைக்கையில்
கூடாதென்று
கூறி விரட்டியவன் யார்?

வானமே!
நீ வாய் திறந்து பேசும்
ஜனநாயகம்
பாதி கூட வேண்டாமென்ற
பாதகன் யார்?

உனக்குத் தெரியுமா?
இங்கே

ஆறுகள் முதல்
அண்டாக்கள் வரை
அத்தனையும் அம்மணம்.

உனக்கு தெரியுமா?
மயில் தோகை பிரிந்து
மாமாங்கம் ஆகிறது
பசு மடியில் பால்
பவுடராகி வருகிறது
முற்றத்து ரோசாப் பதியன்
முளை கருகி வருகிறது.

ஆற்றைக் கடக்க
செருப்புக் கால்களா
ஓடமும் துடுப்பும்
நாணப் பட்டுப் போய்
நாணல் மறைவிலா?

உனக்குத் தெரியுமா?

ஒரே ஒரு பெண்
மகுடம் சுமக்கட்டுமென்று
எல்லாப் பெண்களும்
தண்ணீர்க் குடங்களைத்
தலைகளில் சுமக்கிறார்கள்.

அவர்கள்
ஒரு குடம் நீர் நிரப்ப
இரண்டு குடம்
கண்ணீர் சிந்துகிறார்கள்.

உனக்குத் தெரியுமா?

முனியசாமி
மூக்கம்மா தேவதை
கருப்பண சாமி
காளியம்மா தேவதை என்று

வகை வகையாய்ச் சாமிகள்
வத வத வென்றிருந்தாலும்
தக தக வென்னும் தெய்வம்
இங்கு
தண்ணீர் ஒன்றுதான்.

உனக்குத் தெரியுமா?
வானம் சிதறுவது
முன்பெல்லாம் நீர்த்துளிகள்
நாங்கள் இப்போது
அவைகளை
நவ ரத்தினங்கள் என்கிறோம்.

உனக்குத் தெரியுமா?
நாங்கள்
சோழ நாடு
சோக முடைத்து என்கிறோம்.

நிலம் பஞ்சாயிருக்க
மேகமே
நீ கல்லானதன்
காரணம் என்ன?

நீ இரவில் தெளித்த
பனி முத்துக்களை
மதித்து நடக்காமல்
மனிதர்கள் எல்லாம்
மிதித்து நடந்ததாலா?

உன் தோழர்களான
காடுகளை வெட்டி சிலர்
காசாக்கி விட்டதாலா?

கடலுக்குள் விழுவதை
கண்மாய்க்குத் திருப்பாமல்
கதை பேசித் திரிவதாலா?

காற்றுக்குச் சலுகை தந்து
நீருக்கு வரி
நிறையவே போட்டதாலா
காய்ந்து பொறிகிறாய்?

பூமியின் கொடுமைகளைக்
குனிந்து பார்த்ததில் வந்த
கோபமா உனக்கு?

ஆயிரம் ஆயிரம் அரசர்கள்
ஆண்டு ஆண்டு பார்த்தும்
பாரதத் தரித்திரம்

பாருக்கெல்லாம் தெரிவதை
வானத்திலிருந்து நீ
விசனமாய்ப் பார்த்தாயா?
எல்லாம் சரிதான்
ஆனாலும் மேகமே
நீ சந்தோஷப் படவேண்டும்.

நீ பெய்த மழையின்
பெரும் பகுதி நீரை
பணக்காரன் வீட்டுப்
புல் தரைகளே
வரவேற்றன.

ஆனால்
ஓட்டைக் கூரைகளில்
ஓடி வந்த மழைநீரை
எங்கள் வீடுகளிலுள்ள
எல்லாப் பாத்திரங்களையும்
நீட்டி நீட்டி நாங்கள்
வரவேற்றோமே
அதற்காக சந்தோஷப்படு

எங்கள் வீட்டு வாசல்களில்
ஆட்சியாளர்கள் வந்து

வறுமையே வெளியேறு என்று
வண்ணம் வண்ணமாய்
எழுதி வைத்திருந்ததை
உன் தூறல்கள் பட்டுப்பட்டு
சாயம் வெளுக்க வைத்ததே
அதற்காகவும் நீ
சந்தோஷப் படு

நீ மனது வைத்த காலத்தில்
கண்மாயோ கரை புரளும்
ஊருணியில் அலை அடிக்கும்
வயல் பயிர் தலை மட்டும்

தண்ணீரில் தள்ளாடும்
வரப்பெல்லாம் நீர் கசியும்
வாய்க்காலில் நீர் ஓடும்
சிறிசு முதல் பெரிசு வரை
கச்சா வலை வீசும்
பத்தை வைத்து மீன் பிடிக்கும்
கொட்டானில் அள்ளிக்
கொண்டு வரும் வீடுகளில்
அய்.ஆர்.எட்டும்
அயிரை மீன் குழம்பும்
அரைக் கீரை கடைசலும்
அணி சேர்ந்து தட்டில் வரும்
மழையே

நீ வானத்திலிருந்து
ஊஞ்சல்களில் இறங்கியதை
ஜன்னல்களில் பார்த்து
நாங்கள் சந்தோஷப் பட்டோமே

ஆகாயத்திலிருந்து நீ
ஆடி ஆடி இறங்கியதை
அண்ணாந்து பார்த்து
நாங்கள் ஆனந்தப் பட்டோமே

நடு வீட்டில் அருவி விழும்
முற்றத்தில் நீர் பிடிப்போம்
நீர் பிடிக்கும் சாக்கில்
மேல் முழுதும் நனைந்திருப்போம்

முழுக்கவும் குளித்தால்
கூதலில்லை என்று சொல்லி
முதுகில் மழை வாங்கி
முகத்தில் மழை வாங்கி
முழுவதும் குளித்திருந்தோம்.

கடல் நீரே!
எங்களுக்காய் உயிர் துறங்கள்
நீர் ஆவி பிரிந்து
வானம் போங்கள்
உப்பில்லா உயிரோடு
மறுபடியும் வாருங்கள்
ஊஞ்சல்களில் வாருங்கள்

சிறகுகள் வாங்கி...

அவன் மனிதனுக்கு
புறாக்களிடம் போய்
சிறகுகள் வாங்கினான்
சிங்கத்திடம் போய்
கர்ஜனை வாங்கினான்
பூக்களிடம் போய்
நறுமணம் வாங்கினான்
பழங்களிடம் போய்
கனிவை வாங்கினான்
தன்னிடமிருந்த
அறிவைக் கொடுத்தான்
தட்டிக் கொடுத் தொரு
பெயரும் வைத்தான்
'புதிய மனிதன்'

ஆதாம் அப்போதுதான்
முழுதுமாய் மனிதனானான்.

அதுவரை ஞானிகளுக்கு
வனங்களும் வானமுமே
தத்துவங்கள் தர
அவனுக்கு மட்டும்தான்
வாழ்க்கையைப் பார்த்ததும்
தத்துவம் வந்தது.

வாழ்நாளில் அவன் வாழ
பல நாடுகளும்
பல சிம்மாசனங்களும்
ஒப்புதல் தரவில்லை

மரணத்திற்குப் பின்
ஒவ்வொரு நாடாய்
ஒவ்வொரு சிம்மாசனமாய்
ஏறிக் கொண்டிருக்கிறான்
அவன் கல்லறைக்கு
நூறு வயதாகிறது
ஆனால்
அவனைக் கொன்றொழிக்க
நாடு நாடாய்ச் சதிகள்

முதலாளிகளிடமிருந்து
விடுதலை பெற்றவர்களின்
உணவுத் தட்டுகளில்
அவன் உருவப் படமும்
தத்துவ மொழியும்
பார்வைக்கப்பால்
பதிக்கப்பட்டிருக்கிறது.

உழைக்கும் மக்கள்
உணவு வகைகளை
ஒவ்வொரு வேளையும்
அவன் தாடியைத் தடவித்தான்

தட்டிலிருந்து எடுத்து
வாய்க்குள் போடுகிறார்கள்

மூதாதையர்கள்சிந்திய
ரத்தம் முழுதையும்
முதலில் அளந்தவன் அவனே

உற்பத்திப் பொருள்களின்
ஓரத்தில் படிந்த
ரத்தத்தைப் பார்த்தழுத
முதல் மனிதன் அவனே

அவன்
மின்சாரத்தை
புத்தகங்களில் அடைத்து
மனிதனிடம் கொடுத்தான்
பிடித்தவர் தலைகளில்
பல்புகள் எரிந்தன

பனித்துளிகளை எல்லாம்
சேகரித்து
பாலருவியாய் ஓடவிடும்
பொறுமை அவனுக்கிருந்தது
அவனுக்கும்
விரக்தி வந்திருந்தால்
விரக்திக்கு மருந்து
கிடைத்திருக்காது

பழைய சமூக அமைப்பிற்கு
சவப்பெட்டி ஒன்றை
தன் கையாலேயே
செய்து முடித்த பின் தான்
மானுடம் அவனது சவப் பெட்டியில்
மங்காத ஒளி விளக்கை
ஏற்றி வைத்தது

அவனுக்கு
இரண்டு பெயர்கள்
ஒன்று மார்க்ஸ
மற்றொன்று உண்மை.

உபதேசங்கள்

வெகு காலம் முன்பு
வேர்க்க விறு விறுக்க அவன்
வெட்டி வெட்டி வந்தான்
வந்தவன் வயிறு
வாடிக் கிடந்தது
அந்தப் பசிக்கு
அனைத்து ருசியும்
ஒன்றாய்ச் சேர்ந்த
அமுதம் வேண்டும்
ஆனால் அங்கே
கூழ்தான் இருந்தது
குடிக்கப் போனான்
அப்போது
எதுவுந் தராத
எஜமானன் வந்தான்
உபதேசம் செய்தான்

'கூழானாலும்
குளித்துக் குடி'

எஜமானன் சொல்லை
ஏற்றுக் கொண்டான்
வாடிய வயிற்றை
மூடிப் போட்டு
குளக்கரைப் பக்கம்
குளிக்கப் போனான்
கந்தலை அவிழ்த்து
கரையில் வைத்தான்

பட்டு உடையில்
பசியில்லா எஜமானன்
மறுபடி வந்தான்
உபதேசம் செய்தான்

‘கந்தலானாலும்
கசக்கிக் கட்டு’
கந்தலைக் கசக்கி
கசடறக் குளித்து
கூழை எடுத்தான்
குடிக்கப் போனான்
நீறு பூசிய நெற்றியும்
நெஞ்சு நெகிழும்
பக்தியுமாய்
எஜமானன்
மறுபடி வந்தான்
உபதேசம் செய்தான்
‘கடவுளை நம்பினோர்
கைவிடப்படார்’

எடுத்த கூழை
இருப்பிடம் வைத்து
கோயிலை நோக்கி
கும்பிடப் போனான்

இவனுக்கு முன்னால்
இவன் எஜமானன்
வந்து நின்று
அபிஷேகம் செய்து
ஆரத்தி எடுத்து
வரங்கேட்டு நின்றான்
இருப்பது போதாது
இன்னும் வேண்டுமென்று
எஜமானன் வந்திருந்தான்

சோறில்லை சுகமில்லை
எதுவுமே இல்லை யென்றும்
ஏதேனும் கொடு என்றும்
இவனும் போயிருந்தான்

இவன் கும்பிட்ட கரங்களுக்குள்
கூடியது யோசனைகள்
என்ன சாமி இது
எஜமானன் சாமியே எனக்கும் சாமியா

ஏஜமானனுக்குச் சோறென்றால்
எனக்குக் கூழ் தானே
கொடுத்து வரும்
எனக்குக் கந்தலெண்றால்
ஏஜமானனுக்குப் பட்டல்லவா
கிடைத்து வரும்

என்ன இது
இடக்காயிருக்கிறது
பெரிய சாமிகளிடம் போய்
பிரயோசனம் இல்லை என்று
சின்னச் சின்னச் சாமிகளை
செய்து வைத்துக் கும்பிட்டான்.

கந்தலைக் கசக்கி
கசடறக் குளித்து
கடவுளைக் கும்பிட்டு
கூழை எடுத்துக்
குடித்து முடித்தான்
பசிக்கிறக்கம்
பாதிதான் தணிந்தது

வேதம் ஒரு புறம் முழங்க
இவன் வயிற்று
ஓலம் மறுபுறம் தொடர
சாஸ்திரம் ஒரு புறம் மலர

இவன்
தரித்திரம் மறுபுறம் வளர
குடித்த கூழும்
உடுத்திய கந்தலுமாய்
வேனலிலும் கூதலிலும்
வெகு காலம் வரைக்கும்
இவன்
கொடுத்த வேலைகளைச்
சிரத்தையாய்ப் பார்த்தான்

காலங் காலமாய்
எஜமானன் சொல்லி வந்த
ஏராளத் தத்துவங்கள்
இவன் மூளைக்குப் புரிந்தன
வயிற்றுக்குப் புரியும்
தத்துவம் எதுவும்
வரவேயில்லை.

பசுமை இருந்த போதும்
இவன்
பட்டினி கிடந்தான்
பஞ்சம் வந்த போதும்
இவன்
பட்டினி கிடந்தான்
இவனைப் பார்த்து
எப்போதோ ஒருவருக்கு
இரக்கம் வந்துதான்
'விரதம்' வந்தது.

ஆட்சிகள் மாறிய
அதிசயம் நடந்தது
அவன் வயிற்றுப்
பசி மட்டும்
அடங்கவுமில்லை.
முடங்கவுமில்லை.

ஆசையாய் அறுத்த நெல்
அவனுக்கில்லை
ஆசையாய் நெய்த ஆடை
அவனுக்கில்லை
ஆசையாய் அமைத்த வீடு
அவனுக்கில்லை.

ஆசையாய் முகர்ந்த நீர்
அவனுக்கில்லை
ஆசையாய் பீய்ச்சிய பால்
அவனுக்கில்லை.

ஆசை விரகத்தில் அவன்
ஆலாய்ப் பறந்தான்
அப்போதும் வந்தான்
எஜமானன்
உபதேசம் செய்தான்.

‘ஆசைகளை அடக்கு
அந்த
கௌதம புத்தனைப் பார்’

எஜமானன் ஆசைகள்
ஏறிக் கொண்டிருக்க
இவன் மட்டும் ஆசைகளை
ஏன் அடக்க வேண்டும் என
எண்ணிப் பார்த்தான்
எவ்வளவு நாள்தான்
இப்படியே வாழ்வதென்று
எழுந்தான் ஒருநாள்
அரிவாளும் கம்புமாய்
அலம்பலுக்குப் புறப்பட்டான்
அப்போதும் வந்தான்
எஜமானன்
உபதேசம் செய்தான்
‘அஹிம்சையின் தந்தை
அண்ணல் காந்தியைப் பார்’

சோறு வரும் என்று தான்
சுதந்திரப் போரில் நான்
சூடுகளை வாங்கி வந்தேன்
எப்போது சோறு வரும்
எப்போது வாழ்வு வரும் என்று
ஏங்கிக் கதறினான்

அழுது கொள்
தொழுது கொள்
ஆனால் அடங்காமல் நீ
ஆர்த்தெழும் பட்சத்தில்
ஆயிரம் சட்டம் வரும்
அவசரச் சட்டம் வரும்
எழுந்திருக்க நினைக்காதே
எங்களை நீ பகைக்காதே
என்றான் எஜமானன்

புத்தன் ஒருபுறம்
புனிதமான
காந்தி ஒருபுறம்
மட்டமான
எஜமான் ஒருபுறம்
அவசரச்
சட்டம் மறுபுறம்
எங்கு திரும்பினும்
இவனுக்கு எம தரிசனம்

இதை ஏழை நாடென்று
எல்லோரும் சொல்வார்கள்
ஏழை நாட்டில்தான்
ஏர் இந்தியா பறக்குமா
ஏழை நாட்டில்தான்
ஏசியாத் நடக்குமா
இது ஏழைகளின் நாடுதான்
ஆனால்
பணக்காரர்களின் சொர்க்கம்
என்று
பதறிக் கதறினான்.

பசி போக்காத தேசமே
பாவ தேசம்தான்
பசி அடங்காத தேசத்தில்
யாருமே
அடங்க மாட்டார் என்றான்

எஜமானன்
மறுபடி வந்தான்
கடைசி உபதேசத்தைக்
கடுமையாய்ச் சொன்னான்

இது
ரிஷிகள்
வாழ்ந்த பூமி
காற்றை உண்டு
காற்றைப் பருகி
காற்றைச் செரித்த
ரிஷிகள் வாழ்ந்த பூமி

காற்றுக்கு இன்னும்
வரி வைக்கவில்லை
காற்றுக்கு இன்னும்
விலை வைக்கவில்லை

நீ
இரைப்பைகளையும் சேர்த்து
சுவாசப் பைகளாக்கு
எல்லாம் சரியாகுமென்றான்

வக்கிரம் குடை பிடிக்க
அக்கிரமம் ஆட்சி செய்ய
வறுமைக்கு வந்த விடை
இது தான்

ஏழை இந்தியனுக்கு
தேசக் கொடியை விட
வயிற்றுக்கு
ஈரத் துணியே இதமாயிருந்தது
பட்டினி கிடந்தவன்
பாய்ந்து எழுந்தான்

பார்க்க வைத்துத் தின்னும்
பாழான கூட்டமிது

கேட்டால் செவிடாகும்
கீழான கூட்டமிது

பாண்டவர் ஆண்ட போதும்
பசி தான்
பாபர் ஆண்ட போதும்
பசி தான்
பாண்டியன் ஆண்ட போதும்
பசி தான்
பாரதம் பிறந்த போதும்
பசி தான்

சுதந்திரம் வந்த போதும்
பசி தான்
சூத்திரன் ஆளும் போதும்
பசி தான்
சட்டம் சோறு போடவில்லை
போட்ட
சத்தம் சோறு போடவில்லை
பாட்டாளிநானே
பாரதத்தை ஆளுவேன்
பாட்டாளி ஆட்சியில்தான்
பாரதத்துப் பசி போகும்
பாரதத்துப் பசி போகும்.

அந்த ஜனவரி - 19

முடியாமல் பாடி ஓய்ந்த
தொண்டைகளை ஒழுங்காக்கி
ஒரு மதுர சங்கீதக் கச்சேரிக்கு
ஆயத்தம் செய்ய
குயில் கூட்டத்தின்
ஒரு நாள் மௌனம்!

கறுப்பு வானத்தைக்
கண்டு கண்டு ஆடிய
மயில் கூட்டம்
மழையே காணாது
'கறுப்பு'களை மறுத்து
இறகுகளைச் சுருட்டி
அலகுகளை உயர்த்தும் நாள்!

ஓடி ஓடித் தேன் சேர்த்தும்
ஒன்றுக்கும் உதவாமல்
வேடருக்கு விருந்தாக்கும்
வேதனைகள் தாளாது
தேனீக்கள் கூட்டம்
போராடப் போகும் நாள்!

நீரூற்ற வரவில்லை
நிலந்திருத்த வரவில்லை
பூச்சி மருந்தடிக்கும்
புத்தியே வந்ததில்லை
பலனைப் பறிக்க மட்டும்
பாதகர்கள் வருவதால்

பழுத்துப் பழுத்து
அலுத்துப் போன
பழ மரங்கள் ஒருமுகமாய்
இலைமறை பழமறைவாய்
இருந்துவிட எண்ணும் நாள்

பாதாதி தேசம்
சோரச் சோர
பல்லக்குத் தூக்கிய
பாட்டாளிக் கூட்டம்
பாதையோரமாய்
பல்லக்கை இறக்கி விட்டு
பதாகைகளைத் தூக்கும் நாள்!

ஊழிக் கூத்தின்
ஒத்திகைத் திருநாள்
பிரளயம் ஒன்றின்
பிரகடனப் பெரு நாள்

செப்பு மொழி பதினெட்டும்
சேர்ந்து அணிவகுத்து
வயிறும் வர்க்கமும்
வட்டாட வரும் நாள்

உழைப்புச் சுரண்டலுக்கெதிராய்
அழுக்குச் சுரண்டல்
அரங்கேறப் போகும் நாள்

கனவுக் கண்களும்
கனத்த இதயங்களும்
கறுத்த திசைகளை
வெறுத்து ஒதுக்கி
பொன்னுலகத் திசை நோக்கி
போகின்ற காட்சியெல்லாம்
வீர சௌந்தர்யம்
வீர சௌந்தர்யம்.

இந்தியா முழுவதும் உள்ள தொழிலாளர் 1981 ஜனவரி 19ல் நடத்திய ஒருநாள் வேலை நிறுத்தத்தை ஒட்டி தீக்கதிரில் வெளிவந்த கவிதை.

ஆகாசம் பார்த்ததில்லை

தவழ்ந்த போது
பெண்
தகப்பனுக் கடிமை
கையைப் பிடித்ததும்
கணவனுக் கடிமை
கிழவி யானதும்
மகனுக் கடிமை

ஆண்கள் பூட்டிய
அடிமை விலங்கை
அவளிடமிருந்து
அகற்றிச் சென்றது
மரணம் ஒன்றுதான்

நாலு வர்ணத்தில்
நாடு
நாகரிகம் இழந்தது
நாலு குணத்தில
பெண் நாசமாய்ப் போனாள்

மேல்ஜாதி கீழ்ஜாதி
எல்லா ஜாதியிலும்
ஒரு உள்ஜாதி உண்டு
அதுதான்
பெண்ஜாதி.
ஆனாலும் பாரதி
ஜாதிகள் இல்லையடி
பாப்பா என்று
ஒரு பெண் குழந்தையிடமே
பாடிக் காட்டினான்
அவள்தான்
பெரியவளானதும்
பெயருக்குப் பின்னால்
ஜாதிப் பெயரைப்
போட்டுக் கொள்ளாதவள்

அகிலா முதலியார் என்று
அவள் கையெழுத்திட மாட்டாள்
அகிலாண்ட முதலியா ரென்று
ஆண்தான் எழுதுவான்

காதலன்முன் அவள்
கட்டை விரல் கீறி
பூமியைப் பார்த்தாள்

கணவன்முன் அவள்
கண்களைத் தாழ்த்தி
பூமியைப் பார்த்தாள்

அடுத்தவன்முன் அவள்
அச்சப்பட்டும்
அவஸ்தைப்பட்டும்
பூமியைப் பார்த்தாள்

அவள் பார்வைகளின்
எண்ணற்ற எண்ணிக்கையாலே
பூமி
பூமா தேவி என
பெண்பாற் பெயரானது.

காதலன் கணவன்
அடுத்தவன் என்று
ஆண்களெல்லாம்
அவளைக் குனிந்தே
நிற்க வைத்தார்.

அவள் அண்ணாந்து நின்று
ஒரு நாளும்
ஆகாசம் பார்த்ததில்லை

குட்டக் குட்டக்
குனிந்து கிடந்தாள்
குனிந்து குனிந்து

கூனிக் கிடந்தாள்
கூனிக் கூனிக்
குறுகிக் கிடந்தாள்
குறுகிக் குறுகிக்
குற்றுயிரானாள்.

ஒரு நாள்
ஆகாயம் பார்க்க
அவளுக்கு
அனுமதி வந்தபோது
அவளே
ஆகாயம் போயிருந்தாள்.

அறிவுஜீவி

வேர்வை இவனுக்கு
வேப்பங்காய்
காற்றாட காலாட
இவனுக்கு
ஆசனம் ஒன்று
அவசியம் வேண்டும்
அரியாசனம் கேட்பான்
இல்லையேல்
சரியாசனம் என்பான்
சிரசாசனமும் இருப்பான்
இதில் ஏதேனும் ஒன்று
சிக்கித் தீரும் வரை

அறிவு சேவைக்கு வராமல்
இவன்
ஜீவியத்திற்கு வந்தது
அதனால்
அக்கினியை அகத்தில் வைத்தான்
அசிங்கத்தைப் புறத்தில் வைத்தான்

கஞ்சி குடிப்பதற்கிலாதவன்
காரணங்கள் அறிவான்

அநியாயங்களை இவன் அறிவு
அடையாளம் காண்கையில்
அடுப்பு இவன் வாய்க்கு
விலங்கைப் பூட்டும்.

இவன்வீட்டு அடுப்பில்
எரிந்துவரும் சத்தியங்கள்
ஏழைவீட்டு அடுப்பை
நீர்க்கவைத்த சங்கதிகள்

சம்பளத்தை வாங்க
சாகஸங்கள் செய்தான்
இவன் ஆசைப்பட்டது
தாசில் பண்ண
அகப்பட்டது
சேவகம் செய்ய

நியாயம் கோரி
வண்ண வண்ணங்களில்
எல்லோரும் கொடிபிடிக்க
இவனும் கொடிபிடித்தான்
எப்போதும் வெள்ளைக்கொடி

முதலாளிகளின் முகஜாடைக்கு
இவன் மாற்றிமாற்றி
அவதாரம் எடுத்தான்
இவன் கைப் பேனாவும்
அரிதாரம் பூசித்தான்
அருள்மொழிகள் உதிர்க்கும்
அற்பங்களுக்கு ஆசைப்பட்டான்
சொற்பங்களுக்குச் சோரம் போனான்

வலம்மாறி இடம்மாறி
வகைவகையா யெழுதி வந்தான்
குயிலிடம் ஆடச் சொன்னான்
கூடுவதை ஒதுக்கி வைத்தான்
கூடாததை புதுக்கித் தந்தான்

அரைத்த மாவை இவன்
கரைக்கப் போகையில்

முதலாளிமுன் நின்று
அரைத்த மாவையே
அரை யென்றான்

இவன் மூளையைப் பொடிசெய்து
முதலாளி
முகத்தில் பூசிக் கொண்டான்
இவன் ஆண்மையைக் கரைத்து
முதலாளி
பானமாய்க் குடித்து வந்தான்.

ஈரவிழிகளுக்கெதிராய் கனன்ற
காரைவிழிகளின்
கடைக்கண் பார்வைக்கு
இவன் அறிவு
அடகு போயிருந்தது
திக்குத் தெரியாமல் தேசம்
தடுமாறிப் போகையில்
திசை காட்டும் கருவியை
நகைப் பெட்டிக்குள் இவன்
நைச்சியமாய்
ஒளித்து வைத்தான்.

இருண்ட தேசத்தில்
எழுந்து நிற்க இவன்
எத்தனிக்கையில்
முதலாளிமாரின்
சுட்டு விரலசைப்பில்
சுருண்டே போனான்.

ஒவ்வொரு வேளை
உள்மனம் பேசியதால்
பேனாவை எடுத்துக் கொஞ்சம்
சிவப்பு மையூற்ற
சிந்தித்திருக்கையில்
முதலாளி முன்வந்து
பச்சை மையூற்ற
பணித்துவிட்டுப் போய்விட்டான்.

வேர்வைக்காரன் ஒருநாள்
இந்த விவேகக்காரனின்
வீட்டிற்கு வந்தான்
முதலாளிக்காக எங்கள்முன்
சட்டாம் பிள்ளையாயிருந்த
சரித்திரத்தை முடித்துக் கொள்
எல்லோரும் கிளம்பி விட்டோம்
வெள்ளைக் கொடியை
வீசி எறி
எங்கள் கொடியை
சேர்த்துப் பிடி
சட்டாம் பிள்ளை எனினும்
சம்பள அடிமையே
கூடவே வா
சப்தஸ்வரங்களில் நீ
செத்த ஸ்வரமல்ல
கொஞ்சம்
பித்தஸ்வரம்
இந்த அணியில்
இழந்த மானத்தை
இப்போனும் ஈடு செய்ய
கிளம்பி வா
கிளர்ந்து வா என்றான்

எட்டிப் பார்த்தான்
எல்லா மனிதரும்
சாரி சாரியாய்
சமருக்கான சங்கீதத்தோடு
புறப்படும் ஓசை
பூரணமாய்க் கேட்டது

வேர்வைக்காரன் கை
விவேகக்காரனின் கையை
அழுத்திப் பிடித்தது
வெள்ளைக் கொடி
கீழே விழுந்தது
ரத்தக் கொடி
மேலே எழுந்தது.

ஏனென்று.....

ஒவ்வொரு அன்னியனையும்
உற்று நோக்கையில்
ஒருகண்ணால் மதந்தேடு
மறுகண்ணால் ஜாதிதேடு
இதயத்தால் இனம்தேடு
காதுகளால் மொழிதேடு
தேடியது மாறிவிட்டால்
கைகளுக்கு அரிவாள் தேடு
என்று
எதை எதையோ தேடும்படி
எடுத்தெடுத்து உரைத்தவர்கள்
வயிற்றுக்குத் தேடுவதை
வக்கணையாய் உரைத்தார்கள்.
அவையெல்லாம் ஏனென்று
எவனுமே சொல்வதில்லை.

ஒவ்வொரு மதத்திலும்
உயர்ந்தவன் தாழ்ந்தவன்
எல்லா ஜாதியிலும்
ஏழை பணக்காரன்
அத்தனை இனங்களிலும்
ஆண்டான் அடிமை
இவையெல்லாம் ஏனென்று
எவனுமே சொல்வதில்லை.

மதச் சண்டைகளில்
மாண்டவர்கள் ஏழைகளே
சாதிச் சண்டையெல்லாம்
காவுகொண்டது ஏழைகளை
மொழிச் சண்டைகளில்
முழுகிச் செத்ததெல்லாம்
ஏழைகளே ஏழைகளே
இவையெல்லாம் ஏனென்று
எவனுமே சொல்வதில்லை.

சக்கரவர்த்திகள்
தங்கள் ஜாதியை
சூரியகுலம் என்றார்கள்
சிற்றரசர்கள்
தங்கள் ஜாதியை
சந்திரகுலம் என்றார்கள்.

மகுடங்களில் பதித்த
முத்துக்கள் பிரகாசிக்க மட்டுமே
சக்கரவர்த்திகளுக்குச்
சூரியன் தேவைப்பட்டான்
உப்பரிகைகளின்
ஒய்யார விருந்துகளுக்கு மட்டுமே
சிற்றரசர்களுக்குச்
சந்திரன் தேவைப்பட்டான்

ஆனால்
பகல் முழுதும் சூரியன்
பழுத்துக் காய்கையில்
பச்சைகளை நிலங்களில்
படைக்கப் போன
பாட்டாளி மக்கள்
பாதாதி கேசம்
பதறப் பதற
சூரியக் கதிர்களை
சுடச்சுட வாங்கியும்
சூரிய குலமில்லையாம்

இரவுகளில்
ஓட்டு வீடும் இல்லாமல்
கூரை வீடும் இல்லாமல்
வெட்ட வெளிகளில்
பொட்டல் நிலங்களில்
சந்திரனின் குளிர்ச்சியை

சந்ததி சந்ததியாய்
உடல் முழுதும் வாங்கி

உறங்கி எழுந்தவர்கள்
சந்திர குலமில்லையாம்
இவையெல்லாம் ஏனென்று
எவனுமே சொல்வதில்லை

சாதிகளும் மதங்களும்
சர்க்காரை எதிர்ப்பதில்லை
சர்க்காரும் பதிலுக்கு
சாதிகளை எதிர்க்காது
சர்க்காரின் ஆரோக்கியத்திற்கு
சாதியும் மதமும் தானே
சாஸ்வத மூலிகைகள்
இவையெல்லாம் ஏனென்று
எவனுமே சொல்வதில்லை

பயத்தால் பக்தி வந்தது
பக்தியைப் பார்த்து
இப்போதும் பயம் வருகிறது
அவ்வளவு பக்தி

ஆனாலும்
காவிரியில் தண்ணீர் வர
கடவுள்கள் அருளவில்லை
மழைபொழிய இடிமுழக்க
மகமாயி அருளவில்லை
அரிசி விலை குறைக்க
ஆண்டவனும் வரவில்லை

பருப்புவிலை குறைக்க
பகவானும் வரவில்லை
இரும்புவிலை குறைக்க
இந்திரனும் வரவில்லை

கண்ணீர் விடும்போது
கர்த்தர் வரவில்லை
அழுது புலம்புகையில்
அல்லா வரவில்லை

அங்கிங் கெனாதபடி
எங்கும் நிறைந்தவன்
அவசர நேரத்தில்
அகப்பட மறுக்கிறான்
இவையெல்லாம் ஏனென்று
எவனுமே சொல்வதில்லை.

எல்லா நாடுகளிலும்
கடவுள்கள் உண்டு
ஆனால் இந்தியா தேசம் போல்
இலட்சங்களில் தெய்வங்கள்
எங்கேயும் இல்லையாம்

ஆண் தெய்வங்கள்
பெண் தெய்வங்கள்
அலி தெய்வங்கள் என்று
இந்தியா தேசம்போல்
இலட்சங்களில் தெய்வங்கள்
எங்கேயும் இல்லையாம்

ஏராளம் தெய்வங்கள்
இருப்பதாலேயே
அவர் பார்ப்பார்
அரிசி விலையை என்று இவரும்
இவர் பார்ப்பார்
இரும்பு விலையை என்று அவரும்
இப்படி
எல்லாத் தெய்வங்களும்
எங்கெங்கோ போனார்கள்
இலாகாப் பிரிவினைகள்
இந்தியத் தெய்வங்களுக்கு
ஒழுங்காக்கப்படாததால்
ஒரு சாமி கூட
ஒழுக்கமாயில்லை
இவையெல்லாம் ஏனென்று
எவனுமே செல்வதில்லை

பங்களாத் தோட்டம்

சின்ன ஊரளவு
சுற்றுச் சுவர்க்குள்
பெரிய சொர்க்கம் போல்
பங்களா நிற்கும்
பிருந்தாவனம் போல்
தோட்டம் சிரிக்கும்

ஒரு நிறம் கூட
பாக்கியில்லாமல்
தோட்டம் முழுதும்

ஒரு சுகங்கூட
மீதி விடாமல்
பங்களா எங்கும்

சௌந்தர்யப் பாகில்
பங்களாச் சுவர்கள்
சௌந்தர்ய அணுக்களில்
பங்களாத் தோட்டம்

சின்ன ஊரளவு
சுற்றுச் சுவர்க்குள்
பெரிய சொர்க்கம் போல்
பங்களா நிற்கும்
பிருந்தாவனம் போல்
தோட்டம் சிரிக்கும்

கந்தல் காக்கிச்
சட்டை அணிந்து
தோட்டக் காரன்
கூனல் விழுந்து
கொத்து கொத்தென்று
கொத்திக் கொண்டும்
கொத்து கொத்தென்று
இருமிக் கொண்டும்
தோட்டமெங்கும்
அலைந்து திரிவான்

பங்களா மனிதர் போல்
பள பளப்பாக
சிலு சிலுப்பாக
தாவரம் யாவையும்
பள பளப்பாக
சிலு சிலுப்பாக
தோட்டக் காரன்
கூனல் விழுந்து
கொத்திக் கொண்டும்
இருமிக் கொண்டும்
தோட்ட மெங்கும்
அலைந்து திரிவான்.

சுற்றுச் சுவரின்
கதவிற்கும்
பங்களா வாசல்
கதவிற்கும்
இடையே பரந்த
தோட்டக் கடல்

பாலம் போலொரு
சாலை செல்லும்
பக்க ஓரம்
பவளப் பூக்கள்
தோட்டப் புத்தகம்
திறந்தது போல்
நீளச் சாலை
வகிடாய்ப் பிரிக்கும்.

பங்களா வாசலில்
புறப்படும் கார்கள்
தோட்டச் சாலையில்
மெல்ல ஊரும்

காரில் அமர்ந்த
கனவானுக்காக
நீலப் பூக்கள்

கண்ணைச் சிமிட்டும்
மஞ்சள் மலர்கள்
மயங்கி ஆடும்

காரில் அமர்ந்த
கனவானுக்காக
தோட்டக்காரன்
கூனல் நிமிர்த்தி
நேராய் நின்று
தாவரமாவான்

தோட்டச் சாலையில்
ஊர்ந்த கர்ர்
சுவருக்கருகே
நின்றது ஒரு நாள்

வணங்கிய கையை
மடக்கிய வண்ணம்
தோட்டக்காரன்
ஓடிச் சென்றான்

கப்பல் காரின்
கறுப்புக் கண்ணாடி
கசகச வென்று
இறங்கி வந்தது.

சுற்றுச் சுவரில்
குரோட்டன்ஸ் வளர்ச்சி
ஒழுங்காயில்லை
அழகாயில்லை

மேலும் கீழும்
செடிகள் வளர்ந்தால்
பார்க்க எப்படி
அழகாயிருக்கும்

அளவிற்கதிகம்
வளர்நத செடிகளை
கத்திரி எடுத்து
வெட்டி விடு

சமமாயிருந்தால்
அழகாயிருக்கும்.

அட்சய பாத்திரம் அலுமினியப் பாத்திரமும்

அவனிடம் ஒரு
அட்சய பாத்திரமுண்டு
அள்ளிஅள்ளிக் கொடுப்பான்
அடுத்தவர்க்கெல்லாம்
அவன் வயிற்றுப் பசியென்றால்
அட்சய பாத்திரம்
கிள்ளிக் கூடத் தராது.
அப்போதெல்லாம்
அட்சய பாத்திரத்தை
ஆகாயத்தில் எறிந்து விட்டு
அலுமினியப் பாத்திரமோடு
அலைவான் திசைகளெங்கும்

எந்தச் சாயமும்
பூசிக் கொள்ளாத இவன்
விவசாயம் செய்கிறான்.

பூமித்தாளில்
இவன் கீறிய கவிதைகளை
யாரும் காதில் கேட்பதில்லை
வாயிலும் வயிற்றிலும்
கேட்டுக் கொள்வார்கள்.

கடன்களால்
கடன்களுக்காக
கடன்களாலேயே என்பது
இவன் வாழ்க்கைத் தத்துவம்

எல்லோரும்
ஆயிரங் காலத்துப் பயிர்
இவன் மட்டும்
ஆறு மாதப் பயிர்

இவனுக்கு எப்போதும்
நீர்ப் பஞ்சம்
நிலப் பஞ்சம்
உரப் பஞ்சம்
வேர்வையும் கண்ணீரும்
எப்போதும் உபரிகள்

களத்தில் விற்றதை
கடையில் வாங்குவான்
மிளகாய் பறித்தால்
காயப் போடுவது கூட
கமிஷன் கடையில்தான்.

சிலர் இளமைக்கு
காய கல்பம் வாங்க
இவன்
வறுமைக்குக் காய கல்பம்
வாங்கினான்

மாடு கட்டிப் போரடித்தால்
மாளாது செந்நெல்லென்று
யானை கட்டிப் போரடிக்கும் களமும்
பூனைக்குட்டி நாறடிக்கும் அடுப்புமாய்
இவன்
பாடுபட்டுப் பாழ்பட்டுப் போனான்.

இந்தியக் கலாச்சாரத்தை
இவனே
இடைவிடாது காப்பான்
மாட்டுக்கும் மாரியாத்தாளுக்கும்
சேர்த்தே பொங்கல் வைப்பான்

வயலில் விளைந்ததையும்
வரப்பில் முளைத்ததையும்
தெய்வங்களுக்கெல்லாம்
நெய்வேத்தியமாக்கினான்.

சாமி கும்பிடவரி
சர்க்கார் நடத்த வரி
எல்லாம் சரி
என்ன மாறுதல்
இவனுக்கு வந்தது
ஜப்தி வந்தது
சகல துயரமும்
ஜல்தியில் வந்தது.

இவன் தாலாட்டிய பிள்ளைகள்
சாணம் பொறுக்கும்
ஆராதித்த தெய்வங்கள்
வேடிக்கை பார்க்கும்

இருட்டில் பறித்த
இலவங்காய்களை
என்னகறி செய்வதென்று
ஏங்கி அழும்
அப்பிராணி மனிதனிவன்.

இந்தப் பறவை தான்
அற்ற குளத்தை விட்டு
இன்னும் அகலாத பறவை

குப்பை கூளமும்
கிடைக்காத காலத்தில்
இந்தப் புஞ்சைப் பறவை தன்
இறகுகளைப் பிய்த்தெடுத்து
இளசுகளின் கூடு செய்யும்

ஆனாலும்
கற்பனைச் சுகம் இவனுக்குக்
கை வந்த கலை
ஈச்சை பயிரிடவும்
ஈரமில்லா நிலத்தில்
திராட்சை பயிரிட
தினம் ஒரு கனவு.

புரட்சித் தோழனே

அழுகி குளுகுளுக்கும்
அசிங்கச் சமூகத்தை
புதிதாக்க வந்த என்
புரட்சித் தோழனே
எங்கோ ஓர் மூலையில்
என்ன செய்து வருகிறாய்?

குப்பை கூளமெல்லாம்
கோபுர உச்சிக்குப் போகையில்
முத்துப் பவளமே நீ
மூலையில் இன்னும் ஏன்?

ஜாதிகளும் மதங்களும்
நூறு நூறல்ல
இரண்டே இரண்டு தான்
வறண்டவன்
ஒரு ஜாதியாய் மதமாய்
சுரண்டு பவன்
ஒரு ஜாதியாய் மதமாய்
வறண்டவன் ஜாதிக்கு
வழி சொல்ல வா.

திசைகள் நான்கல்ல
திசைகள் இரண்டுதான்
சோஷலிஸ திசை ஒன்று
சுரண்டல் திசை ஒன்று

சோஷலிஸ திசை காட்டும்
கருவியாய் மாறி வா
ஊர்தோறும்
நகர்தோறும்
திசை காட்டும் கருவிகளாய்
தினமும் நீ மாறி வா.

விரக தாபங்களையும்
வர்க்க தாபங்களாய்
மாற்று

தேசத்தின் சீக்கிற்கு
சர்க்கார் மருந்துகள்
சரிப்பட்டு வராது
மக்களே ஒரு நாள்
அவைகளை
மலிவு விலைகளில்
தயாரிக்க வை.

எண்பது கோடிக்கும் விடிவு
உன் கரங்களில் தானே
உன் கண்ணசைப்பில் தானே
உன் காலடிச் சுவடுகளில் தானே

நீ
நிற்கின்ற நிலமெல்லாம்
நடு நடுங்க வேண்டும்
உன்
சொற்கள் ஒவ்வொன்றும்
சூளுரையாய் முழங்கட்டும்
உன்
சுட்டு விரல் அசைவில்
எட்டுத் திக்கிலும் மக்கள்
எக்காளமிடட்டும்

அப்போது தான்
நிலங்களில் நீசப்பட்டோர்
ஆலைகளில் அடிமைப் பட்டோர்
அலுவலகங்களில் சிறைப்பட்டோர்
அனைவருக்கும் விடுதலை.

இருப்பவன் தலைக்கு
நெருப்பாக வா
இல்லாதவன் காலுக்கு
செருப்பாக வா

இன்றே வா
இப்போதே வா.

கவிதை

காலைப் பொழுதின்
சாம்பல் நிறம்
ஒரு கவிதை

கண்மலரைப் போல்
பனியில் நனைந்த பூ
ஒரு பசுங் கவிதை

நிழல் தரும்இதற்கு
நிழல் தர யாரோ
எனப் பரந்து நிற்கும்
மரம் ஒரு
பழங்கவிதை

பறவை பறந்து
ஊரின் ரகசியங்கள்
ஒவ்வொன்றாய்ப் பார்ப்பது
ஒரு உன்னதக் கவிதை

கொஞ்சம் தேமல்
முகத்திற்கு எத்தனை அழகென்று
இன்னும் சொல்லி வரும்
நிலவு ஒரு கவிதை.

எந்த மொழியிலும்
எந்தச் சூழலிலும்
சங்கீதமாய் வரும்
பெண்ணின் குரல்
ஒரு கவிதை

அடிக்கடி தொட்டுக் கொள்ளவும்
துடைத்துவிடவும்

முகத்தில் குழந்தை வளர்க்கும்
ஆணின் மீசை
ஒரு அரிய கவிதை.

மனிதனைப் போல்
இரண்டு சக்கரங்கள்
மிருகத்தைப் போல்
நான்கு சக்கரங்கள்
காரும் ஸ்கூட்டரும்
கவிதைகள்.

இருட்டில்
இந்திரலோகம் நகர்வது போல்
தூரத்தில் ரயில்
ஒரு தொடர் கவிதை

அவரவர்
பிள்ளைப் பிராயம்
அவரவர்க்கும் வாய்த்த
அற்புதக் கவிதை.

கயிறு

பாலிதீன் பைக்குள்
கிடந்த பாலை
வாசலில் வந்து
எடுத்துப் போனாள்

காய்கறிக் கூடை
கூவல் கேட்டு
வாசலில் வந்து
வாங்கிப் போனாள்

சினிமா வண்டிச்
சத்தம் கேட்டு

வாசலில் வந்து
பார்த்துப் போனாள்

வீதி உலா வரும்
சாமி பார்த்து
வாசலில் வந்து
வணங்கிப் போனாள்

பிச்சைக்காரன்
பிலாக்கணம் கேட்டு
வாசலில் வந்து
வழங்கிப் போனாள்

கணவன் திரும்பும்
காலமறிந்து
வாசலில் வந்து
தாங்கிப் போனாள்

அத்தை நின்ற
வாசல் வரை
அவளும் வந்து
திரும்புகிறாள்

மரத்தில் கட்டிய
பசு மாடு
கயிற்றின் நீளம்
சுற்றி வரும்

வாசல் வரைக்கும்
அளவெடுத்து
அவளைக் கட்டிய
கயிறொன்று.

ஒரு டீயின் விலை

நாடெங்கும்
விலைவாசி உயர்வு
ஒரு டீயின் விலை
அறுபது பைசா என்பது
விலைவாசி உயர் வல்ல

பொது கிளாஸில்
டீ கேட்க
தனி கிளாஸில்
டீ கொடுக்க

ஒரு டீயின் விலை
ஒன்பது உயிர்கள் என்று
விலைவாசி
உயர்ந்து கிடக்கிறது

பஞ்சாயத்து ராஜ்

கீழே
காலுக்குச் செருப்பு
மேலே
பட்டில் சட்டை
இடையில் நிர்வாணம்.

இதுவேறு அதுவேறு

போஸ்டர்களில் ஆபாசம் பார்த்து
பொறுக்கிப் பத்திரிகையில்
ஆபாசம் பார்த்து
சினிமாவில்
ஆபாசம் ரசித்து
ஓரமாய்ப் போகும் பெண்ணை
ஓடிப் போய் இடிக்கும்
இந்த இளைஞனின்
தங்கையை யாரோ
உரசி விட்டானென்று
தாம் தூமென்று
குதிக்கிறான்.

சங்க காலம்

முதற் சங்கம்
இடைச் சங்கம்
கடைச் சங்கம் முடிந்து
தொழிற் சங்க காலம்
துவங்கி நடக்கிறது

கொடிகளும்
பதாகைகளும்
ஊர்வலங்களும
ஆர்ப்பாட்டங்களுமாய்...
உண்மையில் இதுதான்
சங்க காலம்.

பொய்

மண் பொய் சொல்வதில்லை
மிதிக்கிறோம்
மரம் பொய் சொல்வதில்லை
வெட்டுகிறோம்
மந்திரி பொய் சொல்கிறார்
மாலை போடுகிறோம்.

பையன்

எம். எல். ஏ. சட்டையில்
சில பைகள் தைத்தார்
எம். பி. சட்டையில்
ஏராளம் பை தைத்தார்
மந்திரி பையையே
சட்டையாய்
மாட்டிக் கொண்டார்.

பாரமும் தூரமும்

தலையில் ஒரு குடம்
தவலை இடுப்போடு
வலது கை வீச்சிலும்
தலைக்குடம் தளும்பாது
*

சாரதா சின்னம்மா
பனை மரத்தில் பாதி
வள்ளி அத்தையோடு
வாயாடி வரும்போது
பார்வை திரும்பாது
பாதை பிசகாது

சுவர்தாண்டிப் போன
சின்னம்மா மகளைப்
பார்க்க வைத்து
அம்மா எனக்குப்
பணியாரம் தந்ததையும்
கூட்டிய குப்பையை
அம்மா
கூடந்தாண்டிப் போட்டதையும்
அரக்காணிப் புஞ்சையில்
அப்பா

அரை அடி வரப்பு வெட்டி
நிலத்தோடு சேர்த்ததையும்
நிமிர்ந்தபடி நடப்பதையும்
வல்லின மெல்லினத் தோடு
சின்னம்மா
வகை வகையாய்ச்
சொல்லி வரும்
ஊர்க்காலி மாடுகள்
ஓடி வந்து பாய்கையிலும்
முள் தைத்த காலைச்
சின்னம்மா
வில் போல் வளைத்து வைத்து
பூப் போல் பிடுங்கி ஒரு
புதருக்குள் எறிகையிலும்
தண்ணீர் துளிக்கூட
தரைமீது சிந்தாது
வாய் மட்டும் நிற்காமல்
வாரி வரும் அம்மாவை

அம்மா குடமெடுக்கும்
ஆதி ரெத்தினம் அத்தாச்சி
கூட வரும் தண்ணிக்கு
வாய் கேட்க வசதியாய்

சின்னம்மா வீட்டில்
சுறா மீன் குழம்பு வைத்துப்
புருசனுக்குத் தெரியாமல்
பொறந்த வீட்டுக்கனுப்பியதை

பாலகன் எனக்கொரு
பாவக்காய் தந்ததில்லை
பாதகத்தி இவளெல்லாம்
பொம்பிளையா என்று சொல்லும்

சின்னம்மா பேச்செடுத்து
அம்மா
சுத்தி வரும் சாமியாடி

தலைக்குடத் தண்ணி மட்டும்
துளிக்கூட உதிராது

நல்ல தண்ணிக் கிணத்துக்கு
நாலு கிலோ மீட்டர் தூரம்
வக்கணையாய்ப் பாதை
வரிசையாய்க் கருவமரம்
ஊர்ப் பெண்கள் எல்லோருக்கும்
ஒருத்தி பகை வேண்டும்
தலையில் ஒரு குடமும்
இடுப்பில் மறு குடமும்
பாரமும் தூரமும் இந்தப்
பகையில் மறந்து விடும்

தேசியப் பறவை

ஒருநாள் தேசியப் பறவை
மயிலைப் பார்த்தேன்
பத்தடி தூரங் கூட
பறக்க முடியவில்லை
உன்னை
தேசியப்பறவை என்று
தேர்வு செய்தது
யாரென்றேன்

மயில்
எக்காளமிட்டுச் சிரித்தது
பறவை என்றால்
பறக்க வேண்டும் என்று
யார் செய்த சட்டமிது
பாராளுமன்றத்தில் போய்ப்பார்!

அழகழகாய் நட்சத்திரங்கள்
ஆங்காங்கே மின்னுகின்றன
பேச வேண்டும்

செய்ய வேண்டுமென்றா
மககள் அவர்களைத்
தேர்வு செய்தார்கள்

அழகாயிருந்தார்கள்
தேர்வு செய்தார்கள்
நானும் அழகாயிருக்கிறேன்
தேர்வு செய்தார்கள்

கொள்ளைகள்

என் வீட்டில் இன்று
இருநூறு பவுன் நகை
கொள்ளை போனது

ஏது இவ்வளவு நகைகள்?
எல்லாம் என் மனைவிக்கு
மாமனார் போட்டவை.

அவ்வாறெனில்
இன்று நடந்தது
மூன்றாவது கொள்ளை.

விலங்குகள்

தலையில் பூ விலங்கு
கையில் பொன் விலங்கு
காலில் வெள்ளி விலங்கு
சுவாசத் தடைக்கு
மூக்கில் கல் விலங்கு
ஒவ்வொரு மூச்சிலும்
அவள்
விலங்குகளை நுகர்கிறாள்.

சந்தை

ஒவ்வொரு வீடும்
ஒரு சந்தை

கால் பார்க்க
நடக்கச் சொல்லி
கை பார்க்க
வீசச் சொல்லி
மயிர் பார்க்க
இழுக்கச் சொல்லி
ஒவ்வொரு வீடும்
ஒரு
பெண் வாங்கும் சந்தை

பசுமாடு வாங்குபவன்
வாங்குவதால்
பணம் தருவான்
பன்றி வாங்குபவன்
வாங்குவதால்
பணம் தருவான்
பொண்ணை வாங்குபவன்
வாங்குவதால்
பணம் பெறுவான்
இந்த தேசத்துப் பன்றி
கோடீஸ்வரன் மகளைவிட
விலை உயர்ந்தது

பாதி வந்தால்

காடெங்கும்
கனத்த மரங்கள்
காண்ட்ராக்டர் கண்களுக்குத்
தப்பி நிற்கும்
கனத்த மரங்கள்

காய் மணமும் பூ மணமும்
கனிமணமும் இலைமணமும்
கலந்த ஒரு நறுமணம்
காடெங்கும் காற்றெங்கும்

ஓங்கி உயர்ந்து ஒரு
இலைப் பந்தலிட்ட மரம்
உச்சிக் கிளையில்
உட்கார்ந்தது
ஒரு ஆண் பறவை.

அந்தப் பறவைக்கு
அந்த மரம் தான்
வாகான இருப்பிடம்
அப்படி இருக்கையில்
ஒரு பறவை அங்குமிங்கும்
ஓயாமல் பாடி
ஒயிலாகப் பறந்தது.

உட்கார்ந்த பறவையை
ஓரத்தில் பார்த்து
ஜாடையில் சிரித்தது.

வெகுநேரம் பறந்துவிட்டு
வெயிலுக் கிதமாய்
ஆண் பறவைக் கருகில்
அமரப் பார்த்தது.

உட்கார் உட்கார்
என்றது ஆண்பறவை
சிறகைக் குலுக்கி
அலகைத் திருத்தி
அந்தப் பறவையும்
அமர்ந்து விட்டது.

உன்னை
இதற்கு முன்
எங்குமே பார்த்ததில்லை.
நீ எந்தக் காடு?
உன்னைப் போல் தான்
உன் காட்டுப்
பெண் பறவைகள்
அழகோ?
என்றது ஆண் பறவை.

என் காட்டுப்
பெண் பறவைகளை விடவும்
உன்னைப் போல்
அழகான ஆண் பறவைகள்
இந்தக் காட்டில்
ஏராளம் என்றார்கள்
அதுதான்
பார்த்துப் போக வந்தேன்.

அப்படியா!
இந்தக் கனியை உண்ணு
களைத்துப்போயிருக்கிறாய்
என்று
காலில் பற்றிய
கனியைத் தள்ளியது
ஆண் பறவை!

கனியைத் தின்றதும்
பெண் பறவை சொன்னது
இந்த மரம்

இந்த மணம்
இந்தக் காடு
நீ
எல்லாம் எனக்குப்
பிடித்து விட்டது.

ஆண் பறவை சொன்னது
நான் அதிர்ஷ்டசாலி
நாம்சேர்ந்து வாழ்வோம்
இனிக்கும் பழங்கள் உள்ள
மரங்கள் ஏராளம் இங்கு
எல்லா மரங்களும்
எல்லாக் கனிகளும்
நமக்குத் தான்
இந்தக் காடு உன்னால்
அழகாகட்டும்
உன்னோடு சேர்ந்து
இந்த வாசம் இனி
புதுசாகட்டும்

சந்தையில்லை
சாதியில்லை
தங்கமில்லை
தாலியில்லை
வைரமில்லை
வரதட்சணை இல்லை

பறவைக் கலாச்சாரத்தில்
பாதி வந்தால்
மனிதக் கலாச்சாரம்
மகத்துவம் பெற்றுவிடும்.

சிறைகள்

சிறகுகளை
வெட்டி எறிந்த பின்
அதனைப் பறவை என்றாய்

விலங்குகளைப்
பூட்டி முடித்ததும்
அவனை மனிதன் என்றாய்

முட்டை
ஓடு உடையு முன்னே
குஞ்சின் வயிற்றை
குறிபார்த்து நிற்கிறாய்

தாயின்
மணிவயிறு திறக்கு முன்
விலங்கு களோடு
வேகமாய் வருகிறாய்

விடிய விடிய
வேலை நடப்பது
இங்கு
விலங்குத்
தொழிற்சாலைகளில்தான்

உனக் கென்று
ஒரு சாமி வேண்டாமா
என்று
மதம் கேட்டு
ஒரு சிறைக்குள் தள்ளியது.

உனக் கென்று
ரத்தக் கலப்போடு ஒரு
கூட்டம் வேண்டாமா
என்று
ஜாதி கேட்டு
ஒரு சிறைக்குள் தள்ளியது.

உனக்கென்று
உச்சரிக்க சொற்கள்
வேண்டாமா என்று
மொழி கேட்டு
ஒரு சிறைக்குள் தள்ளியது.

ஒருவனுக்கு
ஓராயிரம் சிறைகள்
ஒருவனுக்கு
ஓராயிரம் விலங்குகள்
மேலே வானமும்
கீழே பூமியும் கூட
ஒரு
சிறையின் அமைப்புத்தான்
என்றது ஞானம்.

பூமிக்கு மேலே
புழுத்த சிறைகளை
ஞானவான்கள்
கண்டு கொள்ளவில்லை.

ஆங்காரத்தைக்
கற்பிக்க வேண்டியவர்கள்
ஓங்காரத்தை
உச்சரிக்கச் சொல்லி
உட்கார்த்தி விட்டார்கள்

ஒருவனின்
ஆன்மாவைப் புதைக்க
ஒன்பது
குழிகளை வெட்டிய
ஞான தேசமிது.

கோடி வருட நெருப்பை

ஒரு வீட்டின்
ஒழுங்கிற்குப் பின்னால்
உயர்விற்குப் பின்னால்
ஒரு பெண்ணின்
உருகிய உடலுண்டு
உன்னத மனமுண்டு
உருக்கமான கதையுண்டு

அவள்
குழந்தையை முன்னிறுத்திக்
கணவனைக் கண்டிப்பாள்
கணவனை முன்னிறுத்திக்
குழந்தைக்குக் கதை சொல்வாள்

அவள்
பாதம் ஆட வேண்டும்
பாத்திரம் தேய்க்க வேண்டும்
கணவனுக்கெதிரே
கவர்ச்சியாய் வரவேண்டும்.
பிள்ளைக் கெதிரே
தெய்வமாய்த் திகழ வேண்டும்
உயர்ந்த சுப்புடம்
ஒவ்வொன்றிற்கும்
செங்கல் அள்ளியது அவளே
சிமிண்டைக் கலந்தது அவளே

ஆகாயத்தில் பரண் கட்டி
அலட்சியமாய் அவள்
அள்ளிப் போன
கலவையும் செங்கல்லும்தானே
இந்த வானாளாவிய
மாளிகைகள்
வண்ணமிகு கட்டிடங்கள்

காலில் சாக்குக்கட்டி
கையில் அகப்பை தூக்கித்
தாரூற்றிச் சாலை செய்தாள்
கல்லை உடைத்தாள்
மில்லில் நின்றாள்
களை எடுத்தாள்
நாற்று நட்டாள்
நடுவில்
கைப்பிள்ளைக்கும்
பால் கொடுத்தாள்
மண் சுமந்தாள்
மாடு மேய்த்தாள்
நடுவில்
கணவனுக்குக் கஞ்சி கொடுத்தாள்.

பல்லாயிரம் நாள்
பாத்திரம் தேய்த்தாளே
அட்டுக்கரி
அழுத்தித் தேய்க்காமல்
அகன்று விடுமா

மெல்லிய கையா அது
வல்லிய கையது
உலகத்து
வள்ளலின் கை அது
பிரபஞ்சத்து
பிரும்மாவின் கையது.

பெண்களே!
இதிகாசம் காவியம்
அனைத்தும் உங்கள்
அழகையே பேசும்
இனித்தான் நீங்கள்
உங்கள் ஆற்றலைப்
பேச வேண்டும்

உங்கள் கண்கள்
காந்தக் கண்கள்
மட்டுமல்ல
கோடி வருட நெருப்பைக்
குவித்து வைத்த குடங்கள்
ஒரு யுகத்து ரகசியத்தை
ஒளித்து வைத்த
மாளிகைகள்

அழுவதை நிறுத்துங்கள்
யாரையும்
தொழுவதை நிறுத்துங்கள்
குரல்களை உயர்த்துங்கள்
தெருக்களை நிரப்புங்கள்.

பாலம்

ஊர் மேல்
வகிடெடுத்த ஆறு

ஆற்றைக் கடக்க
ஆங்காங்கே
ஒற்றையடிப் பாதைகள்
வண்டிப் பாதையும்
வளைந்து போகிறது

இக்கரைக் காக்கை
அக்கரை பறக்கையில்
ஒற்றையடிப் பாதை
வந்து உட்காரும்

ஒரு மீன்குஞ்சுக் கனவோடு
மணலுக்குள் முக்குளித்து
சூடு பட்டுப் பறக்கும்
செட்டையெல்லாம்
மணலுதிரும்
உச்சிப் பொழுதில்
அக்கரைப் பையன்

அட்டையை வீசி
அவசரமாய் ஓடி
அட்டை மேல் நின்று
கால் சூடு தணித்து
மறுபடியும் வீசி
அட்டைக்கு ஓடி
ஆற்றைக் கடக்கிறான்.

தூரத்தில் ஒரு பாலம்
துருப்பிடித்துக் கிடக்கிறது
ஆற்றில் நீரோடி
வயலுக்கும் பாய்ந்ததாய்
ஊரில் ஐதீகம்.

சுதந்திரம் வந்ததும்

சுதந்திரம் வந்ததும்
பாலாறு பாயும்
தேனாறு ஓடுமென்றார்கள்.

என் தாத்தா சொன்னார்
நம் ஊருக்கு வடக்கே
ஒரு கால்வாய்
தெற்கே ஒரு கால்வாய்
ஒன்றில் பாலாறு பாய
இன்னொன்றில்
தேனாறு ஓடுமென்றால்
நான் எப்படித்
தண்ணீரில் குளிப்பது

தவிரவும்
ஊரு முழுதும்
ஈயும் எறும்பும் மொய்த்து
சுகாதாரம் கெடுமே
என்று பயந்து போயிருந்தேன்
நல்ல வேளை
பாலாறும் பாயவில்லை
தேனாறும் ஓடவில்லை
என்றார்.

சுதந்திரம்

சுதந்திரம்
காணாமற் போனது
வெள்ளையன் வந்த பின்னா?

ஆயிரமாயிரம்
ஆண்டுகளின் முன்னாலே
அது
அழிந்தொழிந்து போனது.

சோழனுக்கு ஒரு காலம்
சேரனுக்கு ஒரு காலம்
பாண்டியனுக்கு ஒரு காலம்
வெள்ளைப்
பரங்கியனுக்கொரு காலம்

வெள்ளையன் வந்து
விலைமாதைத் தான் தேடினான்
உள்ளூர் ராஜா
ஒவ்வொருத்தன்
பெண்டாட்டியையும் தேடினான்.

தன் பெண்டாட்டிக்காக
ஓராயிரம் தொழிலாளிகளின்
உயிரைக் குடித்து
சப்ரமஞ்சக் கூடத்தை
சலவைக்கல் மண்டபத்தை
உலக அதிசயத்தை
கங்கைக் கரையிலோ
காவிரிக் கரையிலோ
எந்த வெள்ளையன்
எப்போது கட்டினான்?

பாண்டிய மன்னனின்
பாதங்களில்
எத்தனை தமிழரின்
முதுகுத்தோல்
செருப்பாய்க் கிடந்தது
மிலேச்சன் என்றாலும்

வெள்ளைக் காரன்
மிருகத் தோலில் தான்
செருப்புத் தைத்துக்
கொண்டான்.

ஆதிசங்கரர்
ஜனித்த பூமி
அத்வைதம்
பிறந்த பூமி
புத்தர் பிறந்த
பொன்னாடு
புனிதக் கடவுளர்கள்
கோடி கோடியாய்ப்
புழுத்த நாடு.

மலை மலையாய்
மந்திரஙகள்
தலை முழுதும்
தந்திரங்கள்

பன்றிக்கறி தின்கிற
பரங்கியன்
உள்ளே வரும்போது
ஓடித் துரத்த
ஒரு மண்ணும் வரவில்லை

அவன்
துப்பாக்கிச் சத்தம் கேட்டதும்
தூங்கப் போய் விட்டன
சாமிகளும்
சாஸ்திரங்களும்

ஒரு
தூங்குமூஞ்சி மடத்தில்
கொள்ளை யடிப்பது போல
நிதானமாய்
நூறாண்டுக் காலம் அவன்
கொள்ளையடித்தான்.

ஏழை மக்கள்
சண்டைக்குப் புறப்பட
பணக்காரர்கள் பதறிப் போய்
தலைவர்களாகி விட்டார்கள்

இந்திய மக்களைச்
சவுக் காலடித்த வெள்ளையனை
இந்திய மக்களை
செருப் பாலடித்த வெள்ளையனை
இந்தியன் யாரும்
ஒரு பூவால் கூட அடிக்காமல்
பணக்காரத் தலைவர்கள்
பக்குவமாய்ப் பாதுகாத்தார்கள்

இன்னும் பாதுகாக்கிறார்கள்
உள்ளூர் சாக்கடைகளை.....
உலகத்து சாக்கடைகளை.....

ஜனநாயகம்

ஒரு பிரதமரின் சிதைக்கு
ஒரு பிரதமர்தான்
தீ வைப்பார்.

சாவி

பெண்ணைக் கொடுத்த
தகப்பன் மாப்பிள்ளையிடம்
ஒரு சாவியைத் தந்தார்

என் இது என்றான்
மாப்பிள்ளை.
பெண் பிறந்தபோது
விலங்கைப் பூட்டினேன்
பெண்ணோடும் விலங்கோடும்

சாவியை எடுத்துப் போ
என்றார் பெரியவர்.

சாவியை அவன்
சாகும் வரை
பாதுகாத்தான்
அவன்
பிணத்தைத் தூக்கிப்
பாடையிலேற்றையில்
படுக்கையை மகன்
துழாவிப் பார்த்தான்.
தலையணையடியில்
சாவி இருந்தது.
மகன் எடுத்துப்
பத்திரப் படுத்தினான்.

அம்மா விலங்கிற்கு
இப்போது
மகனிடம் சாவி.

விலங்குச் சாவி
வம்சாவளிச் சொத்து
வரிசையாய்
விலங்குகள்
தொடர்ச்சியாய்
சாவிகள்

இந்தக் காலம்

அந்தக் காலம் பரவாயில்லை
அடிமைக் காலம் என்றால் கூட
ஒரு அந்தஸ்தோடு
கவிதை எழுதலாம்

என் காலம் அப்படியில்லை
கும்பிடும் படி ஒரு தலைவராம்
கூப்பிடும்படி ஒரு தலைவராம்

ஆனாலும் அந்தக் காலம்
அவ்வளவு சுவாரஸ்யமானதல்ல
அந்தக் காலத்தில்
ஆளுயர மாலையுண்டா
அழகுமலர்க் கிரீடமுண்டா
வீரவாள் கொடுப்பதுண்டா
வெள்ளிச் செங்கோல்
தானுண்டா

ஆறடிப் போஸ்டருண்டா
அடியாளுண்டா
சோடா பாட்டில் உடைப்புண்டா
சோமாறி கயிதே என்று
பூ மாரி பொழிவதுண்டா
சாராயப் பீப்பாய் வைத்து
சாரி சாரியாய்ப் படை வைத்து

கல் கொண்டு
கடப்பாரை கொண்டு
சைக்கிள் செயின் கொண்டு
மறத்தமிழர் கூட்டம்
அறவழியில் நின்று
அரசியல் நடத்துவது போல்
அந்தக் காலத்தில்
நடந்ததுண்டா

அரசுக்கு ஒரு
அன்பான வேண்டுகோள்
கூலி விவசாயிக்கு
தினக் கூலி நிர்ணயித்தது போல்
பீடித் தொழிலாளிக்கு
தினக் கூலி நிர்ணயித்தது போல்
மதுரைக் கூட்டத்திற்கு
இன்ன கூலி
மதராஸ் கூட்டத்திற்கு
இன்ன கூலி என்றொரு
இலக்கணம் செய்ய
வேண்டும்.

பேனாமுள்ளை ஒடிப்பேன்

காதறுந்த ஊசிகளைக்
கப்பல்களில் இறக்குவேன்
வெடிக்காத துப்பாக்கிகளை
வெளிநாட்டில் வாங்குவேன்
கவனி
உள்நாட்டுச் சரக்கே
உயர்வான தென்று
வெளிக்காட்டத்தான்
இந்தச் செயல்பாடென்று
உன் பேனாவால்
ஏன் நீ எழுதவில்லை.

உன் பேனா முன்ளை ஒடிப்பேன்
நீ அதைக்
களைக் கொத்தியாக்கப்
பார்க்கிறாய்.

கவனி
பயிர் மட்டும் வளர்வது பாவம்

உன் பேனாவிலிருந்து
உதிர்வது மையல்ல
பூச்சிக் கொல்லி மருந்து
கவனி

பூச்சிகளின் வளர்ச்சிக்கே
உன்னைப் பயிர் பண்ணப்
பணித்திருந்தேன்.

உன் தூரிகையை முறிப்பேன்
நீ பொய்யின் முகத்தைப்
பெரிதாக வரைகிறாய்
கவனி
இதில் இடதுவலது என்ற
பேதம்
எனக்கில்லை.

உண்மை எனுஞ்சொல்லைப்
பதினாலு மொழிகளிலிருந்தும்

பறிமுதல் செய்து விட்டேன்
கவனி
இதில் இந்தி தமிழ் என்ற
பேதம் எனக்கில்லை.

நீதிமான் கைத் தராசில்
ஒரு தட்டில் நான் ஒரு
பாறாங்கல்லைத் தான்
வைத்தேன்

கவனி
தராசு வைத்துக் கொள்வதை
நான் தடை செய்து விடவில்லை.
உன் வாய்க்கு இதனால்தான்
பூட்டு
உண்மை பேசுவது
உரக்கப் பேசுவது
ஊர்ப் பஞ்செல்லாம்
என் ஒருவன் காதடைக்கப்
போவதில்லை.

கவனி
வாய்க்குப் பூட்டு மட்டுந்தான்
உன் வாயை
நீயே வைத்துக் கொள்ள
நான் இன்னும்
அனுமதித்து வருகிறேன்.

காகித ஆலைகளை மூடுவேன்
எழுத மட்டுமல்ல

கடையில் மடிக்கக் கூட
உனக்கொரு
காகிதம் கிடைக்காது
கவனி
ஒரே ஒரு காகிதம் மட்டும்
என்னிடமிருக்கும்
நானே என்னை நியமிக்கும்
ஆணைப் பத்திரமது

எழுத்துரிமைத் தடை மசோதாவைக் கண்டித்து
எழுதப்பட்டது 9-9-1988

வணக்கம்..... செய்திகள்

இன்று
எதிர்க் கட்சிகள் அழைத்த
பந்த்
எந்த விதத்திலும்
இந்தியாவைப் பாதிக்கவில்லை
எல்லாக் கடைகளும்
மூடிக் கிடந்தன.
பஸ்ஸிலும் ரயிலிலும்
பாரத மக்கள் ஏறவில்லை

ஆனால் இன்று -
வழக்கம் போல் காலையில்
காகங்கள் கரைந்தன
மீன்கள் நீந்தின
எறும்புகள்
இரைதேடிச் செல்வதும்
மரங்கள்
ஒளிச் சேர்க்கை செய்வதும்
எதிர்க் கட்சி பந்த்தால்
நிற்க வேயில்லை என
இப்போது வந்த
அறிக்கை சொல்கிறது.

என்ன தமிழா

வாசல் கோல வண்ணங்கள்
வளர்ந்த கரும்புத் தோகைகள்
பானைப் பொங்கல் பொங்கையிலும்
கூனிக்குறுகும் தமிழா கேள்.

காலில் தைத்த முள் பிடுங்கி
கண்ணில் தைத்த முள் மறந்து
கோலம் போடும் தமிழச்சி
குலவை போடும் பெண்ணே கேள்.

பச்சை எல்லாம் பயிரல்ல
பசப்பாய் வளரும் களை பிடுங்கக்
கையில் முளைத்த கண்ணுக்கு
இமையே இல்லை ஏனம்மா

காலில் உங்களை மிதித்துக் கொண்டு
கையில் வழங்கும் சேலை வேட்டி
கட்டிக் கொள்ள அல்ல தமிழா
கத்தும் வாயைப் பொத்தத்தாண்டா

கடலைக் கடந்தவன் தமிழன் தான்
கடாரம் வென்றதும் தமிழன் தான்
கஞ்சிக்கில்லா வேளைகளில்
காதில் பாய்ச்சத் தேனாறு.

சின்னத் தமிழன் சேறோடு
சிறந்த தமிழன் காரோடு
பண்டைத் தமிழன் பெருமையெல்லாம்
கொண்டை போட்டவன் காதுக்கு

பொங்கல் நாளில்
அர்ச்சனைகள்
பொங்கா நாளில்
கற்பனைகள்
என்ன தமிழா திண்ணைமேல்
எத்தனை காலம் சப்பணமாய்.

கோவில்கள்

ஆலைகளே
இந்நாட்டின் கோவில்கள்
என்றவரின் வாய்க்குச்
சர்க்கரைப் போடுங்கள்

கோவிலில்
ஆள் நடமாட்டமில்லாப்
பிரகாரப் பகுதிகளில்
வெளவால் அடைந்து
ஒரு வாசம் வருமே
அது
மூடிய ஆலைகளின்
மூலை முடுக்குகளில் வருகிறது

ஆலைகளே
இந்நாட்டின் கோவில்கள்
என்றவரின் வாய்க்குச்
சர்க்கரை போடுங்கள்.

வடிகின்ற கண்ணீரை

மனிதா
வடிகின்ற கண்ணீரைத்
துடைத்துக் கொள்.

கைகளில் கொப்புளமா
சரி
கழுத்தைத் திருப்பித்
தோள் பட்டையில் துடை

தோள் நிறையச் சுமையா
சரி
உட்கார்ந்து உன்
முட்டுக் காலில் துடை

நீ நிற்கும் கால்கள்
உன்னுடையதில்லையா
சொந்தக் கால்களைக்
கழற்றியா வைத்தாய்

மனிதா! கிளம்பு
நம் தோழர்கள் உன்
சொந்தக் காலைத் தேடித்தர
ஒரு யுத்தம்
தொடங்கி விட்டார்கள்.

சிலை

பெரிய சிலை ஒன்று
பார்சலில் வந்ததில்
அமெரிக்காக் காரன்
அகம் முகம் மலர்ந்து
சிலையைப் பிரித்து
சிலையைப் பார்த்தான்.

குப்பென்று கோபம் வந்து
வெட்டிப் பயலுக்கொரு
கடிதம் எழுதினான்

இத்துடன் நீ அனுப்பிய
சிலையை
நீ சுற்றிய சீலையைச்
சுற்றித் திருப்பி அனுப்புகிறோம்.

ஆயிரம் இரண்டாயிரம்
ஆண்டுகளாய்
உங்கள் நாட்டைக் கெடுத்த
சிலைக்குத் தான்
அமெரிக்கா புகழ்ந்து
அள்ளிக் கொடுக்கும்

இந்தச் சிலைக்குரிய
அரசியல்வாதி
ஐம்பதாண்டே
நாட்டைக் கெடுத்தார்

இதற்கெல்லாம்
கொட்டிக் கொடுக்க
அமெரிக்கன் ஒன்றும்
அசடு அல்ல
நீயே வைத்துத்
தினமும் பூசையிடு.

அரியானா சாலைகளில்

அரியானா சாலைகளில்
அழிந்த என் மக்களே!

தனித்தனியாய்
உங்கள் முகங்கள்
தரையில் தெரியவில்லை
மொத்தமாய் உங்கள்
ஒரே முகம்
மேகம்வரை தெரிகிறது.

அந்த முகம்
இந்திய முகம்.

முகத்தில் முகம் பார்க்க
யாரும் அறியவில்லை
அவனவன் மதச் சின்னத்தை
அடுத்தவன்
முகத்தில் தேடி
அப்புறம் ஆயுதம் தேடி
இப்படிப் போயின
எத்தனையோ ஆண்டுகள்

சமணனைச் சைவன்
கொன்றான்

சைவனை வைணவன்
கொன்றான்
இவர்களை முஸ்லீம்
கொன்றான்
முஸ்லீமை இந்து
கொன்றான்
இந்துவை கிறித்துவன்
கொன்றான்
கிறித்துவனை இந்து
கொன்றான்
இந்துவை சீக்கியன்
கொன்றான்
சீக்கியனை இந்து
கொன்றான்.

இந்தக் கொலைகளைத்
தத்துவங்களாக்கிப்
பெருந்தவசிகள்
பிச்சை கேட்கிறார்கள்
அதி புத்திசாலிகள்
அரசியல் நடத்துகிறார்கள்.

மதச் சார்பற்ற நாடு
என்பதற்குப்
பதவுரை கருத்துரை எல்லாம்....
'மதங்களைப் பயிர் செய்
கொலைகளை அறுவடை செய்'

பதர்களே
பாதகர்களே
பாரதம்
மதங்களுக்கல்ல
மக்களுக்குச் சொந்தம்

அரியானா சாலையில் ஒன்றை வழிமறித்து 53 பேர்களை சுட்டுக் கொன்றபோது,

---

ரத்த வாசனை

இந்தக் கொடிக்கு
நிறமுண்டு
வாசனையுமுண்டு

காடாயிருந்தது
கழனியாய் வந்தது
தானாய் மாறியல்ல
கவினுறும் மாளிகைகள்
கட்டிடங்கள் யாவும்
கடவுளர்கள் வந்து நின்று
கட்டித் தரவில்லை
இலக்கியமும் கலைகளும்
இனிய பாடல்களும்
இந்திரன் படைத்ததல்ல

உலகத்தின் செல்வங்கள்
ஒவ்வொன்றிற்குப் பின்னாலும்
உழைத்தவர்கள் கரங்களுண்டு
உதிர்த்த வேர்வை உண்டு
வடித்த ரத்தம் உண்டு.

இந்து மஹா சமுத்திரம் போல்
அந்த வேர்வையும் ரத்தமும்
இன்னொரு மஹா சமுத்திரம்

ஆயிரமாயிரம் ஆண்டுகளாய்
அடிபட்டும் மிதிபட்டும்
அடிமைப்பட்டும் நின்றவர்கள்
ஒரு நூறாண்டுக்கு முன்
ஓஹோ வென்றெழுந்தார்கள்
எழ எழச் சுட்டார்கள்
சுடச் சுட எழுந்தார்கள்.

உலகப் பாட்டாளிகளுக்காக
சிகாகோ வீரர்கள்

உவந்து சிந்திய ரத்தத்தில்
ஒரு வெள்ளைத் துணியை
உலகெங்கும்
அனுப்பி வைத்தார்கள்
அந்தக் கொடியிலிருந்து
இன்னும் ரத்த வாசனை
வருகிறது.

இந்தக் கொடிக்கு
நிறமுண்டு
வாசனையுண்டு.

புதிய கல்வி

கல்வி கற்பதும்
கல்வி கற்பிப்பதும்
புனிதம்
கற்பவன் காசு கொடுத்து
சீட்டைப் பிடிக்க
கற்பிப்பவன் காசு கொடுத்து
வேலை பிடிக்க
கல்வி கற்பதும்
கல்வி கற்பிப்பதும்
புனிதம்

பழைய கல்வி
பல் விழுந்து
படுக்கையில் விழுகையில்
புதிய கல்வி
பல்முளைத்து வருகிறது
உதட்டைத் தாண்டி
தாடை வரை வளர்ந்த
டிராகுலாப் பற்கள்
இதற்கு-

காலரா வேண்டாமென்றால்
கேன்ஸரைக் கைப்பிடி
என்கிறார்கள்

இந்திய மக்கள்
ஈவிரக்கமற்றவர்கள்
குழந்தைகள்மேல்
கொஞ்சமும் பரிவற்ற
காட்டு மிராண்டிகள்

பஞ்சுக் கால் தூக்கி
பதைபதைக்கும் வெயிலில்
பள்ளிக்கு நடக்கவிடும்
பாதகர்கள் நீங்கள்

உங்களைப் போல்
ஈரமில்லா
இரக்கமில்லா
அரசில்லை இது

அதனால் தான்
ஈரத்தோடும்
பாசத்தோடும்
ஆரம்பப் பள்ளிகளையே
அடியோடு மூடிவிட்டு
அங்கன் வாடிகளில்
அக்காளிடம் கற்கச்சொல்லி
ஆணை வருகிறது.

ஒரு வாசலில்
மாருதி நிற்கும்
மறு வாசலில்
டயோட்டா நிற்கும்
ஒரு வாசலில்
பென்ஸ் நிற்கும்
மறு வாசலில்

பிரீமியர் நிற்கும்
பள்ளிப் படிகளில்
பாதம் இறங்கும் போதே
கார்ச்சத்தம் வந்து
காதுகளில் இறங்கும்

அந்தப் பிரபுவின் புத்திரனும்
அந்தக் கூலிப் பயலும்
எவ்வளவு காலம்
ஒரே பள்ளியில்
படிப்பது.
அதனால்தான்
நகராட்சிப் பள்ளிகள்
நவோதயாப் பள்ளிகள்
என்று இருபிரிவாக்கினோம்.

ஓட்டைக் கல்வி
ஒரு கோடிப் பேருக்கு
உயர்ந்த கல்வி
சில நூறு பேருக்கு

வளரும் போது
வர்க்க சாஸ்திரம்
வாழ்க்கை முழுதும்
தொடர வசதியாய்
எல்லோரும் கல்விகற்று
எல்லோரும் அறிவு பெற்று
எழுந்துவிட எண்ணமா?

சுலபத்தில்
கற்க முடிந்தால் தானே
அப்பையாவும்
சுப்பையாவும்
அறிவு பெறுவான்

அதனால்
விஞ்ஞானம் கணக்கு

இவைகளை
வேற்று மொழியில்
கற்க வேண்டும்
மற்ற பாடங்களை
மாற்று மொழியில்
கற்க வேண்டும்

தாய்மொழியில்
கல்வி இல்லை
தமிழ் மொழியில்
கல்வி இல்லை என
தவிக்க வேண்டாம்
அம்மி அடியில்
கும்மி அடியில்
தமிழ்
சண்டைச் சச்சரவுகளில்
சங்கத் தமிழ்

ஆழமாய்த் திட்ட
அடுத்த மொழி போதாது
தாய்மொழியில் திட்டி
தமிழ் மொழியை வளருங்கள்

கழுதை ஓடும்
அதன்
வாலிலும் காலிலும்
ஒரு ஓலை இழுபடும்
ஓலை படும் பாடு
தேசம் படுகிறது
ஓலமிடுகிறது.

புதுக் கல்வி தருகிறார்

அக்காலம் முதல்
இக்காலம் வரை
மெக்காலே கல்வியை
மூளைக்குள் திணித்தும்
முனையளவும் கூட
முன்னேற்றம் இல்லையென
குருமார்கள் கூடி
சிறைச்சாலை ஏகி
பொதுமக்கள் தமக்கு
புதுக்கல்வி தருகிறார்
எழுக நாடே! எழுக!

அனா ஆவன்னா சொல்லும்
ஆசிரியன் ஒருவனும்
ஆராய்ச்சிப்பட்டமுள்ள
ஆய்ந்தகலைப் பேராசிரியனும்
ஒரு மாதிரி
அலுமினியத் தட்டுடன்
உள்ளே நிற்கிறார்
உனக்கும் கற்பிக்கிறார்
எழுக நாடே! எழுக!

அழகான தமிழ் பாடும்
குயில்கள்

ஆங்கிலக் கவிமாரி
பொழிகின்ற
புயல்கள்
கணிதத்தில் வல்லுனர்கள்
கனமான வேதியலில்

பௌதிகத்தில் விற்பன்னர்கள்
உளவியல் ஆசான்கள்
இவர்கள்
ஒரு மாதிரி
அலுமினியத் தட்டுடன்
உள்ளே நிற்கிறார்
உனக்கும் கற்பிக்கிறார்
எழுக நாடே! எழுக!

கற்பைக் காப்பாற்றப்
போராடி மாதா சிறை போனாள்
உழைப்போர் போரில்
உரிமைக்காய் பிதா
சிறை போனான்
கூலி உயர்வு கேட்டு
இன்று குருவும்
சிறை போனான்

தெய்வங்கள்இல்லையோ!
இருந்தால் இநத தேசத்தில்
அவையும் போராடும்
அனைத்தும் சிறைபோகும்

இனியும் வாளாது
எங்கேயும் துவளாது
எழுக நாடே! எழுக!

மேகத்தைச் சிறைப் பிடித்த
யாருக்கும் மழையில்லை
வீணைகளைச் சிறைப் பிடித்த
யாருக்கும் இசையில்லை
பூ மரத்தை வாடவிடும்
யாருக்கும் பூ வில்லை.

ஆசிரியன் அழும் தேசத்தில்
அக்கினிதான் மூண்டெரியும்
இனியும்வாளாது
எங்கேயும் துவளாது
எழுக நாடே! எழுக!

1985 ஆம் அண்டு ஜேக்டீ-போராட்டத்தில் பல்லாயிரம் ஆசிரியர்களைச் சிறையிலடைத்தபோது எழுதி வெளிவந்தது.
நாள்:10.11.85.

நீ வடித்த வேர்வை

நீ வடித்த வேர்வை
பல ஆறுகளாய் ஓடுவதைத்
தேசம் அறியும்
தெரிந்தவர்
அறிவார்

ஓராறு ஓடும் உன்
முதலாளி வீடு வரை
ஈராறு ஓடும் அவர்
சின்ன வீட்டுத் திண்ணை வரை

ஆறுகளில் பல
அணை புரண்டோடி
அந்நிய தேசங்களில்
அலையாடிச் செல்லும்

ஒரு ஆற்றில் படகுவிட்டு
உன் முதலாளி ஏறி
சுவிட்சர்லாந்து வங்கிக்கு
சுகமாகப் போகிறான்

உன் மரத்துப் பழங்களெல்லாம்
ஓசியிலே விற்பனைகள்
உன் மருத்துப் பறவைக்கு
உலகெங்கும் வேடுவர்கள்

வேர்வை ஆற்றை
உன் வீட்டிற்குத் திருப்பு
படகைப் பறி
அதில் பதமாய் உட்கார்

உன் மரத்தைக் காக்க
உன் தோழனைத் துணைக்கழை

அவன்மரத்தைக் காக்க
நீ அவசரமாய் ஓடு.

கைகோர்த்து வளையமிடு
கால்சேர்த்துப் பாதைவகு
திசைகளை இழுத்து
உன் விரல்களில் அடக்கு.

1987மேதின மலரில் -தீக்கதிர்

இரண்டு பெட்டிகள்

பத்தாண்டுக் காலம்
பதவியிலிருந்தவர்
சின்னப் பதவியல்ல
முதல்வர் பதவியது.

பதவி முடிந்ததும்
பங்களாப் படிகளில்
இரண்டு பெட்டிகளை
இரண்டு கைகளில்
இடுக்கிக் கொண்டு
இறங்கி வருகிறார்.

ஒரு பெட்டியில்
அவர் துணிகள்
மறு பெட்டியில்
அவரை உருவாக்கிய
உயர்ந்த புத்தகங்கள்

அவருக்கு சொந்தமாய்
ஒரு வீடில்லை
ஒரு அடி நிலமுமில்லை
உயிலெழுதி வைக்க
ஒன்றுமேயில்லை.

ஓராயிரம் தோழர்கள்
ஓடிவந்தழைக்கிறார்
எங்கள் வீட்டிற்கு
வாருங்கள்
இறுதிவரை இருக்கலாம்.

எல்லோரையும்
அணைத்துக் கொண்டு
இன்சொல்லில்
சொல்கிறார்
என்னால் உங்களுக்கு
எந்தச் சிரமும் வேண்டாம்
என்னை ஆளாக்கிய இயக்கம்
அதோ
யானை பலத்துடன் நிற்கிறது.
அது எனக்கு ஒரு
அறை கண்டிப்பாய்த் தரும்
பத்தாண்டு முதல்வராய்ப்
பணி புரிந்த காலத்தில்
நானே என்
துணிகளைத் துவைத்தேன்
நானே என்
உணவைச் சமைத்தேன்
சாகும் வரை
என் வாழ்வு
அப்படியே தொடரும்

ஒரு ஏழைக்காகும்
செலவு தான்
எனக்கு ஆகும்
இயக்கமும் மக்களும்
எனக்கிதைத் தருவார்கள்.

என் வாழ்க்கை
என் மக்களின்
வாழ்க்கை போல
என் தத்துவம்

அவர்களின் மொழி
இரண்டு பெட்டிகளோடு
அந்த முதியவர்
சாலையில் நடந்து
சரித்திரம் எழுதினார்
அவர் கால் தூசுக்கு
என் கவிதைகள் சமர்ப்பணம்

அவரைச் சாலையில் போட்டு
நெஞ்சில் மிதித்து
லத்தியாலடித்த
செய்தியறிந்து
என் கவிதை
மூர்க்கமாகிறது

அவரை மிதித்தவர்கள்
நன்மைகளை
மிதித்தார்கள்.

ஒமர் முக்தார்களே

உலகத்து மக்களே
உங்களுக்கிது சவால்.

ஆலைகள் கட்டி
சாலைகள் வைத்து
உலகின்
ஒவ்வொரு அடிக்கும்
வனப்பைத் தந்து
வளத்தைப் பரப்பிய
மானிடமே

உன் முகத்தில்
எச்சிலைத் துப்பி
உன் முதுகில்
தோட்டாக்கள் பதித்து

ஒருவன் ஓடுகிறான்
உலகத்து மக்களே
உங்களுக்கிது சவால்.

அவன் வைத்த
தீ
அவன் விதைத்த
குண்டு
லிபியாவிலல்ல
உலகத்தின் கூரையில்
ஒவ்வொரு வீட்டின்
வாசலில்
ஒவ்வொரு மனிதனின் இதயத்தில்.

நாடுகளென்ற
நந்தவனங்களில்
ஓடி விளையாடும்
மனிதர்களே!

தேடிப் பார்த்தால்
உங்கள்
ஒவ்வொரு நாட்டிற்கும்
ஒரு
ஓமர் முக்தார் உண்டு.

உங்கள்
பாரம்பர்யச் சொத்தாய்
வரலாற்றில் நீங்கள்
தங்கத்தைச் சொல்லவில்லை
வைரத்தைச் சொல்லவில்லை
உங்கள் தேசத்து
ஓமர் முக்தார்களையே
ஓங்கிச்சொல்கிறீர்கள்
உங்கள் ரத்தத்தைப்
பழுக்கவும்
சிவக்கவும் வைத்தவர்கள்
அவர்களே

ஆதிகாலம் முதல்
அண்மைக்காலம் வரை
அரக்கர்களின்
அந்திமக் காலம்
அருமையாகவோ
பெருமையாகவோ
அமைந்ததில்லை

எல்லா அரக்கர்களுக்கும்
எதிரில்
குல்லாப் போட்டோ
குல்லா வின்றியோ
ஒரு
ஒமர் முக்தார்
நின்றான்
வென்றான்.
இந்தப் பூமிக்கு
அவர்கள்
போலீஸ்காரர்களல்ல.
தாக்கவும்
காக்கவும் என்று
பேய்களை யாரும்
பூமியில் நியமிக்கவில்லை.

நாடு நாடாய்க்
கொள்ளை யடித்து
நாடு நாடாய்க்
கொலை செய்து
நாடு நாடாய்க்
குழம்ப விட்ட
பாதகர்கள் யாரும்
போலீஸ் வேடமிட
பூமி ஒன்றும்
அற்ப மேடையில்லை.

எழுங்கள்
ஓமர் முக்தார்களே
எழுங்கள்
அரக்கர்கள் வாங்கிய
அணிவகுப்பு
மரியாதையை
அமரிக்க மசோதாவுக்கும்
இங்கிலாந்து மசோதாவுக்கும்
அள்ளி அள்ளிக் கொடுக்க
எழுங்கள்!
ஓமர் முக்தார்களே!
எழுங்கள்!

86-ல் அமெரிக்கா லிபியாவின்மீது குண்டு போட்ட மறுநாள் எழுதியது

இது யார் விளையாட்டு?

ஒலிம்பிக்ஸ் விளையாட்டைவிட
உன்னத விளையாட்டு ஒன்றுண்டு
ஸ்வீடனில் அடிக்கும் பந்து
ஸ்விட்சர்லாந்தில் போய்விழும்.

இது ஒரு வித்தியாசமான
விளையாட்டென்பதால்
பரிசு வழங்குதல்
பகிரங்கமாக நடைபெறாது

ஜெயித்த ஆள் யாரென்று
சிலருக்குத்தான் தெரியும்
பரிசு என்ன வென்று
பங்கு பிரித்தவர்களுக்கு
மட்டும்தான் தெரியும்

இவ்வளவு பெரிய விளையாட்டியில்
இந்தியனை ஜெயிக்க
இகலோகம் பரலோகம்
எங்கும் ஆளில்லை.

இந்தியாவிற்குத் தங்கப்பதக்கம்
இல்லையென்று ஏன்
இந்தக் குதி குதிக்கிறார்கள்.

யாரோ ஒரு ஆள் ஓடி
பாரே நின்று பார்க்க
அவன் கழுத்தில் விழும்
தங்கப் பதக்கத்தில்
தலைவர்க்குப் பங்குண்டா?

தனக்கு வளையாத
தனக்கு விளையாத
ஆட்டம் எதையும்
அந்தத் தலைவர்கள்
விளையாட மாட்டார்கள்
விளையாட்டா என்ன?

சியோலில் நடந்தது பற்றி
நம்தலைவர்கள்
சிந்தித்து முடித்து விட்டார்கள்

ஒலிம்பிக் சட்டத்தில்
இந்தியாவிற் கென்று
சில சட்டத்திருத்தங்கள்
அவசர மசோதாக்கள்
அவசியம் வரவேண்டும்

இந்தியன் யார் ஓடி
ஜெயித்தாலும்
பதக்கம் பெறுவது
பதவியிலுள்ளவரே

ஜெயித்த ஆணோ பெண்ணோ
மைதான மத்தியில்
மந்திரி காலில் விழுந்து
மரியாதை பெற வேண்டும்

ஒவ்வொரு விளையாட்டையும்
ஒலிம்பிக் மைதானத்திலேயே
வைக்க அவசியமில்லை
சிலவற்றைச்
சட்ட மன்றத்திலேயே
நடத்தலாம்.

மைக் எறிதல்
டேபிள்-வெயிட் எறிதல்
மற்போர்
விற்போர்
கற்போர்- இப்படி
வேட்டியோடுதான் நின்று
விளையாட வேண்டுமென்றில்லை
வேறு மாதிரியும் நிற்க
விதம் விதமாய்
விதி வேண்டும்.

புதுப் புதுமாதிரி
போட்டிகள் வேண்டும்
நாமப் போட்டி ஒன்றை
நடத்தத் தயாரா?
எண்பது கோடி மக்களும்
உறங்கி எழுகையில்
ஓசைப்படாமல் இது
போடப்பட வேண்டும்.
நாமம் போடக்
குழைத்துக் குழைத்துச்
சிவந்த கரத்தை - நாங்கள்
கொடுத்துக் கொடுத்துச்
சிவந்த கரமென்போம்.

பூச்சுற்றும் போட்டி உண்டா
இதை யெல்லாம் இன்று நாங்கள்
நூதனமாய்ச் செய்கிறோம்
ஒவ்வொரு முறையும்
பூப்பறித்து வந்து
காதில் சுற்றி விட
நேரமாகிறது
தவிரவும் ஓயாமல் பறிப்பதால்
நந்தவனங்கள் நாடு முழுதும்
மூளிகளாய்ப் போயின
அதனால்
ஒவ்வொருத்தன் காதிலும்
மண்ணடைத்துச் செடி நட்டுப்
பூப் பூக்க வைத்த தேசமிது.
நூற்றறுபது கோடிக் காதுகளும்
இன்று
தொங்கும் பூந்தோட்டங்கள்
தீ வைத்து விளையாடும் ஆட்டம்
என்ற பேர்பெற்ற ஆட்டம்பற்றி
உலகத்து மக்களே
உங்களுக்குத் தெரியுமா?

பிணத்தோடு
பெண்ணையும் போட்டு எரிப்பது
எரிப்பதைப் பார்க்க-
அந்தப் பெண்
துடிப்பதை பார்க்க
ஏராளக் கூட்டம்
இந்த விளையாட்டெல்லாம்
இல்லை உங்கள் நாட்டிலென்று
தங்கப் பதக்கம் பெற்ற
நாடுகளே
தலைகுனிந்து நில்லுங்கள்.
எல்லா விளையாட்டுக்களிலும்
உயர்ந்த விளையாட்டுக்களிலும்
உயர்ந்த விளையாட்டு ஒன்று
எங்கள் தேசத்திலுண்டு

இது ஜாதி விளையாட்டு
காலங் காலமாய்
கிராமங் கிராமமாய்
நாங்கள் இதைக்
கருத்தோடு ஆடுவோம்

சூடான விளையாட்டிது
குடிசைகள் கொழுந்து விட்டெரிய
கும்பல் கும்பலாய்
மரங்களை வெட்டி
மாதரை வெட்டிச்
சிறு குழந்தையை வெட்டிக்
குதூகலிக்கும் ஆட்டம்
ஓடி ஜெயித்து
உலகக் கோப்பை
வாங்குவதெல்லாம்
உண்மையான விளையாட்டா?
சமுதாயப் பயனோடு
எங்கள் விளையாட்டுக்கள்
சார்ந்து வருகின்றன.

இன்னொரு போட்டி
நடத்தினாலும்
இந்தியாதான் ஜெயிக்கும்
துரிதகதியில்
தூக்கி எறியும் போட்டி.

மத்திய அமைச்சரை
மாநிலத்திற்கெறிந்து
மறுபடி வேகமாய்
மத்தியில் பிடித்து
வந்த ஆளை வடிவம் மாற்றி
இந்தா பிடி இவர்
இனிமேல் கவர்னர்
என்றொரு ஆட்டம்

எந்த நாட்டிற்கும் நமக்கதில்
எதிர்வரக் கூரில்லை.
எங்கள் கொள்கை

சோசலிசக் கொள்கை
தங்கப் பதக்க விஷயத்தில்
நாங்கள் ஒரு
தரமான கொள்கையோடு
நிற்கிறோம்
இருக்கிற பதக்கங்கள்
இரு நூறென்பதால்
யாருக்கு எத்தனையென்று
எல்லா நாடுகளும்
கூடிப்பேசிக்
கூறு போட வேண்டும்

ஓடிக் குதிக்கிற ஆள்களா
இதைத் தீர்மானிப்பது?
ஒவ்வொரு நாட்டுப்
பிரதமரும்
தீர்மானிக்க வேண்டும்.
இந்தியாவில் நாங்கள்
அப்படி எத்தனை
பிரச்சினைகளைப்
பேசித் தீர்த்திருக்கிறோம்.

பஞ்சாப் விவகாரம்
பாபர் மசூதிப் பிரச்சினை
தெலுங்கு கங்காத் திட்டம்
தெளியாத கங்கைத் திட்டம்
வன்னியர் பிரச்சினை
அஸ்ஸாமில்
அன்னியர் பிரச்சினை
இப்படி எத்தனையோ?

ஆனால் பாருங்கள்
ரஷ்யாவும் சீனாவும்
ஜெர்மனியும் செக் நாடும்
சோசலிச நாடுகளாம்
தங்கப் பதக்கங்களைத்
தாங்களே அள்ளிச்

சென்ற நாடுகள்
சோசலிச நாடுகளா?

சரி.
எத்தனை விளையாட்டுக்கள்
சொன்னேன்.
ஆட்டம் போட இவர்களுக்கு
ஆதர்சம் எது?

அரசர்கள்
ஆண்டவர்களுக்குச் சமம்.
‘இறைவன்’
இந்தத் தேசம் பூராவிலும்
விளையாடாத விளையாட்டா?
அதனால்
என்ன நடந்தாலும்
‘எல்லாம் அவன்
திருவிளையாடல்’
என்று சொல்லி
இறும்பூதெய்துகிறோம்.

இந்த விளையாட்டுகள்
இன்னும் நடக்க
என்ன காரணம்?

மகாத்மா மக்களுக்குக்
காட்டிய வழி ஒன்றுண்டு.
அவர்
மூன்று பொம்மைகளை
இந்திய மக்களுக்கு
இதோபதேசம் செய்ய
அனுப்பி வைத்தார்
மூன்றும் குரங்குகள்.

கண்முன்னே நடக்கும்
தீமைகளின் நடுவில்
கண்பொத்திக்

கொண்டது ஒன்று
காது பொத்தி
அமர்ந்தது ஒன்று.
மீதியுள்ள வாயும்
கதறியழவில்லை
கண்டிக்க எழ வில்லை
தீயவை நடக்கையில்
திருவிளையாடல் பெருகுகையில்
மக்களக்குக் காட்டிய
வழி இதுதான்

நாம்
நான்கு பொம்மைகள்
தருவோம்

ஒன்று தீயதைப் பார்க்கும்
கண்கள் தீயாய்ச் சிவக்கும்.

ஒன்று தீயதைக் கேட்கும்
காது சீறிப் புடைக்கும்
தீயதைக் கண்டித்து ஒன்று
தீவிரமாய்ப் பேசும்
நான்காவது பொம்மை
தீயதைப் பிடிக்கும்
- பொசுக்கும்

ஆசிரியத் தியாகிகளே

உங்கள் மாணவர்கள்
தங்களுக்குள்
க்ளாஸ் மேட்கள்

நீங்கள் சந்திக்கும்
அநேக நண்பர்கள்
இன்று உங்கள் பழைய
ஜெயில் மேட்கள்

அந்தச் சமயத்தில்
புலியின் பார்வைக்கு
மான்களின் கண்ணீர்
தெரியவில்லை
மாமிச வாசனைதான்
தெரிந்தது.

பாடங்கள் முழுதும்
பட்டிகளில் அடைக்கப்பட்டன.
ஓடங்களுக்கு
ஓட்டை போட்டார்கள்.

அரசியல் சட்டத்தின்
அடிப்படை உரிமைகள்
ஆட்சியாளர்களின்
வேஷ்டிக்கும்
நாற்காலிக்கும் இடையில்
வெட்கமின்றி நசுங்கின.

சிறைக் கம்பிகளின் பின்னால்
செம்பு திருடியவனோடு
சிலை திருடியவனோடு
கொலை புரிந்தவனோடு
கொள்ளையடித்தவனோடு
அல்லும் பகலும்
அறிவை
அள்ளிக் கொடுத்த
வள்ளல்களும் நின்றீர்கள்.

எந்தக் கை
எழுத்தறிவித்ததோ
அந்தக் கை
பட்டைச் சோற்றுக்குத்
தட்டை நீட்டியது
ஒரு ஆபாசமான கலாச்சாரம்
அரங்கேறியது அப்போது.

நீங்கள் சத்தம் போடுவதை
நிறுத்தி விட்டு

ஒரு யுத்தம் நடத்தத்
துவங்கிய போது
ஆட்சிச் சக்கரத்தின்
ஆரக்கால்களில்
அடிவிழத் தொடங்கியது
நீங்கள் அது வரை
கற்ற பாடங்களையே
கற்றுக் கொடுத்தீர்கள்
பெற்ற அனுபவங்களை

இப்போது
பேசப் போகிறீர்கள்
உள்ளே
குடிக்க நீரின்றி
சுவாசிக்கக் காற்றின்றி
இதை விசாரிக்க அரசின்றி
உங்களில் சிலர்
மரணமடைந்தார்கள்.

இந்தப்போரில்
கலக்கா விட்டால்
அவர்கள் இன்னும்
உயிரோடிருப்பார்கள்
மனைவியோடு பேசி
மக்களோடு விளையாடி
இந்த உலகில்
இன்னும் பூத்துக் கொண்டிருக்கும்
பூக்களை ரசித்து
இன்னும் எழும்பும்
கட்டிடங்கள் பார்த்து
இன்னும் மாறும்
அரசியல் பேசி
நம்மோடு டீக்கடை வந்து
பஸ்ஸாண்டில் பேசி
கடலைக்காய் உடைத்து
வாழ்ந்திருப்பார்கள்.

போர்க்களத்தில் ஒப்பாரி இல்லை
சரிதான்
நான் இந்த உயிர்களைத்
தொட்டியிலிட்டு
முளைப்பாரி வைக்கிறேன்

இந்த உயிர்களைப் பறித்த
பாவத்திற்கு
இந்த உலகம் உள்ளவரை
அவர்கள்
பதில் சொல்லியாகவேண்டும்
இனி
பாடநூலில்
இதுவும் ஒரு முக்கிய பாடம்
மரணத்தைத் தொட்ட
இனிய தோழர்கள்
உங்கள் கல்லறைகளின் கீழே
உங்கள் உடல்கள் இல்லை
ஒரு அராஜகம் உண்டு
உங்கள் கனவுகளை
இப்போது நாங்கள்
சுமக்கிறோம்.
இந்த நெடிய பாதையில்
நம்பிக்கையோடு
போராடுகிறோம்
எங்கள் அருமைத்
தோழர்களே
இலக்கை அடைந்து விட்டால்
உங்கள் கல்லறைகளுக்கு
மறுபடியும் வருவோம்
ஒரு சொட்டுக் கண்ணீரோடும்
ஒரு கொத்துப் பூ வோடும்
வருவோம்

உங்களையும் வணங்கித்தான்
ஒரு புதிய இந்தியாவை
உருவாக்க
அடுத்த அடி வைப்போம்.

■ ■ ■

2000 ஆண்டுகளுக்கும் மேலான தொடர்ச்சியான கவிதை வரலாறு கொண்ட தமிழ் மொழியில், எழுதத் தலைப்படும் எல்லோரும் கவிஞராக முயற்சிக்கும் ஒரு சூழலில் தனித்துவம் மிக்கதொரு கவிக்குரல் கந்தர்வன். ஆழமான அரசியல் கவிதைகளும் அழகியலோடு படைக்கப்படுவது சாத்தியம் என்பதை நிரூபித்தவர். கிழிசல்கள், சிறைகள், மீசைகள் உள்ளிட்ட கவிதைத் தொகுதிகளின் மொத்த தொகுப்பே இந்நூல்.

நாளும் கிழமையும்
நலிந்தோர்க்கில்லை
ஞாயிற்றுக் கிழமையும்
பெண்களுக்கில்லை

என்பது போன்ற எளிமையும், நேர்த்தன்மையும், கச்சிதமும் பொருந்திய கவிதை வரிகள் நிரம்பிக் கிடக்கும் தொகுப்பு. 13 ஆண்டுகளுக்குப் பிறகு இப்போது மீண்டும் வருகிறது. ஆனால் புதிதாய் வரும் ஒரு முதல் தொகுதியின் வசீகரத்தோடு இருப்பது கந்தர்வனின் கவித்திறனைக் காட்டுகிறது.

0017417
thamizhbooks.com
பாரதி புத்தகாலயம்
புதிய புத்தகம் பேசுது

₹ 130/-
9 789384 421656 01